பக்கங்கள்: பதினான்கு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 7.00

சுடர்:16 வள்ளுவர் ஆண்டு 2032 கார்த்திகை 06 புதன்கிழமை (21-11-2001) UTHAYAN - A Lively National Tamil Daily கதிர்:360

# பொலீஸாரின் ஷெல் தாக்குதலில் ஏறாவூரில் 4 பொதுமக்கள் பலி!

## பத்துப் பேர் படுகாயம்

**மட்டக்களப்பு,நவம்பர்21**

**மட்டக்களப்பு மாவட்டம், ஏறாவூர், செங்கலடி பொலீஸ் காவல் நிலையங்களில் இருந்து நேற்றிரவு 8.30 மணியளவில் குடியிருப்புப் பகுதிகளை நோக்கி திடீரென நடத்தப்பட்ட கண்மூடித்தனமான ஷெல் தாக்குதல்களில் நான்கு பொதுமக்கள் உயிரிழந்தனர். 6 பெண்கள் உட்பட 10 பேர் படுகாயமடைந்தனர்.**

ஷெல் குண்டுகள் ஏறாவூர் நான்காம், ஐந்தாம் குறிச்சிப் பகுதிகளில் அடுத்தடுத்து வீழ்ந்து வெடித்தன. இதனால் வீடுகள் சில சேதமடைந்தன.

அப்பகுதிக்கு அண்மையில் உள்ள காவல் நிலையங்களில் இருந்து - இராணுவப் பயிற்சி பெற்ற - பொலீஸார் இந்த ஷெல் தாக்குதல்களை நடத்தியதாகக் கூறப்படுகின்றது.

இரு வீடுகளின் மீது ஷெல்கள் வீழ்ந்து வெடித்ததால் இருவர் உடல சிதறி அந்த இடத்திலேயே பலியாகின். உயிரிழந்த மற்றைய இரு சடலங்களும் மட்டக்களப்பு ஆஸ்பத்திரிக்கு எடுத்துச் செல்லப்பட்டன.

(14 ஆம் பக்கம் பார்க்க)

## ஆர்ப்பாட்டம் செய்த வத்தளை மீனவர் மீது பொலீஸ் துப்பாக்கிச் சூடு; 3 பேர் உயிரிழப்பு!

### காயமடைந்த 18 பேரில் ஐவர் நிலை கவலைக்கிடம்

கொழும்பு,நவ.21

வத்தளை, ஹெந்தளையில் நேற்றுப் பிற்பகல் மீனவர்கள் நடத்திய ஆர்ப்பாட்டத்தின் போது பொலீஸார் மேற்கொண்ட துப்பாக்கிப் பிரயோகத்தில் இருவர் அந்த இடத்திலேயே துடிதுடித்து மரணமாகினர். மற்றொருவர் படுகாயமடைந்த நிலையில், ஆஸ்பத்திரிக்கு எடுத்துச் செல்லப்பட்டு அங்கு மரணமானார்.

இந்தச் சூட்டுச் சம்பவத்தில் மேலும் 18பேர் காயமடைந்திருக்கின்றனர் என்றும் இவர்களில் ஐவர் ஆபத்தான நிலையில் ... ஆஸ்பத்திரியில் சிகிச்சை பெற்று வருகின்றனர் என்றும் தெரிவிக்கப்பட்டது.

இச்சம்பவம் குறித்து தெரியவருவதாவது:-

வீதி ஒன்றை அமைப்பதற்காக பள்ளக் காணியை நிரப்ப கடலில் பெரிய இயந்திர சாதனங்கள் பொருததப்பட்டு மணல் அள்ளி எடுக்கப்பட்டு வந்தது. இதை அந்தப் பகுதி மீனவர்கள் எதிர்த்தனர்.

கடலில் மண் அள்ளினால், மீன் வளம் பாதிக்கப்படும் என்று அவர்கள் அதற்கு கடும் ஆட்சேபம் தெரிவித்தனர். ஆனால் மீனவர்களின் கருத்தை எவரும் ஏற்க மறுத்துவிட்டனர். மண் அள்ளி பள்ளம் நிரவும் பணி நீடித்தது.

இதனால் ஆத்திரமுற்ற மீனவ மக்கள் நேற்றுப் பிற்பகல் ஒன்று கூடி ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். அங்கு விரைந்து வந்த பொலீஸார் ஆர்ப்பாட்டக்காரர்களைக் கலைந்து செல்லும்படி கட்டளையிட்டனர்.

ஆர்ப்பாட்டக்காரர்கள் மண் அள்ளும் இயந்திர குழாய்களைத் தகர்க்க முறபட்டனர். மீண்டும் பொலீஸார் எச்சரித்தனர் பயன் இல்லை. அதைத் தொடர்ந்து இடம்பெற்ற சரமாரியான துப்பாக்கி

(14 ஆம் பக்கம் பார்க்க)

## எக்கட்சி ஆட்சிக்கு வந்தாலும் ஈ.பி.டி.பி. அதில் இணையும்!

### அமைச்சர் டக்ளஸ் தெரிவிப்பு

யாழ்ப்பாணம்,நவ.21

நடைபெறவுள்ள பொதுத் தேர்தலின் பின்பு எந்தக் கட்சி ஆட்சிக்கு வந்தாலும் ஈபிடிபி. அந்தக்கட்சியுடன் இணையும். ஆட்சியமைக்கும் கட்சி எதுவாக இருந்தாலும் எமக்கும் அழைப்பு விடுக்கும். ஐ.தே.கட்சி ஆட்சியமைத்தாலும் நாம் அக்கட்சியுடன் இணைவோம்.

- இவ்வாறு ஸ்ரான்லி வீதியில் உள்ள தமது அலுவலகத்தில் நேற்று நடத்திய பத்திரிகையாளர் மாநாட்டின போது அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது :-

எம்மைப் பொறுத்தவரையில் அரசியல் பலம் என்பது இருவகையானது. ஒன்று ஆயுதபலம். மற்றையது ஜனநாயக பலம். ஈ.பி.டி.பியைப் பொறுத்தவரையில் ஆயுதம் என்பது சாத்தியமற்றது. ஜனநாயக வழியே சாத்தியமானது. ஜனநாயக வழியில் நாம் தேர்தலைச் சந்தித்து வெற்றி பெற்று எமது மக்களுக்குச் சேவை செய்கிறோம். ஆயினும் எமக்கு அரசியல் பலம் போதாது. நடைபெறவுள்ள தேர்தலில் பெரும் அரசியல் பலத்தை நாம் பெறுவோம். அதன் மூலம் எமது மக்களுக்கும் இனத்துக்கும் பல

(13 ஆம் பக்கம் பார்க்க)



ஈ.பி.டி.பி. யாழ்.அலுவலகத்தில் நேற்று நடைபெற்ற பத்திரிகையாளர் மாநாட்டில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவும், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் கே. வி. குகேந்திரனும் காணப்படுகின்றனர்.

## திருமலை அல்லை - கந்தளாயில் படையினர் மீது தாக்குதல்!

திருகோணமலை,நவ.21

திருகோணமலை நகருக்கு தெற்கே 25 மைல் தொலைவில் உள்ள கல்லாறுப் பகுதியில், அல்லை - கந்தளாய வீதியில் நேற்றுக் காலை 8.30 மணியளவில் ரோந்துப் பணியில் ஈடுபட்டிருந்த படையினர் மீது விடுதலைப் புலிகள் நடத்திய தாக்குதலில் சிப்பாய் ஒருவர் உயிரிழந்தார்; மற்றொரு சிப்பாய் காயமடைந்தார்.

பின்னர் இருதரப்புக்கும் இடையில் இடம்பெற்ற துப்பாக்கிச் சமரில் இடையில் சிக்கி ஐந்து வயதான தமிழ்ச் சிறுமி ஒருவர் காயமடைந்தார்.

இத்தாக்குதலை அடுத்து மங்கி பிரிட்ஜ் முகாமில் இருந்து மூதூரில் புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதியை நோக்கி நேற்றுப் பிற்பகல் 1.30 மணி முதல் ஷெல் தாக்குதல் நடத்தப்பட்டது. சேத விவரம் தெரியவரவில்லை. சர்ச்சைக்குரிய - திட்டமிட்ட - சிங்களக் குடியேற்றங்கள் இடம்பெற்று வரும் அல்லை - கந்தளாய் வீதியிலேயே நேற்று தாக்குதல் நடத்தப்பட்டிருப்பது குறிப்பிடத்தக்கது.

## புனாவையில் பொலீஸ் ஜீப் கிளைமோரில் சிதறியது!

### சப் இன்ஸ்பெக்டரும் 2பொலீஸாரும் பலி

கொழும்பு,நவ.21

வவுனியா - மதவாச்சி வீதியில் வவுனியாவுக்குத் தெற்கே 12கிலோ மீற்றர் தொலைவில் புனாவை கடற்படை முகாமுக்கு அருகில் நேற்றுக் காலை 9.45 மணியளவில் பொலீஸ் ஜீப் ஒன்றின் மீது கிளைமோர் தாக்குதல நடத்தப்பட்டது. அதில் ஜீப் சிதறியது. அதிலிருந்த சப் இன்ஸ்பெக்டர் ஒருவர் உட்பட மூன்று பொலீஸார் உயிரிழந்தனர்.

வவுனியாவிலிருந்து அநுராதபுரம் சென்று கொண்டிருந்த ஜீப்பே திரும்பும் வழியில் கிளைமோரில் சிக்கியது.

வவுனியா பொலீஸ் வாகனங்கள்

(14 ஆம் பக்கம் பார்க்க)

### வரதர் அணியின் மற்றோர் உறுப்பினர் சுட்டுக்கொலை

மட்டக்களப்பு,நவ.21

செங்கலடியில் நேற்றுக் காலை 8.30 மணியளவில் புலிகளின் பிஸ்டல் குழுவினரால் ஈ.பி.ஆர்.எல். எவ். (வரதர்அணி) உறுப்பினர் ஒருவர் சுட்டுக் கொல்லப்பட்டார்.

முத்துசாமி அனுசாமூர்த்தி எனற இவர் செங்கலடி இராணுவ முகாமில இருந்து வீடு நோக்கிச் சென்று கொண்டிருக்கையில் - சிவதொண்டன் நிலையத்தின் முன்னால் வைத்து - சுடப்பட்டார்.

1994 ஆம் ஆண்டு நடைபெற்ற பொதுத் தேர்தலில் இவர் ரெலோ வேட்பாளராக போட்டியிட்டவர் என்று தெரிவிக்கப்பட்டது. (க)

## தீவகத்தில் வாக்களிப்பு முகவர் மிரட்டப்பட்டதாக முறைப்பாடு

நேற்று தபால் மூல வாக்களிப்பு இடம்பெற்ற சமயம் ஊர்காவற்றுறை பிரதேச சபை அலுவலகத்தில் ஐ.தே.கட்சியின் வாக்களிப்பு முகவராகப் பணியாற்றச் சென்ற தம்மை அலுவலகத்துக்குள் ஆயுதங்களுடன் புகுந்த ஈ.பி.டி.பியின் முக்கிய பிரமுகர்கள் சிலர் அச்சுறுத்தியதாக, முகவராகக் கடமையாற்றச் சென்ற சிவராஜா ஜெயரூபன் (வயது 21) என்பவர் தெரிவித்தார்.

இது குறித்து யாழ்பொலீஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது.

ஐ.தே.கட்சியின் யாழ்.மாவட்ட முதன்மை வேட்பாளர் தி.மகேஸ்வரன் நேற்று நடத்திய செய்தியாளர் மாநாட்டில் வைத்து இந்தத் தேர்தல் முகவர் தமக்கு ஏற்பட்ட அனுபவத்தைக் கூறினார்.

அடுத்தமுறை தீவகத்துக்கு வருவதானால் வீட்டுக்குச் சொல்லி விட்டு, பிரேதப் பெட்டியையும் தயார் செய்து வைத்துவிட்டு வரும்படி, தாம் எச்சரிக்கப்பட்டதாகவும் அவர் கூறினார்.

இதற்கிடையில் -

நேற்று மானிப்பாய் பகுதியில் பிரசார நடவடிக்கையில் ஈடுபட்டிருந்த ஐ.தே.கட்சி ஆதரவாளர்கள் மூவர் மாலை 5 மணியளவில் கடத்திச் செல்லப்பட்டிருப்பதாக ஒரு தகவல் தெரிய வந்தது. (உ)



இலங்கை வாழ் தமிழ் பேசும் மக்களின் ஒரே தெரிவு

மத்தியில் கூட்டாட்சியுடன், மாநிலத்தில் சுயாட்சி காண....

ஐக்கிய இலங்கைக்குள் சமாதான சகவாழ்வை நிலை நாட்ட....

வீணையே உங்கள் தெரிவு! சேவையே எங்கள் இலக்கு!

ஈழமக்கள் ஜனநாயகக் கட்சி (ஈ.பி.டி.பி.)



X

# ஈ.பி.டி.பியின் தேர்தல் பிரசாரத்துக்கு துணைபோகும் அரச ஊழியரின் நியமனம் அடுத்த ஆட்சியில் ரத்து!

## ஐ.தே.க.வேட்பாளர் மகேஸ்வரன் கூறுகின்றார்

யாழ்ப்பாணம்,நவ.21

யாழ்.குடாநாட்டில் ஈ.பி.டி.பியின் தேர்தல் பிரசார நடவடிக்கைகளுக்கு துணை போகின்ற அரச ஊழியர்களின நியமனங்கள் யாவும் ஐ.தே.கட்சியின் ஆட்சியில் ரத்துச் செய்யப்படும்.

- இவ்வாறு ஐ.தே.கட்சியின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் தி. மகேஸ்வரன் நேற்று தாம் நடத்திய பத்திரிகையாளர் மாநாட்டில் தெரிவித்தார்.

அவரின் பலாலி வீதி இல்லத்தில் நடைபெற்ற இந்த மாநாட்டில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

ஈ.பி.டி.பி. தனது தேர்தல் பிரசார நடவடிக்கைகளுக்கு சமுர்த்தி உத்தியோகத்தர்கள், அபிவிருத்தித் தொண்டர்கள், தொண்டர் ஆசிரியர்கள், முன்பள்ளி ஆசிரியர்கள், பகுதிநேர ஆங்கில ஆசிரியர்கள், தையல் பயிற்சியாளர்கள் எனப் பலரையும் ஈடுபடுத்தி வருகிறது.

அமைச்சுப் பணத்தில் வேதனம் கொடுத்து அதற்குப் பதிலாக தனது அரசியல் பணிகளுக்கு வேலை வாங்குவது முறைகேடான விடயமாகும். ஆள்களுக்கு அரச ஊதியம் வழங்கி, கட்சிப் பிரசாரப் பணிக்கு அவர்களைப் பயன்படுத்துவது பெரும் அதிகாரத் துஷ்பிரயோகம் ஆகும்.

இத்தகைய துஷ்பிரயோகங்கள், அதில் ஈடுபடுவோர் ஆகியோர் பற்றி விவரங்களைத் திரட்டி பதிவுகளைச் செய்வதற்காக எமது கட்சியினால் தகவல் சேகரிப்பு நிலையமொன்று ஸ்ரான்லி வீதியில் அமைக்கப்பட்டுள்ளது. நேற்றுத் தொடக்கம் இவ்வாறான பிரசார நடவடிக்கையில் ஈடுபட்டு வருவோர் கண்காணிக்கப்பட்டு அவர்களின் விவரங்கள் சேகரிக்கப்பட்டு வருகின்றன. தொடர்ந்தும் பிரசார நடவடிக்கைகளில் ஈடுபட்டு வந்தால் தேர்தலின் பின்னர் - எமது ஆட்சியில் - அவர்களின் நியமனங்கள் ரத்துச் செய்யப்படும்.

பொதுமக்கள் இது பற்றிய விவரங்களை எமது தகவல் சேகரிப்பு நிலையத்துக்குத் தெரியப்படுத்தலாம்.

மேற்குறிப்பிட்ட சகல ஊழியர்களும் எதிர்வரும் பொதுத் தேர்தலில் தலா 10 வாக்குகள் போட வேண்டுமென்று ஈ.பி.டி.பியினால் நிர்ப்பந்தம் செய்யப்பட்டு வருவதாகவும், இவர்களைத் தீவுப்பகுதிக்கு அழைத்துச் செல்ல ஏற்பாடுகள் நடைபெற்று வருவதாகவும் தகவல்கள் கிடைத்துள்ளன. இதன் சூத்திரதாரியாக ஊர்காவற்றுறை பிரதேசசபைத் தலைவா மதனராஜா விளங்குகிறார். ஆனால் இந்தத் தேர்தலில் எந்தவொரு கட்சியும் கள்ள வாக்குப் போடுவதற்கு ஐ.தே.கட்சி அனுமதிக்காது.

### சந்நிதியில் ஒன்று கூடுங்கள்

பொதுத் தேர்தலன்று ஈ.பி.டி.பியின் வற்புறுத்தலின் பேரில் கள்ள வாக்குப் போடும் நிர்ப்பந்தத்திலிருந்து தங்களை விடுவித்துக் கொள்வதற்காக, யாழ் மாவட்டத்தில் உள்ள அனைத்து சமுர்த்தி உத்தியோகத்தர்கள், அபிவிருத்தித் தொண்டர்கள், முன்பள்ளி ஆசிரியர்கள், பகுதிநேர ஆங்கில ஆசிரியர்கள் அனைவரையும் தேர்தலுக்கு முதல்நாள், டிசெம்பர் 4 ஆம் திகதி, பிற்பகல் 3.00 மணிக்கு தொண்டமனாறு செல்லச்சந்நிதி ஆலயத்துக்கு வருகை தருமாறு கோருகின்றேன்.

அவர்கள் எந்தத் தேர்தல் பணியிலும் ஈடுபடுத்தப்படமாட்டார்கள்; ஐ.தே. கட்சிக்கு வாக்களிக்குமாறு கூட நான அவர்களைக் கோரமாட்டேன்.

ஆலயத்தில் வைத்து அவர்களது சகல விவரங்களும் பதிவு செய்யப்படும். அடுத்த நாள் - வாக்களிப்பு தினம் மாலை - வாக்களிப்பு முடிந்த பின்னர் அவர்கள் தத்தமது வீடுகளுக்குத் திரும்பலாம். அதுவரை அவர்களுக்குரிய சகல வசதிகளும் செய்து கொடுககப்படும்.

இப்படி வாக்களிப்பு நேரம் முழுவதும் ஆலயத்தில் பாதுகாப்பாக இருப்பதன் மூலம் இந்த ஊழியர்கள், ஈ.பி.டி.பியினரின் வாக்களிப்பு மோசடிக்கு துணைபோகும் நிர்ப்பந்தத்தைத் தவிர்த்துக் கொள்ளலாம். அவர்களது வேலை வாய்ப்பும் அடுத்த ஐதேகட்சியில் உறுதிப்படுத்தப்படும்.

இவ்வாறு மோசடிகள் இடம்பெறாது தடுப்பதற்கு தமிழர் விடுதலைக் கூட்டணியும் ஒத்தாசை வழங்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கின்றேன்.

### கூட்டணியின் அசமந்தப் போக்கு

நேற்றைய தபால் மூல வாக்களிப்பின் போது தமிழர் விடுதலைக் கூட்டணி தனது முகவர்களை நிறுத்தத் தவறிவிட்டது. தேர்தலில் வெற்றி பெற வேண்டும் என்ற ஆர்வம் - முனைப்பு - இருக்கின்ற அளவுக்கு மோசடிகளைத் தடுக்க வேண்டும் என்ற எண்ணம் கூட்டணியிடம் இருப்பதாகத் தெரியவில்லை. இந்தப் போககினால் யாழ்.மாவட்டத்தில் மீண்டும் ஒரு தடவை ஆயுதக் குழுக்கள் வெற்றி பெறுவதற்கு கூட்டணியின் ஒத்தாசை வழங்கியதாகி விடும்.

### சுரேஷ் மீது குற்றச்சாட்டு

கூட்டமைப்பில் போட்டியிடுகின்ற சுரேஷ் பிரேமச்சந்திரன் அதன் கட்டுப்பாட்டை மீறிக் கொண்டு எமது கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவுடன் அடிக்கடி தொடர்பு கொள்கின்றார். ஆனால் என்னையும் எமது கட்சியையும் தூற்றுகிறார்.

கடந்த செப்ரெம்பர் மாதம் 29 ஆம் திகதி பன்னாலை விளான் பகுதியில் பாழடைந்த வீடொன்றில் சட்டவிரோத ஆயுதங்கள் இருப்பதாக 513 ஆவது படையணி இராணுவத்துக்கு சுரேஷ் பிரேமச்சந்திரன் தகவல் தெரிவித்ததுடன் அவற்றை அடையாளம் காட்டி எடுக்க உதவினார். இவை இந்திய அமைதிப்படையின் காலத்தில் புலிகளுக்கும் புலிகளின் ஆதரவாளர்களுக்கும் எதிராகப் பயன்படுத்துவதற்கு தாம் வைத்திருந்ததாக இராணுவத்தினரிடம் தெரிவித்ததுடன் அவற

**தேர்தல் களம் X**

றில் தமது பாதுகாப்புக்கு ஓரிரு ஆயுதங்களை தருமாறும் கேட்டுள்ளார்.

தேர்தலுக்கு பின்பு மீண்டும் ஈ.பி. ஆர்.எல்.எவ். இயக்கத்தை உருவாக்குவதன் மூலம் ஆயுத கலாசாரத்துக்கு அவர் தூபமிடுகிறார். இவ்வாறானவர்களை மக்கள் அடையாளம் காண வேண்டும். கடந்த 7 வருட காலமாகக் குடாநாட்டில் ஆயுத கலாசாரத்தை இல்லாதொழிக்க முயன்று வரும் வேளையில் கூட்டமைப்பு அதற்கு மீண்டும் வழியமைத்துக் கொடுத்துவிட்டது.

பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவுத் திட்டத்தின் மூலம் எனக்கு ஒதுககப்பட்ட 35 லட்சம் ரூபா நிதி யாழ். செயலகத்தில் உள்ளது. அதை அமைச்சரோ அல்லது அரசாங்க அதிபரோ வேறு தேவைகளுக்குப் பயன்படுத்த முடியாது. ஐ.தே.கட்சி ஆட்சி அமைத்தவுடன் அந்தப் பணத்தை எடுத்து வேலைத்திட்டங்களை மேற்கொள்வேன். இப்பணத்தைப் பெற்றுக் கொள்வதற்கு அமைச்சர் முயற்சிகள் மேற்கொண்டு வருவதாகவும் அப்பணத்தை எடுத்து விட்டதாகவும் தகவல்கள் கிடைத்துள்ளன. அவ்வாறு இந்தப் பணம் எடுக்கப்பட்டிருந்தால் அதற்கு அரசாங்க அதிபரே பொறுப்பு இது பற்றித் திட்ட அமுலாக்கல் அமைச்சுக்கும் தெரியப்படுத்தியுள்ளேன்.

### ஐ.தே.க.ஆட்சியில்.....

ஐ.தே.கட்சி ஆட்சி பீடம் ஏறியதும் - 45 தினங்களுக்குள் - தரை வழிப்பாதை திறக்கப்படும்; தென்மராட்சி மக்கள் மீண்டும் தமது சொந்த இடங்களில் குடியமர்த்தப்படுவார்கள்; இவர்களின் வீடுகள் அரச நிதியின் மூலம் புனரமைக்கப்படும்; விடுதலைப் புலிகளுடன் பேச்சு ஆரம்பிக்கப்படும்; மீன் பிடித் தடை நீக்கப்படும்; வலி. வடக்கு மக்கள் மீளக் குடியேற்றப்படுவர்; 20 தினங்களுக்குள் யாழ். நகரப் பகுதியில் உள்ள இராணுவ முகாம்கள் மற்றும் ஆயுதக் குழுக்களில் முகாம்கள் யாவும் அப்புறப்படுத்தப்படும்; உள்ளூராட்சிச் சபைகள் கலைக்கப்பட்டுப் புதிய தேர்தல் நடைபெறும்; பொருளாதாரத் தடை நீக்கம், போக்குவரத்து பாதுகாப்பு அனுமதி நீக்கம் என்பன நடைமுறைக்கு வரும்.

கடந்த தேர்தலில் நான் வெற்றியீட்டிய பின்பு எமது மக்களுக்குச் செய்தவற்றை எடை போட்டுப் பார்த்து நான் செய்தது சரியென்றால் மக்கள் எனக்கு மீண்டும் வாக்களிக்கலாம்.



தொலைபேசி மூலம் ஈ.பி.டி.பியினரால் எனக்கு மிரட்டல்கள் விடுக்கப்படுகின்றன. அதற்காக நான் அடிபணியப் போவதுமில்லை. எனது சேவையிலிருந்து பின்னிற்கப் போவதுமில்லை.

எனக்குச் சொந்தமான யாழ். ஸ்ரான்லி வீதியில் உள்ள மகாலஷ்மி ஸ்ரோர்ஸை தீயிட்டுக் கொளுத்தப் போவதாக ஈ.பி.டி.பியினர் அச்சுறுத்தல் விடுத்துள்ளனர்.

இது தொடர்பாக நேற்று யாழ். பொலீஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளேன். நேரில் சென்று வாக்கு மூலம் அளித்துள்ளேன்.

எனது நிறுவனத்தின் பெயரில் உடனடியாக தீ விபத்துக் காப்புறுதி செய்யவுள்ளேன் - என்று அவர் மேலும் தெரிவித்தார். (உ-10-ரி)

# இருவேறு சம்பவங்களில் புலிகள் 7 பேர் உயிரிழப்பு

சாவகச்சேரி, தச்சன்தோப்புப் பகுதியில் கடந்த 11ஆம் திகதி இடம்பெற்ற எதிர்பாராத மோதல் ஒன்றில் தமது தரப்பில் 3 போராளிகள் களப்பலியானதாக புலிகள் அறிவித்துள்ளனர்.

☆ லெப்கேணல் சிவநேசன் (செல்லத்துரை புருஷோத்மன் - யாழ்ப்பாணம்)

☆ கப்டன் பருதியப்பன் (செல்லையா சிவகுமார் - யாழ்ப்பாணம்)


☆ கப்டன் தூபோன் (ஆறுமுகாணந்தன் இராஜேந்திரன் - யாழ்ப்பாணம்)

ஆகியோரே அந்த மூவரும் ஆவர்.

இதேவேளை -

கடந்த ஏப்ரல் மாதம் 21ஆம் திகதி முல்லைத்தீவுக் கடற் பரப்பில் நடந்த மோதலில் மேஜர் ஆர்வலன் (இராமசாமி சிவகுமார் - கிளிநொச்சி), கப்டன் மாலினி (யோகேஸ்வரன் சசிரேகா - யாழ்ப்பாணம்), 2ஆம் லெப்.வண்ணன் அல்லது ஆனந்தன் (அன்ரன் டெபரேபா சாள்ஸ் கிறிஸ்டின் - மன்னார்), 2ஆம் லெப். அன்புக்கிளி (சின்னத்துரை பரின் - வவுனியா) ஆகிய நால்வரும் உயிரிழந்தவர் என்றும் புலிகள் நேற்று அறிவித்துள்ளனர். (க-164)


25-11-2001 இதழில்.......!





# ஊனமுற்றோருக்கு இங்கு உதவும் ஜேர்மன் நாட்டு சமூகத் தொண்டர்

ஜேர்மனியிலிருந்து யாழ்ப்பாணத்திற்கு இரண்டாவது தடவையாக வருகைதந்துள்ள சமூகத் தொண்டர் ஹன்ஸ் பீற்றர் டென்லர் இங்கு தனது மனித நேயப் பணியின் இரண்டாம் கட்டத்தை நிறைவு செய்து கொண்டு நாளை கொழும்பு திரும்புகின்றார்:

உடல் ஊனமுற்ற சகல இலங்கையர்களுக்கும் எந்தவித வேறுபாடுமின்றி தனி ஒரு மனிதனாக நின்று தன்னாலான உதவிகளைப் புரிந்து வரும் இவர், அவ்வுதவிகளை வழங்கி வரும் பாணியே வித்தியாசமானது.

உதவிக்காக ஏங்கும் ஊனமுற்றோரை அணுகி, அவர்கள் தேவையை சரியான விதத்தில் அறிந்துகொள்வார். கூடவே அவர்கள் தொடர்பான விவரங்களையும் பெற்ற பின்னர் தனது தாயகம் செல்வார்.

அங்கு பாவனையில் இல்லாத - உபயோகமற்ற - ஊனமுற்றோருக்கான உபகரணங்களை மறுசீரமைத்து பெரிய கொள்கலன்களில் இலங்கைக்கு அனுப்புவார். தானே இலங்கை வந்து ஊனமுற்ற நபர்களிடம் நேரடியாகச் சென்று அந்த உபகரணங்களை கையளிப்பார். இவரது செயற்பாடுகளுக்கு அவ்வப்போது உள்ளூர் மற்றும் வெளியூர் அரசசார்பற்ற நிறுவனங்கள் உறுதுணையாக இருந்து வருகின்றன.

கடந்த வருடம் நவம்பர் மாத நடுப்பகுதியில் இங்கு வருகை தந்திருந்த ஹன்ஸ், அப்போதும் ஒரு கொள்கலனில் ஊனமுற்றோருக்கான உபகரணங்கள் எடுத்து வந்து வழங்கியிருந்தார். இம்முறையும் அவர் எடுத்து வந்த உபகரணங்களை உரிய நபர்களிடம் நேரில் சென்று கையளித்துள்ளார். இவருக்கு ஜீரி. இசற். நிறுவனம் தனது ஆதரவை வழங்கியிருந்தது.

நாளை கொழும்பு திரும்பும் இவர் சிறிது நாள்கள் தென்பகுதியிலும் தனது சமூகப் பணிகளை முன்னெடுக்கவுள்ளார்.

"மக்களுக்கிடையே எந்தவித வேறுபாடுமின்றி நான் மேற்கொள்ளும் இச்செயற்பாடுகள் மூலம் எல்லோரும் நிறைவான வாழ்க்கை வாழ்வதற்கான ஒரு சிறிய சமாதான முன்னெடுப்பை மக்களுக்கு வழங்குவதே எனது பணி" - என்று எளிமையுடன் கூறுகிறார் ஹன்ஸ்.



ஊனமுற்ற ஒருவருக்கு தான் நேரில் சென்று சக்கர நாற்காலியை ஹன்ஸ் கையளித்தபோது....!

(உ-9)

# ஆப்கானின் கந்தகார் நகரம் இப்போதும் தலிபான் வசமாம்

## வெளியேறவில்லை என்கிறார் தூதர்

பெஷாவர்,நவ.21

ஆப்கானிஸ்தானின் கந்தகார் நகரில் தலிபான்கள் இப்போதும் வலுவாக நிலைகொண்டிருப்பதாகத் தென்மேற்குப் பாகிஸ்தானிய எல்லைகளிலிருந்து வரும் செய்திகள் தெரிவிக்கின்றன.

பாகிஸ்தானுக்கான தலிபான் தூதர் முல்லா அப்துல் சலம் சயீவ் இதனை உறுதிப்படுத்தினார்.

தெற்கு ஆப்கான் நகரான கந்தகார், இப்போதும் தலிபான்களின் பூரணக் கட்டுப்பாட்டிலேயே உள்ளதாகவும் -

அங்கு பெரும்பான்மையாக வாழும் பஸ்தூன்களின் ஆதரவு தலிபான்களுக்கு இருப்பதாகவும் -

சயீப் மேலும் தெரிவித்தார்.

தலிபான் தலைவர் முல்லா மொகமட் ஒமரின் உத்தரவுப்படி தலிபான்கள், பஸ்தூன் தலைவர்களிடம் கந்தகாரின் நிர்வாகத்தை ஒப்படைத்துவிட்டு, நகரைவிட்டு வெளியேறிவிட்டதாகக் கூறப்படுவதை அவர் முற்றாக நிராகரித்தார்.

கடந்த வாரம் கந்தகார் சென்று திரும்பிய இனக்குழுத் தலைவர்கள் கூறுகையில், கந்தகாரை விட்டு வெளியேற தலிபான்கள் முதலில் தீர்மானித்திருந்ததாகவும் -

ஆனால் முல்லா முகமட் ஒமர் விடுத்த போராட்ட அறைகூவலின் பின்னர் தலிபான்கள் மனம் மாறிவிட்டதாகவும் - தெரிவித்தனர்.


தான் உயிருடன் உள்ளவரை தலிபான்களுக்குத் தலைமை ஏற்கும்படி கனவில் இறைவன் கட்டளை இட்டதாக ஒமர் கூறியிருப்பதாக இனக்குழுக்களின் தலைவர் ஹமீட் கர்ஜாரி தெரிவித்தார்.

இதேவேளை, கந்தகாரை அண்மித்த பிரதேசத்தில் பின்லேடனைத் தேடிப்பிடிக்கும் தரை நடவடிக்கையை அமெரிக்க அதிரடிப் படையினர் மேற்கொண்டுள்ளனர்.

ஆனால் பின்லேடன் தமது கட்டுப்பாட்டுப் பகுதிக்குள்ளிருந்து வெளியேறிவிட்டதாகத் தலிபான்கள் கூறியுள்ளனர்.

பின்லேடன் ஆப்கானிஸ்தானில் இருக்கிறாரா? இல்லையா? என்பதே தமக்குத் தெரியாதென்று பாகிஸ்தானுக்கான தலிபான் தூதர் கூறினார்.

## வான்கோழியின் குறும்பு!



குறும்புத்தனம் மிக்க வான்கோழி ஒன்றின் செயலால் அதிர்ச்சியடைந்த அமெரிக்க அதிபர் புஷ்ஷை படத்தில் காண்கிறீர்கள்.

கடந்த திங்கட்கிழமை வெள்ளை மாளிகைத் தோட்டத்தில் இடம்பெற்ற நிகழ்வொன்றில், அங்கு வளரும் இந்த வான்கோழி அதிபர் புஷ்ஷ்க்கு இப்படித் தலையை நுழைத்துத் தர்மசங்கடத்தை ஏற்படுத்திவிட்டது.

# நான்கு வெளிநாட்டு செய்தியாளர் காபூல் செல்லும் வழியில் மாயம்!

## கொல்லப்பட்டிருக்கலாம் என அச்சம்

பெஷாவர்,நவ.21

ஆப்கானிஸ்தானில் யுத்தச் செய்திகளைச் சேகரிக்கச் சென்ற 4 செய்தியாளர்கள் உயிரிழந்திருக்கலாம் என்று அஞ்சப்படுகிறது.

பாகிஸ்தானிலிருந்து, ஆப்கான் தலைநகர் இஸ்லாமாபாத் நோக்கிச் சென்று கொண்டிருந்தபோது, அவர்கள் பயணித்த வாகனம் ஆயுதம் தாங்கியவர்களால் தாக்கப்பட்டதாகவும் -

அதன் பின்னர் அவர்கள் குறித்த தகவல்கள் எதுவும் கிடைக்கவில்லை என்றும் - கூறப்படுகிறது.



கைகள் பின்புறம் கட்டப்பட்ட நிலையில் தெருவோரம் கிடக்கும் தலிபான் வீரரொருவரின் சடலத்தின் மீது - ஆத்திரம் தீராமல் - வடக்குக் கூட்டணியின் ஆதரவாளர் ஒருவர் கல் வீசும் காட்சி.

'ரொய்ட்டர்' செய்திச் சேவையின் தொலைக்காட்சிப் படப்பிடிப்பாளர் ஹரிபர்டன், புகைப்படப்பிடிப்பாளர் அஜீஸுல்லா ஹைதாரி ஆகியோரும் ஸ்பானிய செய்தியாளர் ஜுலியோ பவுண்டஸ், இத்தாலிய பெண் செய்தியாளர் மரியா கிரேஜியா கொடுலி ஆகியோருமே காணாமற்போயுள்ளனர்.

காபூல் பஸ் சாரதி ஒருவர், 3 ஆண்கள் மற்றும் ஒரு பெண்ணினது சடலங்களைத் தான் வரும் வழியில் கண்டதாகக் கூறியுள்ளார்.

ஆயினும் அவர் சடலங்கள் குறித்துத் தெளிவான அடையாளங்களைக் கூறவில்லை.

இதேவேளை, காபூலில் இருந்து சுமார் 35 மைல்கள் தொலைவில் சடலங்கள் உள்ளதாகக் கூறப்படும் சரோபி நகருக்கு சுமார் 300 வீரர்களை, சடலங்களை மீட்க அனுப்பியுள்ளதாக வடக்குக் கூட்டணி தெரிவித்தது.

அவர்கள் சரோபியில் நேற்றுமுன்தினம் ஆயுதப் படை ஒன்றுடன் மோதியதாகவும் கூட்டணிப் பேச்சாளர் தெரிவித்தார்.

சரோபி நகரிலிருந்தே காபூலுக்கு மின்சாரம் வருவதாகவும் -

இந்த மோதலின் பின்னர் மின்சாரம் தடைப்பட்டதால் நேற்றுமுன்தினமிரவு காபூல் நகரம் இருளில் மூழ்கியதாகவும் - தெரிவிக்கப்பட்டது. (ஒ)

# விமானம் வீழ்ந்து நொறுங்கியதில் ரஷ்யாவில் 24பேர் உயிரிழந்தனர்!

மொஸ்கோ,நவ.21

ரஷ்யாவில் பயணிகள் விமானமொன்று வீழ்ந்து நொறுங்கியதில் 24 பேர் உயிரிழந்தனர்.

மொஸ்கோவுக்கு வடகிழக்கே யாரேபுளொட் மாகாணத்தில் நேற்று இந்த அனர்த்தம் நிகழ்ந்தது.

சைபீரியாவின் கட்டங்கா நகரிலிருந்து மொஸ்கோ நோக்கிச் சென்றுகொண்டிருந்த இந்த விமானம், கட்டங்கா விமான நிலைய ரேடார் திரையிலிருந்து திடீரென்று மறைந்து போனது. இதனையடுத்து காணாமற்போன விமானத்தைத் தேடும் பணி தொடங்கியது.

இந்தத் தேடுதலில் விழுந்து நொறுங்கிக் கிடந்த விமானம் கண்டுபிடிக்கப்பட்டது.

விமானத்திலிருந்தவர்களில் ஒருவர் கூட உயிர்பிழைத்திருக்கச் சாத்தியமில்லை என்று ரஷ்யப் பொலீஸார் கூறியுள்ளனர்.

இந்த விபத்துக்கான காரணம் குறித்து ரஷ்ய அதிகாரிகள் விசாரணை நடத்திவருகின்றனர். பெரும்பாலும் வானிலை காரணமாகவே இந்த விபத்து நிகழ்ந்திருக்கும் என்று கருதப்படுகிறது. ஆயினும் விபத்தின் பின்னணியில் ஆயுதத் தாக்குதல் இருக்கக்கூடும் என்ற சந்தேகத்தை ரஷ்ய அதிகாரிகள் மறுக்கவில்லை. (ஒ)

# வீரப்பனின் நிபந்தனையை தமிழக அரசு நிராகரிப்பு

சென்னை,நவ.21

சந்தன மரக்கடத்தல்காரன் வீரப்பன் சரணடைய விதித்த நிபந்தனையை ஏற்கமுடியாதென்று தமிழக முதலமைச்சர் ஓ.பன்னீர்செல்வம் நேற்றுமுன்தினம் அறிவித்துவிட்டார்.

சென்னையில் அமைச்சரவைக் கூட்டத்தின் பின்னர் செய்தியாளர்களிடம் பேசிய முதலமைச்சர், வீரப்பன் சரணடைவதற்கும், சிறப்பு அதிரடிப்படையை திரும்பப் பெறுவதற்கும், ஒருவித தொடர்பும் இல்லையென்றார்.

கடந்தவாரம் தமிழகப் பத்திரிகை ஆசிரியர் ஒருவருக்கு வீரப்பன் அனுப்பிய ஒலிநாடாவில், வீரப்பன் தெரிவித்துள்ளதாகக் கூறப்படும் கோரிக்கைகளை தமிழக அரசு ஒருபோதும் ஏற்கப்போவதில்லை என்றும் முதல்வர் அப்போது உறுதிபடக்கூறினார். கேள்வி ஒன்றுக்குப் பதிலளிக்கையில்,



அரசுக்கு எந்த ஒரு ஒளி நாடாவும் வந்து சேரவில்லை என்றும் - ஒளிநாடா பற்றிக் கூறப்படுவதைப் பொலீஸார் விசாரித்துவருவதாகவும் - அவர் மேலும் தெரிவித்தார்.

'நெற்றிக்கண்'வார இதழின் ஆசிரியர் மணிக்கு வீரப்பன் கடந்த வாரம் அனுப்பிய ஒலிநாடாவில்,

தான் சரணடையத் தயாராக உள்ளதாகவும் -

ஆனால் அதற்கு நிபந்தனையாக, தன்னைத் தேடும் பணியில் ஈடுபட்டுள்ள தமிழக - கர்நாடக கூட்டு அதிரடிப் படையினர் திரும்பப் பெறப்பட வேண்டும் என்றும் - வீரப்பன் குறிப்பிட்டிருந்தமை தெரிந்தவையே. (ஒ-4)

### சரணடைந்தோரைக் கொல்வதாக

# வடக்குக் கூட்டணியினர் மீது ஐ.நா.ஸ்தானிகர் குற்றச்சாட்டு

புதுடில்லி,நவ.21

ஆப்கானிஸ்தானில் வடக்குக் கூட்டணிப் படைகளின் யுத்தக் குற்றங்கள் தொடர்பாக மனித உரிமைகளுக்கான ஐ.நா.ஸ்தானிகர் திருமதி மேரி றொபின்ஸன் கவலை தெரிவித்துள்ளார்.

சரணடையும் தலிபான் படை வீரர்களை படுகொலை செய்து வருவதாக அவர் குற்றஞ்சாட்டினார்.

இந்தியாவுக்கு விஜயம் மேற்கொண்டுள்ள அவர், நேற்றுப் புதுடில்லியில் செய்தியாளர்களைச் சந்தித்தபோதே இதனைத் தெரிவித்தார்.

வடக்குக் கூட்டணியினர் மஷாரே ஷெரீப்பையும், காபூலையும கைப்பற்றியபோது, ஆயுதங்களை ஒப்படைத்துச் சரணடைந்த தலிபான்களை இரக்கமின்றிக் கொன்றதாகவும் -

சர்வதேச மனிதாபிமான சட்டங்களுக்கு இது விரோதமானது என்றும் -

அப்போது அவர் மேலும் கூறினார்.

ஆப்கானிஸ்தானின் மொத்த சனத்தொகையில் 60 சதவீதம் பெண்களாக உள்ள நிலையில், வருங்கால அரசில் பெண்களும் முழுமையாகப் பங்கேற்க அனைத்து முயற்சிகளையும் ஐ.நா. மேற்கொள்ளும் என்றும் - மனித உரிமைகளுக்கான ஐ.நா.ஸ்தானிகர் திருமதி மேரி றொபின்ஸன் கூறியுள்ளார்.

இந்திரா காந்தி சமாதான விருதைப் பெற்றுக்கொள்ள மேரி றொபின்ஸன் புதுடில்லி வந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஒ)

### வான் போர் முறையை மேம்படுத்த ஒப்பந்தம்

எதிர்காலத்தில் வான்போர் முறைகளை தொழில்நுட்ப ரீதியாக மேம்படுத்த இணைந்து செயலாற்றுவதென்று ஐரோப்பிய ஒன்றியத்தின் 6 நாடுகள் தீர்மானித்துள்ளன.

ஐரோப்பிய ஒன்றியத்தின் பாதுகாப்பு அமைச்சர்கள் கூட்டத்தில், பிரான்ஸ், ஜெர்மனி, இத்தாலி, ஸ்பெயின், சுவீடன், பிரிட்டன் ஆகிய நாடுகளின் அமைச்சர்கள் இதற்கான உடன்படிக்கையில் நேற்று முன்தினம் கையெழுத்திட்டனர்.

# கலாசாரத்தை சீரழிக்கும் அமெரிக்க இராஜதந்திரம்

## இஸ்லாமியத் தலைவர்கள் குமுறல்

கலாசாரச் சீரழிவை ஆயுதமாக உபயோகித்து ஆப்கானியர்களை அமெரிக்கா அடிமைகொள்ள முயற்சிப்பதாக, இஸ்லாமிய அடிப்படைவாதிகள் குமுறத் தொடங்கியுள்ளனர்.

தலிபான்கள் கடும் அடக்குமுறையை நடைமுறைப்படுத்தியதாகவும் -

தற்போது அவர்கள் தோற்கடிக்கப்பட்டதால், ஆப்கான் மக்கள் நிம்மதி மூச்சு விடுவதாகவும் -

மேற்குலக ஊடகங்கள் பிரசாரம் செய்துவரும் வேளையில், இந்தக் குமுறல் இஸ்லாமிய நாடுகளின் பத்திரிகைகளில் பரவலாக வெளிப்படுத்தப்பட்டு வருகிறது.

வடக்குக் கூட்டணி கைப்பற்றிய பிரதேசங்களில் ஆபாசப்படங்கள், இந்தியத் திரைப்பட நடிகைகளின் கவர்ச்சிப் படங்கள் போன்றவை வெகு தாராளமாகக் கிடைக்கின்றன.

அத்துடன் ஆங்கிலம் மற்றும் இந்தியத் திரைப்படங்கள் குறிப்பாக கவர்ச்சிக் காட்சிகள் நிறைந்த திரைப்பட ஒளி நாடாக்களும், வீடியோ டெக்குகளும் புழக்கத்துக்கு வந்துவிட்டன.

தலிபான்கள் விதித்திருந்த இஸ்லாமியக் கட்டுப்பாடுகள் நீங்கிய மகிழ்ச்சியில் ஆப்கான் பெண்கள் 'பர்தாகளை' அகற்றிவிட்டு நாகரிக உடைகளை அணிவதாகவும், ஆண்கள் தாடிகளை மழிப்பதாகவும், மேற்குலக ஊடகங்கள் முழு அளவில் பிரசாரத்தை முடுக்கிவிட்டுள்ளன.

தலிபான்களின் காலத்தில் முற்றாக தடைசெய்யப்பட்டிருந்த திரைப்படங்களும், கவர்ச்சிப் படங்களும், வடக்குக் கூட்டணியின் கைப்பற்றிய பகுதிகளில் விரைவாக - அதுவும் கடும் யுத்தச் சூழ்நிலையில் - தாராளமாகப் புழக்கத்தில் விடப்பட்டது மேற்குலகச் சதியே என்று இஸ்லாமியப் பத்திரிகைகள் குற்றஞ்சாட்டியுள்ளன. (ஒ)

# பிரிட்டிஷ் தூதரகம் காபூலில் திறப்பு!

லண்டன்,நவ.21

பிரிட்டிஷ் மூத்த இராஜதந்திரி ஒருவர் ஆப்கானிஸ்தான் தலைநகர் காபூலில் தூதரகம் ஒன்றை அமைத்து, உள்ளூர்த் தலைவர்களுடன் பேசி வருகிறார். இவர் நேற்றுமுன்தினம் காபூல் சென்றடைந்தார்.

ஸ்டீபன் இவான்ச் என்ற இந்த பிரிட்டிஷ் இராஜதந்திரி, வெளிநாட்டு விவகார மற்றும் பாதுகாப்பு தொடர்பான 8 அதிகாரிகளுடன் காபூல் சென்றடைந்தார்.

காபூல் அருகே உள்ள 'வக்ரம்' விமானத்தளத்தில் நிலைகொண்டுள்ள பிரிட்டிஷ் படையினரின் எண்ணிக்கை கணிசமாகக் குறைக்கப்பட வேண்டும் என்று வடக்குக் கூட்டணியின் ஒரு பிரிவினர் வற்புறுத்திவரும் நிலையில், பிரிட்டிஷ் தூதரகம் காபூலில் செயற்பட ஆரம்பித்திருப்பது குறிப்பிடத்தக்கது. (ஒ-4)

# கேகாலையில் ரவைகள், வெடிமருந்து சிக்கின

கேகாலை வாடி வீட்டில் நேற்று ஆளும் கட்சி அரசியல்வாதி ஒருவரின் ஆதரவாளர்கள் ஐவர் கைதுசெய்யப்பட்டனர். அவர்களிடம் இருந்து ரி-56 துப்பாக்கிக்கான ஐந்து ரவைகள் கைப்பற்றப்பட்டன.

கைது செய்யப்பட்டவர்களில் ஒருவர் அரசியல்வாதியின் செயலாளராவார்.

இதேவேளை - கேகாலை நகரில் நடத்தப்பட்ட தேடுதல் ஒன்றில் இளைஞர் கைதுசெய்யப்பட்டார். டைனமைட் திரிகள், வெடிமருந்துகள் என்பன அவரிடம் இருந்து கைப்பற்றப் பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது. (க)


## நன்றி நவில்கின்றோம், நயந்து பாராட்டுகின்றோம்

பல காலமாக இயங்கிவரும் எமது

**வடபிராந்திய முச்சக்கர மோட்டார் ஊர்தி (ஓட்டோ) சேவைச் சங்கத்தின்**

கட்டட புனரமைப்புக்கு முதற்கட்டமாக 5,00,000/= (ஐந்து லட்சம்) ரூபாவையும்

ஓட்டோ சாரதி அமரர் மு.சதீஸ்குமார் அவர்களின் குடும்பத்தினர்க்கு புனர்வாழ்வளித்து 1,00,000/= (ஒரு லட்சம்) ரூபாவையும் மனமுவந்து தந்துதவி, மேலும் சகல பிரதேச சபை பகுதிகளில் ஓட்டோ தரிப்பிட ஒழுங்குகள் செய்து தந்தமைக்கு,



வடக்கு புனர்வாழ்வு, புனரமைப்பு,
வடக்கு ~ கிழக்கு தமிழ் மொழி விவகாரம்
இந்து கலாசார
மாண்புமிகு அமைச்சர்
**K.N.டக்ளஸ் தேவானந்தா**
அவர்களையும்



முன்னாள் யாழ்.நாடாளுமன்ற உறுப்பினர்கள்
**உயர்திரு. K.V.குகேந்திரன் (ஜெகன்),**
**உயர்திரு. தவராசா**
ஆகியோரையும்



நல்லூர் பிரதேச சபைத் தலைவர்
**திரு.மணிபல்லவராஜன் (நிஷாந்தன்)**
அவர்களையும்
தொடர்புகள் ஏற்படுத்தி உதவிய
❖ **தோழர் சிறீயண்ணா**
அவர்களையும்
ஒத்தாசைகள் வழங்கிய
❖ **தோழர் றீகன்** (மக்கள் இணைப்பாளர்)
❖ **தோழர் கேதீஸ்**
❖ **தோழர் மரியநாயகம்**
இன்முகத்துடன் வரவேற்கும்
❖ **தோழர் சிவராம்**
❖ **தோழர் உதயன்**
❖ **தோழர் வள்ளுவன்**
ஆகியோரையும்

26.09.2001 இல் இருபாலையில் ஓட்டோவுடன் அமுக்கவெடியில் சிக்கி பொருளுமிழந்து, பொன்னான உயிருமிழந்த ஓட்டோ சாரதி அமரர் மு.சதீஸ்குமார அவர்களின் குடும்பத்திற்கு உதவிபெற எமது சங்கம் மேற்கொண்ட முயற்சிக்கு, உடனடியாக சிபார்சு செய்து அக்குடும்பத்திற்கு பணம் புனர்வாழ்வு தந்த,

கோப்பாய் பிரதேச சபைத் தலைவர்
❖ **திரு.பூ.குணசிங்கம் (மாமா),**
கோப்பாய் E.P.D.P. அமைப்பாளர்
❖ **திரு.U.L.A.ரவி**
ஆகிய அனைவரையும்

எமது சங்க அங்கத்தவர்கள் பாராட்டுவதோடு,
இவர்கள் நலம்பெறவும் பணிகள் மேலும் சிறக்கவும் வாழ்த்தி
நன்றிகள் பல கூறி அகமகிழ அன்புடன் பாராட்டுகின்றோம்.

*குறிப்பு:-*

யாழ். குடாநாட்டின் சகல பகுதிகளிலும் வாடகைச் சேவையிலீடுபடும் சகல ஓட்டோக்களுக்கும் அவ்வப் பிரதேச தரிப்பிட குறியீடு பொறிக்கப்பட இருப்பதால், இக்குறியீடு இல்லாத ஓட்டோக்கள் தரிப்பிடங்களில் தரித்து நின்று சேவையிலீடுபட அனுமதிக்கப்படமாட்டாது என்பதை ஓட்டோ உரிமையாளர், சாரதிகட்கு அறியத்தருவதோடு, தயவுசெய்து சங்கப பதிவு மேற்கொள்ளாத ஓட்டோக்களைப் பதிவுசெய்து, சேவையிலீடுபட்டு, சங்கத்தால் கிடைக்கும் நன்மைகளைப் பெற்று சிறந்த சேவையாற்றுமாறு அறிவுறுத்துகின்றோம்.

**வடபிராந்திய முச்சக்கர மோட்டார் ஊர்திச் சேவைச் சங்கம்.**

(C/19385)



## கண்ணீர்க் காணிக்கை!

எமது கல்லூரியின் பீடாதிபதி
கலாநிதி திருநாவுக்கரசு கமலநாதன்
அவர்களின் பாசமிகு தாயார்

**திருமதி தி.அமுதவல்லி**

அவர்கள் இறைபதம் எய்தியதையிட்டு எமது கண்ணீரைக் காணிக்கையாக்குவதோடு, ஆறாத்துயரில் ஆழ்ந்திருக்கும் அன்னாரின் குடும்பத்துயரில் நாமும் பங்கெடுத்துக்கொள்கின்றோம்.

**கல்வியியற் கல்லூரி டிப்ளோமா ஆசிரியர் சங்கம், யாழ்.மாவட்டம்.**

(94727)


திருத்த வேலைகள் காரணமாக

# டிசெ.15 முதல் 30ஆம் திகதி வரை 'சிற்றி ஒவ் றிங்கோ' சேவை இல்லை

யாழ்ப்பாணம்,நவ.21

திருகோணமலைக்கும் காங்கேசன்துறை துறைமுகத்துக்கும் இடையில் பயணிகள் சேவையில் ஈடுபட்டுவரும் 'சிற்றி ஒவ றிங்கோ' கப்பல் எதிர்வரும் டிசெம்பர் மாதம் 15ஆம் திகதியில் இருநது 30ஆம திகதிவரை சேவையில் ஈடுபடுத்தப்படமாட்டாது. என்று 'றான்' அலுவலகம் அறிவித்துள்ளது.

'சிற்றி ஒவ் றிங்கோ' கப்பலில் திருத்த வேலைகள் செய்யவேண்டி இருப்பதாலேயே சேவை இடைநிறுத்தப்படவுள்ளதாகவும் -

எதிர்வரும் 15ஆம் திகதிவரை வழமைபோல் செவ்வாய் மற்றும் வியாழக்கிழமைகளில் கப்பல் சேவை இடம்பெறும் என்றும் -

'றான்' அலுவலக அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

மீண்டும் ஜனவரிமாதம் முதல் வாரத்தில் இருந்து 'சிற்றி ஒவ் றிங்கோ' பயணிகள் கப்பல், சேவையில் ஈடுபடுத்தப்படும் என்றும் அவர் சொன்னார். (க-6)

## அரச ஊழியரின் லீவுகள் ரத்து!

அடுத்த மாதம் 5 ஆம் திகதி இடம்பெறவுள்ள பொதுத்தேர்தலை முன்னிட்டு சகல அரச ஊழியர்களின் விடுமுறைகளும் நேற்றுமுதல் ரத்துச் செய்யப்பட்டுள்ளது. பொதுநிர்வாக அமைச்சு இந்த அறிவிப்பை விடுத்துள்ளது. அடுத்த மாதம் 10 ஆம் திகதிவரை இந்த ரத்து நடைமுறையில் இருக்கும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது. (க)

## வாழைச்சேனையில் அரச வாகனம் எரிப்பு

மட்டக்களப்பு,நவ.21

தேசிய நீர்வழங்கல் வடிகாலமைப்புச் சபையின் கிழக்கு மாகாண இணைப்பாளர் எம்.எல்.எம்.முபாரக்கின் வாகனம் நேற்று செவ்வாய் அதிகாலை 2 மணியளவில் இனந்தெரியாதவர்களால் எரிக்கப்பட்டது.

வாழைச்சேனையில் உள்ள அவரது வீட்டில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த சபைக்குச் சொந்தமான 'பிக் - அப்' வாகனமே தீயிட்டுக் கொளுத்தப்பட்டது. வாகனம் முற்றாக எரிந்து நாசமாகிவிட்டது.

வாழைச்சேனைப் பொலீஸார் தீவிர விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (க-9)

## குடும்பஸ்தரின் சடலம் மீட்பு

மதுபோதையில் குடும்பத்தினருடன தகராறு செய்துவிட்டு கடந்த ஞாயிற்றுக்கிழமை வீட்டில் இருந்து புறப்பட்ட குடும்பஸ்தர் ஒருவர் 3 நாள்களின் பின்னர் கிணற்றில் இருந்து சடலமாக மீட்கப்பட்டார்.

அளவெட்டி வடக்கு, தஞ்சித்தியைச் சேர்ந்த செல்லப்பா சிவலிங்கம் (வயது 48) என்ற 6 பிள்ளைகளின் தந்தையே நேற்றுப் பிற்பகல் சடலமாக மீட்கப்பட்டார்.

இவரது சடலம் நேற்றிரவு 7 மணியளவில் இளவாலை பொலீஸாரினால் யாழ். போதனா வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டது.(க-6)


**ராஜா** யாழ்ப்பாணம்
கமல், மனீஷா
மற்றும் பலர் நடித்த
**ஆளவந்தான்**
தினசரி:- 10.30,2,5 (புதிய நேரம்)
சனி, ஞாயிறு 10.30,2,5 (புதிய நேரம்)
- ஆசனங்களை முன்கூட்டியே பதிவு செய்துகொள்ளவும்.
(C/19317)



**நிறைஞ்சனாஸ்** சங்கானை
**THE PLOT** (ஆங்கிலம்)
இதுவரை கண்டிராத ஆண்கள், பெண்களுக்கிடையிலான
விறுவிறுப்பான கராட்டிச் சித்திரம்.
தினசரி: 11.30, 2.30, 5.30 (பி.நே.)



**நாகம்ஸ்** சுன்னாகம்
ரஜனி, பிரபு, கௌதமி, சோ
நடித்த
**குரு சிஷ்யன்**
(ரீல்ஸ்)
காட்சிகள்:- 11.00, 3.00 (புதிய நேரம்)
(94720)


## முன்பள்ளி ஆசிரியர் கொடுப்பனவு

நல்லூர், யாழ்.பிரதேச செயலகங்களுக்கு உட்பட்ட முன்பள்ளி ஆசிரியர்களுக்கான செப்ரெம்பர், ஒக்ரோபர் மாதங்களுக்கான ஊக்குவிப்புக் கொடுப்பனவு நாளை பி.ப. 3மணிக்கு நல்லூர் பிரதேச சபையின் கொக்குவில் நூலக கேட்போர் கூடத்தில் வழங்கப்படும் என நல்லூர் பிரதேச சபைத் தலைவர் அறிவித்துள்ளார்.

# மரண அறிவித்தல்கள்

## சிவகுரு பரஞ்சோதி

(சுன்னாகம் பிரபல வியாபாரி)

சுன்னாகத்தைப் பிறப்பிடமாகக் கொண்ட பிரபல வியாபாரி வி.எஸ். பரஞ்சோதி 17.11.2001 சனிக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் சறோஜினிதேவியின் (கனடா) அன்புக் கணவரும் காலஞ்சென்றவர்களான தவரட்ணம், மகாராசா மற்றும் இராசாத்தியின் அன்புச் சகோதரனும், ஜமுனாதேவி (கொழும்பு), ஜெயத்திலகம் (மீனா - கனடா), ஆறுமுகசோதி (கனடா) ஆகியோரின் பாசமிகு தந்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (21.11.2001) புதனகிழமை காலை 11.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் கொத்தியாலடி மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
*டாக்டர் சுப்பிரமணியம் வீதி, சுன்னாகம்.*
பரஞ்சோதி ஆறுமுகசோதி (மகன்)
(94725)

## திருமதி மேரி திரேசா பூராணி மகேசன்

யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி மேரி திரேசா பூராணி மகேசன் நேற்று (20.11.2001) செவ்வாய்க்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற திரு.திருமதி தம்பையா தம்பதிகளின் அன்பு மகளும், காலஞ்சென்ற மகேசனின் (ஓய்வூதியர் E.M.A., வட்டவளை), அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான பூராஜா, இந்திராணி விக்டர் மற்றும் திருமதி வயலற்மாட்டீன் (மட்டக்களப்பு), இராஜரட்ணம் (கொழும்பு), இராஜபூபதி (லண்டன்), திருமதி பெலிசிற்றஸ் துரைரெட்ணம் (கனடா), இராஜசூரியர் ஆகியோரின் அன்புச் சகோதரியும், மத்தியூ (E.M.A., பொகவந்தலாவ), திருமதி பொப்சி ஞானப்பிரகாசம் (கனடா), திருமதி றோகினி அருள்சோதி, திருமதி வசந்தா நவரட்ணம், ஜெரால்ட் அன்ரன் (I.C.R.C., யாழ்ப்பாணம்) ஆகியோரின் பாசமிகு தாயாரும், திருமதி பத்மினி (பொகவந்தலாவ), காலஞ்சென்ற ஞானப்பிரகாசம் (மாநகர சபை, யாழ்ப்பாணம்), அருள்சோதி (R.D.A., யாழ்ப்பாணம்), நவரட்ணம் (தொழில் நீதிமன்றம், ஹட்டன்), திருமதி ரியூலிப் மகேசன் ஆகியோரின் அன்பு மாமியாரும், திருமதி தர்ஷினி உதயகுமார் (கனடா), கிறிஷோன் அருள்சோதி (மக்கள் வங்கி, யாழ்ப்பாணம்), மடோனா, யூடி, ஷெவந்தி (H.F.C., யாழ்ப்பாணம்), மினோஜா, றொனி (பொகவநதலாவ), ஒஸ்வல்ட், சஞ்சீவன், ரதேஷன் (S.P.C, யாழ்ப்பாணம்), அனோஜன், கிறிஸ்ரீன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் நிருஷா, றொஷி, றுக்ஷி (கனடா) ஆகியோரின் அன்புப் பூட்டியாரும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் அவரது இல்லத்திலிருந்து நாளை (22.11.2001) வியாழக்கிழமை பிற்பகல் 4.00 மணிக்கு எடுத்துச் செல்லப்பட்டு, புனித மரியாள் பேராலயத்தில் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு பின் புனித கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
*19,குருசோ வீதி, யாழ்ப்பாணம்.*
G.A.மகேசன் (மகன்)
(94724)

## திருமதி அமுதவல்லி திருநாவுக்கரசு

நாயன்மார்கட்டு நல்லூரைப் பிறப்பிடமாகவும் சங்குவேலி வடக்கு மானிப்பாயை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி அமுதவல்லி திருநாவுக்கரசு நேற்றுமுன்தினம் (19.11.2001) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் நாயன்மார்கட்டு சதாசிவம் - பூரணம் தம்பதியினரின் மூத்த புதல்வியும், இராமலிங்கம் திருநாவுக்கரசுவின் அன்பு மனைவியும், மனோநாயகம் (இளைப்பாறிய சுகாதாரப் பரிசோதகர்), கலாநிதி கமலநாதன் (பீடாதிபதி - யாழ்.தேசிய கல்வியியற் கல்லூரி), திருமதி கமலவேணி சண்முகராஜா (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புத் தாயாரும், சண்முகராஜா, திருமதி தவமணி, திருமதி இராஜாம்பிகை ஆகியோரின் அன்பு மாமியாரும், செழியன் (ஆஸ்திரேலியா), துளசி (கொழும்பு), சுசிதரன் (பிரான்ஸ்), முகுந்தன் (பிரான்ஸ்), முரளீதரன் (பிரான்ஸ்), சசிதரன் (பிரான்ஸ்), சிந்து (பிரான்ஸ்) ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் சங்குவேலி வடக்கு இல்லத்தில் இன்று (21.11.2001) புதன்கிழமை பிற்பகல் 2.00 மணிக்கு நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக சங்குவேலி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
*சங்குவேலி வடக்கு, மானிப்பாய்.*
(C/19387)
தி.மனோநாயகம்,
தி.கமலநாதன்.

## திருமதி ஆன்கரியற் நவமணி அந்தோனிப்பிள்ளை

யாழ்ப்பாணம் ஸ்ரேசன் சந்தியைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி ஆன்கரியற் நவமணி அந்தோனிப்பிள்ளை (நவம்) நேற்று (20.11.2001) செவ்வாய்க்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற அந்தோனிப்பிள்ளையின் அன்பு மனைவியும், இன்பஜோதி (கொழும்பு), இராஜசகாயன் (நூலகர், புனித பத்திரிசியார் கல்லூரி, யாழ்ப்பாணம்) ஆகியோரின் அன்புத் தாயாரும், பொன்னையா (ஓய்வுபெற்ற லிகிதர்), தேவா ஆகியோரின் மாமியாரும், யோகேந்திரன், ஹேமலோஜினி, ரவீந்திரன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும், எமரன்சியா அருந்தியாவின் அன்புப் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (21.11.2001) புதன்கிழமை பிற்பகல் 3.00 மணிக்கு அவரது இல்லத்திலிருந்து புனித அடைக்கல அன்னை ஆலயத்திற்கு கொண்டு செல்லப்பட்டு திருப்பலியின் பின் நல்லடக்கத்திற்காக புனித கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலைக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
*இல.736,ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.*
இராஜசகாயன் (மகன்)
(94728)

# உதயன்

## பிரதமரும் போஸ்டரும்

பொதுத் தேர்தல் சூடு பிடிக்க, பிடிக்க ஆளும் பொதுமக்கள் ஐக்கிய முன்னணிப் பிரமுகர்களின் பேரினவாதம கக்கும் போக்கும் தீவிரமடைந்துவருகின்றது.

பொ.ஐ.முன்னணியில் பிரதான கட்சியாக இருப்பது ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி. இரண்டுக்கும் இப்போது தலைவி ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க தான்.

சந்திரிகாவின் தந்தையார் எஸ். டபிள்யூ.ஆர்.டி.பண்டாரநாயக்காதான் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் ஸ்தாபகர்.

தாம் அப்போது புதிதாகத் தொடங்கிய கட்சியை ஆட்சிப் பீடமேற்றுவதற்கு அவர் நாடிய குறுக்குவழி பேரினவாதம் - மொழிப் பிரச்சினை.

தான் ஆட்சிக்கு வந்தால் 24 மணி நேரத்தில் சிங்களம் மட்டும் சட்டத்தை நடைமுறைப்படுத்துவேன் என்று இனத்துவேஷம் கிளப்பியதன் மூலம் ஆட்சிப் பீடத்தைக் குறுக்கு வழியில் அவர் கைப்பற்றினார்.

அவர் கிளப்பிய - அடி அத்திவாரம் போட்ட - இனத்துவேஷம்தான் இன்று நாட்டையே அழிவுப் பாதைக்கு இட்டுச் செல்லும் பெரும் போர் அரக்கனாக விஸ்வரூபம் எடுத்து நிற்கின்றது.

அதைத் தாங்கமுடியாமல் நாடு தகித்துக்கொண்டிருக்க, மற்றொரு முறை ஆட்சிப் பீடம் ஏறுவதற்கு மீண்டும் இனத்துவேஷ அரக்கனை உசுப்பி விடுகின்றனர் தந்தை வழி வந்த புத்திரியும், அவரது சகாக்களும்.

அதன் ஒரு வடிவம்தான், 'இடைக்கால நிர்வாகத்தை ஏற்படுத்தும் முயற்சியை முறியடியுங்கள்!' என்று ஆயுதப் படையினருக்கு பிரதமர் ரத்னசிறி விக்கிரமநாயக்கா விடுத்திருக்கும் அறைகூவல்.

நாட்டின் இனப்பூசலுக்கு அமைதித் தீர்வு காணவேண்டுமாயின் சமாதானப் பேச்சே அதற்கு வழி. சமாதானப் பேச்சும் இணக்க நிலையும் ஏற்படுவதற்கு வாய்ப்பு உருவாகுமானால் அப்போது இடைக்கால நிர்வாகம் அமைக்கப்படுவதும் தவிர்க்க முடியாததாகும்.

அது மட்டுமல்லாமல், போர் நடந்துகொண்டிருக்கும் இந்தச் சமயத்தில்கூட - சமாதானப் பேச்சுக்கான வாய்ப்புகள் மிகவும் அருகிப் போயுள்ள இன்றைய நிலையில் கூட - ஜனாதிபதி சந்திரிகாவின் பொதுமக்கள் ஐக்கிய முன்னணியில் இடம் பெற்றிருக்கும் ஒரேயொரு தமிழ்க் கட்சியான ஈ.பீ.டி.பியினர் உட்படப் பலரும் வடக்கு - கிழக்கு இடைக்கால நிர்வாகம் அமைக்கப்படவேண்டும் என்றே வற்புறுத்துகின்றார்கள். இடைக்கால நிர்வாகம், தற்போதைய பிரச்சினைகளில் அரைவாசியை - தமிழ் மக்களின் அன்றாடச் சிக்கல்களை - தீர்த்து வைத்துவிடும் என்று அவர்கள் கருதுகின்றார்கள்.

ஆனால் இடைக்கால நிர்வாகம் ஏற்படுத்துவது கூட, பிரதேச ஒருமைப்பாட்டுக்கு குந்தகமானது என்று தெரிவித்து, அத்தகைய நிர்வாகம் நாட்டைப் பிரிப்பதற்கு எடுக்கப்படும் முயற்சி என்று குறிப்பிட்டு, அதைத் தடுக்கக் கிளர்ந்தெழும்படி ஆயுதப் படையினருக்கு அழைப்பு - அறைகூவல் - விடுத்திருக்கிறார் பிரதமர்.

தமிழர்களுக்கு உரிய அதிகாரப் பகிர்வு வழங்கப்படுவதை இந்த அரசுத் தலைமை அடியோடு அனுமதிக்காது என்ற அதன் உள்ளக் கிடக்கையையும் இந்த அழைப்பு பிரதிபலிக்கத் தவறவில்லை என்றே கொள்ளவேண்டும்.

அதாவது -

தமிழர்களுக்கு எதையும் -பகிர்ந்தளிக்காத - பேரினவாத நலனுடைய - கூட்டமைப்பே தங்களது முன்னணி என்பதை சிங்கள மக்களுக்குப் பகிரங்கப்படுத்திக் காட்டுகின்றார் பிரதமர்.

அதேசமயம் -

ஐ.தே.கட்சியும், அதன் கூட்டணியும் தமிழர்களுக்கு ஏதோ அதிகம் கொடுக்கப்போவது போல சிங்கள மக்களுக்குக் காட்டவும் முயற்சி எடுக்கப்படுகின்றன. ரணில் - பிரபா - எஸ்.பி.திஸநாயக்கா ஆகிய மூவரின் படத்துடன் கொழும்பில் முளைத்த போஸ்டர்களின் நோக்கம் இதுதான் என்பது உள்ளங்கை நெல்லிக்கனி.

தங்களைத் தமிழர்களுக்கு எதிரானவர்கள் போலவும், ஐ.தே. கட்சிக் கூட்டணி தமிழர்களுக்கு ஏதோ வாரி வழங்கப் போகின்றது போலவும் காட்டி - இனவாதம் கிளப்பி - பெரும்பான்மைச் சிங்களவரின் ஆதரவைச் சுருட்டும் அரசுத் தரப்பின் இரட்டைச் சதித்திட்டம் இது.

# அச்சுவேலி மக்கள் வங்கி இன்று முதல் தனியான கிளை

மக்கள் வங்கியின் ஸ்ரான்லி வீதியின் நீடித்த கருமபீடமாக இதுவரை இயங்கிவந்த அச்சுவேலி மக்கள் வங்கி, இன்று புதன்கிழமை முதல் தனித்துவமான கிளையாக இயங்கவுள்ளது.

வங்கிக் கிளையின் ஆரம்ப வைபவம் இன்று காலை 9.00 மணி முதல் அச்சுவேலிச் சந்தை மேல்மாடிக் கட்டடத்தில் நடைபெறும்.

வங்கி முகாமையாளர் மு.சிவநேசன் இது தொடர்பாக விடுத்துள்ள செய்திக் குறிப்பில் -

நடைமுறைக் கணக்குகளை வைத்திருக்கும் வாடிக்கையாளர்கள் அன்றுமுதல் தமது பாவிக்காத காசோலைப் புத்தகங்களைச் சமர்ப்பித்து அச்சுவேலிக் கிளைக்குரிய காசோலைப் புத்தகங்களைப் பெற்றுக்கொள்ளலாம். அன்று புதிய கணக்குகளை ஆரம்பிக்கும் வாடிக்கையாளர்களுக்கும் அச்சுவேலிக் கிளைக்குரிய காசோலைப் புத்தகம் வழங்கப்படும்.

வெளிநாடுகளில் இருந்தும் இலங்கையின் பிற பாகங்களில் இருந்தும் அச்சுவேலிக் கிளையில் இருக்கும் தமது கணக்குகளுக்குப் பணம் அனுப்பும் வாடிக்கையாளர்கள் அன்றுமுதல 'மக்கள் வங்கி அச்சுவேலி கிளை இல.107' என்ற வங்கி முகவரியைப் பயன்படுத்தலாம்.

அன்பர்கள், ஆதரவாளர்கள், வாடிக்கையாளர்கள் அனைவரும் அன்றைய தினம் வைபவத்தில் கலந்துகொண்டு சிறப்பித்தும், புதிய கணக்குகளை ஆரம்பித்தும், தற்போது நடைமுறையில் இருக்கும் தமது கணக்குகளில் பணத்தை வைப்பிலிட்டும், புதிய வாடிக்கையாளர்களை வங்கிக்கு அறிமுகம் செய்தும் வங்கியுடனான தமது நல்லுறவை மேலும் வலுப்படுத்தி ஆதரவு அளிப்பார்கள் எனவும் எதிர்பார்க்கிறோம்.

வைபவத்தில் கலந்துகொள்வோரை வங்கி முன்றிலில் அமைந்துள்ள மண்டபத்தில் இன்று காலை 8.50 மணிக்கு (புதிய நேரம்) ஒன்றுகூடுமாறு அன்புடன் வேண்டுகிறோம் - என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

(ஐ-180)

# தீவுப் பகுதியைச் சேர்ந்த 7 பேருக்கு என்ன நடந்தது?

## மதனராசாவிடம் சங்கரி பகிரங்க வினா

தீவகத்தில் காணாமற்போன 7 பேருக்கு என்ன நடந்தது என்பதை உடனே தெரியப்படுத்தும்படி ஊர்காவற்றுறைப் பிரதேச சபைத் தலைவரும் ஈ.பி.டி.பியின் தீவக அமைப்பாளருமான ந.மதனராசாவிடம் பகிரங்கமாக வேண்டுகோள் விடுத்திருக்கின்றார் தமிழர் விடுதலைக் கூட்டணியின் சிரேஷ்ட உபதலைவரும் யாழ்.மாவட்ட முதன்மை வேட்பாளருமான வீ.ஆனந்தசங்கரி.

'தீவகத்தை மீட்போம்; அடிமைதளை அறுப்போம்!' என்ற தலைப்பில் வீ.ஆனந்தசங்கரி சார்பாக தேர்தல் பிரசார விளம்பரம் ஒன்று பிரசுரமானதும் -

அதற்கு எதிராக 'மீட்பரே வருக!' என்ற தலைப்பில் ஆனந்தசங்கரியை தீவகத்துக்கு வருமாறு கோரும் விதத்தில் - இதுவரை தீவகப்பகுதி மக்களை அவரும் அவரது கட்சியும் கவனிக்காமல், கைவிட்டிருந்தனர் என்ற சாரப்பட - அறிக்கை ஒன்றை ந.மதனராசா வெளியிட்டதும் தெரிந்தவையே.

இந்த அறிக்கைக்குப் பதிலளிக்கும் விதத்திலேயே ஆனந்தசங்கரி நேற்று ஓர் அறிக்கை வெளியிட்டார்.

அதிலேயே, காணாமற்போன ஏழு பேர் குறித்து அவர் விவரித்திருக்கின்றார். அந்த அறிக்கையில் அவர் மேலும் தெரிவித்திருப்பதாவது:-

ஈ.பி.டி.பியின் தீவக அமைப்பாளர் திரு.மதனராசா அவர்களுடைய 'மீட்பரே வருக!' என்ற தலைப்பிலான அறிக்கையை கண்ணுற்றேன்.

'அந்தோனியாரே! என்னைக் காப்பாற்று' என்று மரண ஓலம் எழுப்பிய முன்னாள் தீவக உதவி அரசாங்க அதிபர் நிக்கிலஸின் ஒலி இன்றும் எதிரொலித்துக்கொண்டிருக்கின்றது! அது குறித்துப் பல நூற்றுக்கணக்கான மக்கள் நெஞ்சினுள்ளே குமுறிக்கொண்டிருக்கிறார்கள். அன்று ஆண்டவராலேயே மீட்கமுடியவில்லை. 'மீட்பர்' என்று என்னை அழைக்க வேண்டிய் அவசியமில்லை.

சுதந்திரக் காற்றை சுவாசிக்கத் துடிக்கும் தீவக மக்களுடைய உள்ளக் குமுறலையே நான் நாடாளுமன்றத்தில் கூறினேன். அதையே பிரதிபலித்தேன்.

தீவகப்பகுதி மக்கள் உங்களது-குறிப்பாக உமது - அடாவடித்தனங்களுக்கு ஈடுகொடுக்கமுடியாமலேயே குமுறி எனக்கு எழுதுகின்றார்கள்.

கடந்த வருடம் பல்வேறு இடங்களிலிருந்து உமது தலைமையில் எமது காரியாலயத்துக்கு வந்த நூற்றுக்கணக்கானோர் காட்டிய காடைத்தனம் - கொடும்பாவி எரிப்பு - எமது அலுவலகப் பெயர்ப்பலகை உடைப்பு - போன்ற சம்பவங்கள் தீவக மக்கள் மீது உங்களுக்குள்ள கரிசனையையே எடுத்துக்காட்டுகிறது. அவர்களில் பலர் ஊர்காவற்றுறைக்கு கூட்டம் என்றும் - பின்னர் யாழ்ப்பாணத்தில் சமாதான ஊர்வலம் என்றும் - கூட்டிவரப்பட்டனர். அவர்களில் சிலருக்கு மதுபானம் கொடுக்கப்பட்டு ஏவிவிடப்பட்டதையும் அறிவேன்.

எனக்குக் கடந்த ஒருவருட காலப் பகுதியில் கிடைத்த பல கடிதங்களில் கீழே குறிப்பிட்ட விடயத்துக்கு நாளையே பதில் தரவேண்டும் எனக் கோருகிறேன். இன்னும் பல விடயங்கள் பின்னர் வரும்.

இதுதான் கேள்வி -

1. திரு.நிக்கலஸ் (உதவி அரசாங்க அதிபர்)
2. சுரேஷ் (இருபிள்ளைகளின் தந்தை)
3. கதிரேசு குணரெட்ணம்.
4. செல்வராசா (வட்டிக்குப் பணம் கொடுப்பவர்)
5. எட்டுவயதுச் சிறுவன் ஒருவன் (தகாத செயல் ஒன்றைக் கண்டதால்)
6. தயாபரன்
7. உதயகுமாரி (பாடசாலை மாணவி)

இந்த ஏழு பேருக்கும் என்ன நடந்தது?

உமது அழைப்புக்கு நான் தீவகம் வரவேண்டிய அவசியம் இல்லை. எனக்கு எப்போது வரவேண்டும் என்று தெரியும்.

- என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

(உ)

# சண்டிலிப்பாய் ஆலயத்தில் திருடர்கள் கைவரிசை!

சண்டிலிப்பாய் ஸ்ரீ பத்திரகாளி அம்பாள் ஆலயத்தில் கடந்த ஞாயிறன்று இரவு, திருடர்கள் தமது கைவரிசையைக் காட்டியுள்ளனர்.

ஆலய மூலஸ்தானக் கதவை உடைத்து உள்ளே சென்றுள்ள திருடர்கள் அங்கு அம்மனுக்குச் சாத்தியிருந்த தங்க நகைகள் மற்றும் உண்டியலில் இருந்த ஒரு தொகைப் பணம் என்பவற்றைத் திருடிச் சென்றுள்ளனர்.

மூலஸ்தானத்தில் இருந்த அம்மனின் விக்கிரகத்தைப் பிரட்டி அங்கு வைக்கப்படும் யந்திரத் தகட்டை எடுப்பதற்கும் முயன்றுள்ளனர்.

இந்தத் திருட்டுத் தொடர்பாக ஆலய நிர்வாகத்தினர் மானிப்பாய் பொலீஸில் முறைப்பாடு செய்துள்ளனர்.

(ம-17)

## நாளை

கார்த்திகை 7
வியாழக்கிழமை
திதி : ஸப்தமி
பிற்பகல் 4.24 வரை.
நட்சத்திரம் : அவிட்டம்
வைகறை 5.29 வரை.
முருகன் திருக்கல்யாண விழா
சுபநேரம் : 7.40 - 9.10
ராகுகாலம் : 1.40 - 3.10
(பழைய நேரப்படி)

## உதயவாக்கு

தொழிலில் எத்தனை கீழ்த்தரமாயினும் அவமானமில்லை; சோம்பலே அவமானம்.

## நாட்டு நடப்பு

களவு - VI

பொன்னுண்டாம் நல்ல பொருளுண்டாம் பூவுலகில்
பெண்ணுண்டாம் பெரு மனையுண்டாம் - என்னாளும்
வண்ணமுறு வீடுகளை வடிவாய்த் தேர்ந்தெடுத்து
கன்னக்கோல் வைப்பார் தமக்கு

*- விகடகவி.*

### அபிவிருத்திப் பணிகளுக்காக

# வலி. தெற்கு பிரதேசத்துக்கு 17 லட்சம் ரூபா ஒதுக்கீடு

வலிகாமம் தெற்கு,நவ.21

வலிகாமம் தெற்கு பிரதேச செயலர் பிரிவில் இந்த வருடம் பல்வேறு அபிவிருத்தித் திட்டங்களை நிறைவேற்றுமுகமாக 17 லட்சத்து 90 ஆயிரம் ரூபாவினை பயன்படுத்துவதற்கு யாழ்ப்பாண மாவட்ட திட்டமிடல் செயலகம் அனுமதி வழங்கியுள்ளது.

பிரதேச செயலகத்தின் இவ்வருடத்துக்கான பன்முகப்படுத்தப்பட்ட வரவு - செலவுத் திட்ட நிதியிலிருந்து வீதிகள் திருத்தம், பாடசாலைகள் புனரமைப்பு, ஆலயங்கள் புனரமைப்பு, பாடசாலைத் தளபாடங்கள், முன்பள்ளிகளுக்கான தளபாடங்கள், புத்தகங்கள் கொள்வனவு, முன்பள்ளிகள் புனரமைப்பு போன்ற 25திட்டங்கள் இவ்வருடத்தில் நிறைவேற்றப்படவுள்ளன.

இந்த நிதியைக் கொண்டு, இப்பிரதேசத்தில் உள்ள பத்து வீதிகள் திருத்தப்படவுள்ளன.

ஐந்து முன்பள்ளிகளுக்கான தளபாடங்கள் கொள்வனவு, மூன்று ஆலயங்கள் புனரமைப்பு, இரண்டு பாடசாலைகள் புனரமைப்பு, இரண்டு முன்பள்ளிகள் புனரமைப்பு, இரண்டு பாடசாலைகளுக்கான தளபாடக் கொள்வனவு, முன்பள்ளி ஒன்றுக்கான புத்தகக் கொள்வனவு போன்ற திட்டங்களும் நிறைவு செய்யப்படவுள்ளன.

(ம-152)


## விவசாயப் போதனாசிரியர் பதவிக்கு விண்ணப்பம்

யாழ்ப்பாணம்,நவ.21

விவசாயத் திணைக்களத்தினால் விவசாயப் போதனாசிரியர் வகுப்பு II பிரிவு 'ஆ' விவசாயப் போதனாசிரியர் பயிலுநர் தரத்துக்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கான திறந்த போட்டிப் பரீட்சைக்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

இது தொடர்பான விவரங்களும் விண்ணப்பத்தின் மாதிரியும் ஒக்ரோபர் மாதம் 26ஆம் திகதிய வர்த்தமானியில் வெளியிடப்பட்டுள்ளன. விண்ணப்பிக்கவுள்ளோர் எதிர்வரும் 26ஆம் திகதிக்கு முன்பு விண்ணப்பிக்குமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

(ம-10)



கொழும்பில் ஒட்டப்பட்டுள்ள தேர்தல் சுவரொட்டிகளில் ஒன்று இது. "பிரபா வருவது நாடொன்றை எடுக்க; ரணில் வருவது அதைத் (நாட்டை) கொடுக்க; எஸ்.பி. பார்த்துக்கொண்டிருப்பது இடம் கிடைத்தால் முழு நாட்டையும் தின்ன!" என்று இந்தச் சுவரொட்டிகளில் எழுதப்பட்டுள்ளது.

'புலி, யானை, நரி இணைப்பைத் தோற்கடிப்போம்' என்ற கோஷத்துடன் இந்தச் சுவரொட்டிகள் ஒட்டப்பட்டுள்ளன. (ம)

# தேசிய விளையாட்டுப்போட்டியில் கலந்துகொள்வோருக்கு!

தேசிய இளைஞர் சேவை மன்றத்தின் ஏற்பாட்டில் மகரகமவில் நடைபெறவுள்ள தேசிய மட்ட விளையாட்டுப்போட்டியில் கலந்து கொள்ள பதிவு செய்தவர்களை இன்று புதன்கிழமை காலை 9 மணிக்கு தேசிய இளைஞர் சேவை மன்றத்தின் மாவட்டக் காரியாலயத்துக்கு சமுகமளிக்குமாறு உதவிப் பணிப்பாளர் தி.சிவதட்சணாமூர்த்தி அறிவித்துள்ளார்.

எதிர்வரும் 25ஆம், 26ஆம், 27 ஆம் திகதிகளில் தேசிய மட்டத்தில் நடைபெறவுள்ள விளையாட்டுப் போட்டிகளில் பங்கு பற்றுவதற்காக தெரிவு செய்யப்பட்டு பதிவுகளை மேற்கொண்ட அனைத்து வீரர், வீராங்கனைகளையும் தவறாது சமுகமளிக்குமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

(ம-6)

## வாராந்த நிகழ்வு

சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டுப் பேரவையினர் சந்நிதியான் ஆச்சிரம மண்டபத்தில் வாரந்தோறும் நடத்திவரும் வெள்ளி நிகழ்வில் இவ்வார நிகழ்வாக 'கடவுள் வடிவங்கள்' எனும் பொருளில் வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி விரிவுரையாளர் அ.குமாரவேல் அவர்கள் சொற்பொழிவு ஆற்றவுள்ளார்.

(ம)

### இனப்பிரச்சினைக்கு

# புலிகளுடன் பேசித் தீர்வு காண்பதை 87 வீதமான மக்கள் விரும்புகின்றனர்

## கருத்துக்கணிப்பு முடிவுகள் தெரிவிப்பு

கொழும்பு, நவ.21

விடுதலைப் புலிகளுடன் பேச்சு நடத்தி, இனப்பிரச்சினைக்கு உடனடித் தீர்வு காணப்பட வேண்டும் என இலங்கையில் 87 வீதமான மக்கள் விரும்புகின்றனர்.

அண்மையில் நாடுமுழுவதும் மேற்கொள்ளப்பட்ட கருத்துக் கணிப்பு முடிவுகள இவ்வாறு தெரிவிக்கின்றன.

கனேடிய அரசின் நிதி உதவியுடன் நடத்தப்பட்ட இந்தக் கருத்துக் கணிப்பில் மேலும் தெரியவருவதாவது:-

இலங்கையின் தொடர்ச்சியான பொருளாதார வீழ்ச்சிக்கு யுத்தமே காரணமாக இருக்கின்றது.

எனவே இந்த யுத்தத்தை முடிவுக்குக் கொண்டுவருவதற்கு விடுதலைப் புலிகளுடன் பேச்சு நடத்தப்படவேண்டியது அவசியமானதாகும் என்று பெரும்பாலான மக்கள் விரும்புகின்றனர்.

சுமார் 29 வீதமான மக்கள் தீர்க்கப்படவேண்டிய விடயங்களில் பொருளாதாரத்தைக்காட்டிலும் போரே முக்கியமானது என்றும் கருதுகின்றனர்.

வேகமாக அதிகரித்துச்செல்லும் வாழ்க்கைச் செலவு குறித்து 90 வீதமான மக்கள் மனவிரக்தி அடைந்துள்ளனர்.

நாட்டின் தற்போதைய நெருக்கடி நிலைமைகளுக்குப் போரே முக்கிய காரணமாக அமைந்துள்ளது.

இதனால் இனிமேலும் போர் தொடராமல் நாட்டில் அமைதி நிலவுவதற்கு விடுதலைப் புலிகளுடன் பேசுவது அவசியம் எனப் பெரும்பாலான மக்கள் தெரிவித்துள்ளனர்.

இதேவேளை -

சுமார் 10 வீதமான இலங்கையர்கள் விடுதலைப்புலிகளுடன் ஒருபோதும் பேச்சு நடத்தப்படக் கூடாது எனவும் -

அவர்களை அழித்தொழிக்கும் வரை யுத்தம் தொடரவேண்டும் எனவும் -

இந்த யுத்தத்துக்குத் தாம் பூரண ஆதரவு வழங்குவதாகவும் -

தெரிவித்துள்ளனர். (ம-4)

### அமைச்சருடன் சந்திப்பு!

பனை, பனை தென்னைவள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்க அங்கத்தவர்கள் குழு ஒன்று இன்று புதன்கிழமை காலை 9 மணிக்கு வடக்கு அபிவிருத்தி, புனரமைப்பு, புனர்வாழ்வு அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவை சந்தித்து கலந்துரையாடவுள்ளது. (ம-4)


## இவரைக் காணவில்லை!



### கந்தையா பொன்னையா
(சோதிடர்)

துன்னாலை, இந்திரம்மன் கோயிலடியைச் சேர்ந்த கந்தையா பொன்னையா என்பவரைக் கடந்த செப்ரெம்பர் 10ஆம் திகதியிலிருந்து காணவில்லை. இவரைக் கண்டவர்கள் கீழ்க்காணும் முகவரியுடனோ அல்லது தொலைபேசி இலக்கத்துடனோ தொடர்பு கொண்டு அறியத்தரவும்.

திருமதி ச.மகாராணி *(மகள்)*
ஸ்ரீ அம்பாள் ஜுவெல்லர்ஸ்,
பஸ் நிலையம்,
நெல்லியடி.

கோபாலா கொமினிகேஷன்,
தொபேசி: 070-212372.
(94695)

## 2ஆம் ஆண்டு நினைவஞ்சலி

பிறப்பு 21 - 12 - 1911



பிரிவு 14 - 11 - 1999

### திருமதி தங்கவேல் இலட்சுமிப்பிள்ளை
- காரைநகர் -

(இந்தியாவில் மண்டபம் காம்ப் முன்னாள் கொன்றாக்ரரும், அனுராதபுரம், தங்கவேல் அரிசி ஆலை ஸ்தாபகரின் மனைவியும்)

திதி: 21-11-2001

எங்களைப் பாலூட்டித் தாலாட்டி
நித்திரை கொள்ளும் பொழுது
காதுக்குள் எறும்பு, பூச்சி புகாத வண்ணம்
பஞ்சினால் மூடி, கண்ணை
இமை காப்பதுபோல் காத்துச் சீராட்டி
வளர்த்த தாயே!

*தங்கவேல் பார்மஸி,*
*406, ஆஸ்பத்திரி வீதி,*
*யாழ்ப்பாணம்.*

உங்கள் பிரிவால் துயருறும்:
த.தியாகலிங்கம் (மகன்).

(94673)

## மரண அறிவித்தல்

### திருமதி வீரபத்திரர் அழகம்மா

காரைநகர், சிவகாமி அம்மன் கோயிலடியைப் பிறப்பிடமாகவும் தற்போது வட்டு மேற்கு, சிவன் கோயிலடியை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி வீரபத்திரர் அழகம்மா 19-11-2001 திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் வீரபத்திரரின் அன்பு மனைவியும் அருளம்மாவின் அன்புத் தாயாரும் புண்ணியமூர்த்தியின் அன்பு மாமியாருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்று (20-11-2001) செவ்வாய்க்கிழமை பிற்பகல் 1.00 மணியளவில் நடைபெற்றன.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
கணவர், மகள்,
மருமகன்,
பேரப்பிள்ளைகள்.

*சிவன் கோயிலடி,*
*வட்டு - மேற்கு,*
*வட்டுக்கோட்டை.*

(94694)

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



உயர்திரு.

### முருகுப்பிள்ளை தர்மலிங்கம்

*(B.A. (Cey) Dip. in Social Work)*

*(சமூக சேவை அலுவலர், பிரதேச செயலகம், பருத்தித்துறை)*

30 ஆண்டுகள் சமூக சேவை அலுவலராகப் பணியாற்றி இறுதியாக இன்று (21.11.2001) புதன் முதல் பருத்தித்துறை பிரதேச செயலகத்திலிருந்து ஓய்வு பெறும் இவரை அகமகிழ்ந்து பாராட்டுவதுடன் பல வளங்களும் பெற்று சிறப்பாக வாழ வாழ்த்துவோர் நண்பர்களான சமூக அலுவலர்கள்:-

1. திரு. க.தியாகராஜா
2. திரு. அ.அமிர்தலிங்கம்
3. திரு. எஸ்.யோகானந்தராஜா
4. திரு. ஆர்.ராஜலிங்கம்
5. திரு. ரி.கிருபாகரன்.

(C/19348)

## அண்ணன் வழியில் ...



## தம்பி மகேஸ்வரன்!
## அவரை ஆதரிப்போம்!

அர்த்தமுள்ள வேளையிலே அரசியலில் குதித்தவன்
அனாதரவாய் நின்றவர்க்கு அன்புக்கரம் கொடுத்தவன்
பொங்கு தமிழ் நிகழ்வெல்லாம் புகுந்துபங்கு எடுத்தவன்
**எங்கள் மகேஸ்வரனை ஆதரித்து வாக்களிப்போம்!**

சங்கத்தமிழ் மகனாய் சிங்களத்தில் நின்றவன்
சிங்களத்துக் கட்சியிலே செந்தமிழ் வென்றவன்
வன்னிவாழ் மக்களுக்காய் வண்டிலில் பயணம் செய்தவன்
**எங்கள் மகேஸ்வரனை ஆதரித்து வாக்களிப்போம்!**

பத்திரிகையாளருக்குப் பரிவுத்தொகை கொடுத்தவன்
பாராளுமன்றச் சம்பளத்தை பால்மாவாய் தருபவன்
யாழ்ப்பாண மக்களுக்காய் மருத்துவங்கள் கேட்பவன்
**எங்கள் மகேஸ்வரனை ஆதரித்து வாக்களிப்போம்!**

உரிமைக்குப் போரிடுவோரின் தடைநீக்கக் கேட்பவன்
ஊரெல்லாம் புகுந்துமக்கள் மத்தியிலே வாழ்பவன்
பாரெல்லாம் வியக்கப்பல நடவடிக்கைகள் எடுத்தவன்
**எங்கள் மகேஸ்வரனை ஆதரித்து வாக்களிப்போம்!**

வங்கக்கடல் வீரனுக்கு வாரிசாக நின்றவன்
பொங்குகடல் பயணத்தை நீக்கவழி செய்பவன்
நெஞ்சத்து நேர்மைமிகு நீதியான தலைவன்
**எங்கள் மகேஸ்வரனை ஆதரித்து வாக்களிப்போம்!**

தாய்க்குலத்தோர் படும்துயரை உலகறிய உரைத்தவன்
தீப்பிழம்பாய் எழுந்துபல தீயவற்றை எரித்தவன்
நோக்குநரின் பார்வையிலே வெற்றிஉறுதி பெற்றவன்
**எங்கள் மகேஸ்வரனை ஆதரித்து வாக்களிப்போம்!**

விழித்திருங்கள்! வாக்களியுங்கள்! வெற்றி நிச்சயம்!

- புத்திஜீவிகள் -

(C/19379)

**ஐக்கிய தேசியக் கட்சி** X

## புலிகளுடன் பேசவேண்டும் என்ற
# மக்கள் ஆணையை தேர்தலில் ஏகோபித்து வெளிப்படுத்துங்கள்!
## சி.வி.கே.சிவஞானம் உரை

யாழ்ப்பாணம்,நவ.21

தொடரும் யுத்தம் நிறுத்தப்பட்டு விடுதலைப்புலிகளுடன் பேச்சு நடத்தப்படவேண்டும் என்பதே தமிழ் மக்களின விருப்பம். இதனையே நான்கு தமிழ்க் கட்சிகளின் கூட்டமைப்பும் வலியுறுத்துகின்றது. எனவே இந்தத் தேர்தலில் வாக்களிப்பதன் மூலம் மக்கள் தமது ஆணையை ஏகோபித்த முறையில் வெளிப்படுத்த வேண்டும்.

- இவ்வாறு தெரிவித்தார் நான்கு தமிழ்க் கட்சிகளின் கூட்டமைப்பு வேட்பாளர் சி.வி.கே.சிவஞானம்.

நீர்வேலி வடக்கில் கடந்த சனிக்கிழமையன்று இடம்பெற்ற கட்சியின் தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் உரையாற்றும்போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் அங்கு தொடர்ந்து உரையாற்றியதாவது:-

தமிழ் மக்களின் விடுதலை உணர்வைப் பிரதிபலித்தே விடுதலைப் புலிகள் போராடுகின்றார்கள் என்பதைத் தேசிய ரீதியிலும், சர்வதேச ரீதியிலும் தெரியப்படுத்த வேண்டியது அவசியம்.

எமது போராட்டம் பயங்கரவாதம் அல்ல என்பதை தெட்டத் தெளிவாக எடுத்துக்காட்ட வேண்டியது இன்றைய காலத்தின் தேவை.

இந்த நான்கு தமிழ்க் கட்சிகளின் கூட்டமைப்பு சமாதானத்திற்கு எதிரானது என்று அண்மையில் ஜனாதிபதி தெரிவித்திருந்தார். உண்மையில் இக் கூட்டமைப்பு சமாதானத்தை ஏற்படுத்துவதற்காகவும் -

தமிழினம் ஒன்றுபட்டு, தமிழ்த் தேசியத் தலைமையின் கீழ் ஒரே குரலில் ஒருமித்த கருத்துடன், தேர்தலுக்குப் பின்பும் பேசுவதற்காகவும் ஏற்படுத்தப்பட்டதாகும்.

நாம் அனைவரும் ஒன்றாக இணைந்துள்ள தமிழ்க் கட்சிக் கூட்டமைப்பின் பிரதான நோக்கம், அரசு யுத்த நிறுத்தம் செய்து விடுதலைப் புலிகளுடன் பேச்சுக்களில் ஈடபட வேண்டும் என்பதே ஆகும்.

இந்தக் கோரிக்கையைக் கடந்த 1987 ஒக்ரோபர் முதல் வாரத்தில் இருந்தே நான் வலியுறுத்தி வந்துள்ளேன்.

தொடர்ந்து 1988 ஜுன் 15ஆம் திகதி மக்கள் விருப்பத்தை வெளிப்படுத்த வெள்ளைக்கொடிப் போராட்டத்தைக் குடாநாடு பூராகவும் நடத்தியுள்ளேன்.

தற்போது மக்கள் ஆணையை ஜனநாயக ரீதியில் வெளிப்படுத்தவே தேர்தலில் நிற்கின்றோம்.

விடுதலைப் புலிகள் தமிழ் மக்களின் விடுதலை உணர்வைப் பிரதிபலித்தே போராடிவருகின்றார்கள். இந்தப் போராட்டம் பயங்கரவாத யுத்தம் அல்ல என்பதை விடுதலைப் புலிகளை அண்மையில் தடை செய்த கனடா, பிரிட்டன் போன்ற நாடுகளுக்கும் மற்றும் சர்வதேச நாடுகளுக்கும் தெரியப்படுத்த வேண்டும்.

இந்தத் தேர்தலில் தெரிவுசெய்யப்படுபவர்கள் நாடாளுமன்றத்தில் மட்டுமல்ல நாடாளுமன்றத்திற்கு வெளியேயும் சர்வதேச அமைப்புக்களுடனும் இராஜிய அமைப்புக்களுடனும் சுயமாகப் பேசக்கூடியவர்களாக இருக்கவேண்டும் என்பதை வாக்காளர்கள் சிந்தித்துச் செயற்பட வேண்டும் - என்றார்.

இந்தக் கூட்டத்தில் கூட்டமைப்பின் ஏனைய வேட்பாளர்களான வீ. ஆனந்தசங்கரி, சுரேஸ் பிரேமச்சந்திரன் ஆகியோரும் உரையாற்றினார்கள். (ம-17)

## படகில் இத்தாலி செல்லவிருந்த 27 தமிழரே வாதுவையில் கைது!

கொழும்பு,நவ.21

கடந்த வெள்ளிக்கிழமை பாணந்துறை வாதுவையிலுள்ள வீடொன்றில் வைத்துக் கைதுசெய்யப்பட்ட 27 தமிழ் இளைஞர்களும் சட்டவிரோதமான முறையில் படகு ஒன்றின் மூலம் இத்தாலிக்குச் செல்லவிருந்தனர் என விசாரணைகள் மூலம் தெரியவந்திருப்பதாக பொலீஸார் தெரிவித்தனர்.

கொழும்பு கொட்டாஞ்சேனையில் வசிக்கும் நபரொருவர் இந்த 27 பேரையும் இத்தாலிக்கு அனுப்புவதற்கென வாதுவையிலுள்ள நபரொருவரிடம் ஒப்படைத்ததாகவும் -

இவர்கள் வாதுவையில் உள்ள வீடொன்றில் தங்கியிருந்த சமயமே கைது செய்யப்பட்டதாகவும் - பொலீஸார் தெரிவித்தனர்.

அந்த இளைஞர்களுக்கு புலிகளுடன் எந்தவிதமான தொடர்பும் இல்லை எனவும் -

அவர்களின் உறவினர்கள் வந்து அவர்களை அடையாளம் காட்டியுள்ளனர் எனவும் - பொலீஸார் மேலும் தெரிவித்தனர்.

இதேவேளை -

அந்த இளைஞர்கள் ஜே.வி.பியுடன் நெருங்கிய தொடர்புடையவர்கள் என ஐ.தே.கட்சியும் -

ஐ.தே.கட்சியினரின் ஏற்பாட்டிலேயே இந்த வீட்டில் அவர்கள் வந்து தங்கியிருந்தனர் என ஜே.வி.பியும் -

மாறி மாறிப் பிரசாரம் செய்து வந்தது குறிப்பிடத்தக்கது. (உ-4)

## 'பேனா பிஸ்ரல்'



**பேனா வடிவிலான பிஸ்ரல் ஒன்றை பம்பலப்பிட்டிய பொலீஸார் கைப்பற்றியுள்ளனர். பம்பலப்பிட்டிய பொலீஸ் இன்ஸ்பெக்ரர் டபிள்யூ. பிரேமசிறி அந்தப் 'பேனாத் துப்பாக்கியை' பரிசோதிப்பதைப் படத்தில் காணலாம்.**

**இந்தப் பிஸ்ரல் வவுனியாவில் கடமையாற்றும் பொலீஸார் ஒருவரால் பொரலஸ்கமுவவில் உள்ள வர்த்தகர் ஒருவரிடம் 7000 ரூபாவுக்கு அடகுவைக்கப்பட்டிருந்த சமயம் இந்தப் பிஸ்ரலைக் கைப்பற்றியதாகப் பொலீஸார் தெரிவித்தனர்.**

**இலகுவில் கிடைக்காத இத்தகைய பிஸ்ரல்களை விடுதலைப் புலிச் சந்தேக நபர்களே பயன்படுத்துவது வழமை. பாதாள உலகக் கோஷ்டியினருக்கு விற்பதற்காகக் குறிப்பிட்ட பொலீஸார் புலிகளிடம் இருந்து இந்தப் பேனாப் பிஸ்ரலை வாங்கியிருக்கலாம் என்று பொலீஸார் சந்தேகிக்கின்றனர்.**

## ஐரோப்பிய ஒன்றிய நாடுகளும் புலிகளை தடைசெய்யும்

கொழும்பு,நவ.21

ஐரோப்பிய ஒன்றியத்தில் அங்கம் வகிக்கும் 15நாடுகளும் தத்தமது நாடுகளில் விடுதலைப் புலிகள் இயக்கத்தை தடை செய்வதற்கு இணங்கியிருக்கிறார்கள் என வெளிவிவகார அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர் தெரிவித்திருப்பதாக செய்தி ஏஜென்ஸி ஒன்று நேற்றிரவு தகவல் வெளியிட்டது.

தற்போது அமெரிக்காவில் இருக்கும் லக்ஷ்மன் கதிர்காமர் அங்கிருந்தவாறு நேற்று செய்தி நிறுவனங்களுக்கு இந்தத் தகவலைத் தெரிவித்திருப்பதாகவும் அந்தச் செய்தி ஏஜென்ஸி தெரிவித்தது.

இந்த 15 நாடுகளும் பயங்கரவாத அமைப்புகளின் பட்டியலை விரைவில் வெளியிடவிருக்கின்றன.

அந்தப் பட்டியல்களில் விடுதலைப் புலிகளின் பெயரும் இடம்பெறவிருப்பதாகக் கதிர்காமர் கூறியுள்ளார். (உ-4)

## நினைவு தின விழா

யாழ்ப்பாணம்,நவ.21

சைவப் பெருவள்ளல் சேர் பொன். இராமநாதனின் நினைவுதின விழா, இன்று புதன்கிழமை காலை 6.30 மணிக்கு யாழ்.பல்கலைக் கழகத்தில் அமைந்துள்ள பரமேஸ்வரன் ஆலய சபா மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இந்த நினைவு தினத்தையொட்டி நாளைமறுதினம் வெள்ளிக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு கைலாசபதி கலையரங்கில் கலை நிகழ்வுகள் நடைபெறவுள்ளன. (ம-4)

## மாணவர்களும் மற்றோரும்
# சீஸன் டிக்கெட்டுக்களை இனி மத்திய பஸ் நிலையத்தில் பெறலாம்

யாழ்ப்பாணம்,நவ.21

பாடசாலை மாணவர்கள் மற்றும் வயதுவந்தோருக்கான பருவகாலச் சீட்டுக்கள் (சீஸன் டிக்கெட்) இனிமேல் யாழ்.மத்திய பஸ் நிலையத்தில் வைத்தே விநியோகிக்கப்படும் என வடபிராந்தியப் போக்குவரத்துச் சபையின் பொதுமுகாமையாளர் சு. மணிவாசகன் அறிவித்துள்ளார்.

இதுவரைகாலமும் கோண்டாவிலில் இயங்கும் யாழ்.டிப்போவில் வைத்தே பருவச் சீட்டுக்கள் விநியோகிக்கப்பட்டுவந்தன. தற்போது மாணவர்கள், பொதுமக்களின் நன்மையைக் கருத்தில்கொண்டு இந்தப் பணி யாழ்மத்திய பஸ்நிலையத்துக்கு மாற்றப்படவுள்ளது என்றும் அவர் அறிவித்துள்ளார்.

இது குறித்து அவர் விடுத்த செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

டிசெம்பர் மாதத்திற்கான பருவகாலச் சீட்டுக்களைப் பெறவிரும்புவோர் எதிர்வரும் 26ஆம் திகதியிலிருந்து டிசெம்பர் மாதம் 5ஆம் திகதி வரை புதிய இடத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

மேலும் - பருவகாலச் சீட்டு விநியோகம் ஒவ்வொரு மாதமும் முதல் மாதம் 26ஆம் திகதி தொடக்கம் அடுத்த மாதம் 5ஆம் திகதி வரை நடைபெறுகின்றது.

எனவே சம்பந்தப்பட்ட பாடசாலைகள் பருவகாலச் சீட்டுக்களைப் பெறுகின்ற மாணவர்களது நலன்கருதி பெயர்ப்பட்டியலை மாதாமாதம் 20ஆம் திகதி அளவில் டிப்போவுக்குச் சமர்ப்பிப்பார்களாயின் எம்மால் பருவகாலச் சீட்டுக்கள் எழுதப்பட்டு அந்த மாதம் 27ஆம், 28ஆம் திகதிகளில் பாடசாலைகளுக்கு ஒப்படைக்கக் கூடியதாக இருக்கும். அதன் மூலம் பாடசாலை மாணவர்கள் தங்களுககு வழங்கப்பட்ட பருவகாலச் சீட்டுக்களை முதலாம் திகதியிலிருந்தே பாவிக்கக கூடியதாக இருக்கும் என்பதையும் அறியத்தருகின்றேன் - என்று அதில் உள்ளது. (ம-7)

# யாழ்.வலய பாடசாலைகளின் அதிபர்களுக்கான கூட்டம்!

குருநகர்,நவ.21

யாழ்.கல்வி வலய பாடசாலை அதிபர்களுக்கான கூட்டம் நாளை வியாழக்கிழமை யாழ்.வலயக்கல்வி அலுவலகத்தில் நடைபெறவுள்ளதாகப் பணிப்பாளர் திருமதி செ.மகாலிங்கம் அறிவித்துள்ளார்.

யாழ்.கோட்டப் பாடசாலை அதிபர்களுக்கான கூட்டம் காலை 9 மணிக்கும், நல்லூர்க் கோட்டப் பாடசாலை அதிபர்களுக்கான கூட்டம் காலை 10 மணிக்கும், கோப்பாய்க் கோட்ட அதிபர்களுக்கான கூட்டம் பகல் 11 மணிக்கும் அன்றையதினம் நடைபெறும்.

வடக்குக் கிழக்கு மாகாணப் பொது நிர்வாக உள்ளூராட்சி அமைச்சினால் பாடசாலை அதிபர்களிடம் ஒப்படைப்பதற்கென அனுப்பி வைக்கப்பட்டுள்ள மனிதவளத் தகவல் முறைமை பற்றிய விவரங்கள் அடங்கிய படிவங்கள் ஒப்படைக்கப்பட உள்ளதுடன் அது தொடர்பான விளக்கங்களும் இக் கூட்டத்தில் இடம்பெற உள்ளதனால் சகல பாடசாலை அதிபர்களும் தவறாது பங்குகொள்ளுமாறு யாழ். வலயக் கல்விப் பணிப்பாளர் அறிவித்துள்ளார். (ம-15)

## தென்மராட்சி 'உ' அட்டைக்கு நிவாரணம்

தென்மராட்சி,நவ.21

தென்மராட்சி பிரதேசத்தில் 'உ' பங்கீட்டு அட்டை வைத்திருப்போருக்கான டிசெம்பர் மாத உலர் உணவுப் பொருள்கள் நேற்றுமுன்தினம் முதல் கொடிகாமம் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் வதிரிக் கிளையிலும், கொக்குவில் கிளையிலும் விநியோகிக்கப்பட்டு வருகின்றன.

இதேவேளை -

இடம்பெயர்ந்தோருக்கான டிசெம்பர் மாத உலர் உணவுப் பொருள்கள் அந்தந்தக் கிளைக் கடைகளிலும் வழங்கப்பட்டு வருவதாக சங்கப் பொது முகாமையாளர் ச.யோகராசா அறிவித்துள்ளார். (ம-117)

## மழை வெள்ளம் நிரம்பி
# மலகூடக் கழிவுகள் வெளியேறுவதால் தொற்றுநோய் பரவும் அபாய நிலை!
## வடமராட்சி அகதிமுகாம்களில் அவலம்

யாழ்ப்பாணம்,நவ.21

தொடரும் பெருமழையினால் வடமராட்சிப் பகுதியில் அமைந்திருக்கும் இடம்பெயர்ந்தோர் முகாம்களில் அமைக்கப்பட்டிருக்கும் மலகூடக் கிடங்குகளில் நீர் நிரம்பி, கழிவுகள் வெளியேறிவருகின்றன. வெளியேறும் கழிவுகள் வெள்ளத்துடன் கலந்து கொண்டிருப்பதால் அப்பகுதிகளில் தொற்று நோய்பரவும் அபாயம் ஏற்பட்டுள்ளது.

இதனால் முகாம்களில் வசிப்பவர்கள் மலகூடத்தைப் பாவிக்க முடியாத அவல நிலை ஏற்பட்டுள்ளது.

குறிப்பாக, சிங்கைநகர், புலோலி தெற்கு, தும்பளை லூர்த்துமாதா முகாம் ஆகிய முகாம்களே இந்த நிலைக்கு உள்ளாகியுள்ளன.

இந்த முகாம்களுக்கு விஜயம் செய்த செஞ்சிலுவைச் சங்க பருத்தித்துறைக் கிளையின் ஆரம்ப சுகாதாரப் பிரிவினர், பருத்தித்துறை சுகாதார வைத்திய அதிகாரியின் உதவியுடன் இந்த விடயத்தை வடமராட்சி வடக்கு பிரதேசசெயலரின் கவனத்திற்குக் கொண்டுவந்துள்ளனர்.

பிரதேசசெயலர் உடனடியாகவே பருத்தித்துறை நகராட்சி மன்றத்துடன தொடர்புகொண்டு நிலைமையை விளக்கி நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக்கொண்டார்.

ஆனால் சுமார் ஒருவாரகாலமாகியும் நகராட்சிமன்றம் இதனைக் கவனத்தில் எடுத்ததாகத் தெரியவில்லை. எந்தவித புனர் நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படாத நிலையில முகாம்கள் சுகாதார சீர்கேட்டுடனேயே இருந்து வருவதாகவும் -

இதனால் இப்பகுதியில், வயிற்றோட்டம், வாந்திபேதி, நெருப்புக் காய்ச்சல் போன்ற நோய்கள் பரவும் சாத்தியம் நிலவுவதாகவும் -

இலங்கைச் செஞ்சிலுவைச் சங்க பருத்திததுறைக் கிளை உபதலைவரும், ஆரம்ப சுகாதார பிரிவின் பிரதிநிதியுமான வி.யோபனா தெரிவித்துள்ளார். (ம-15)

# சுப்பிரமுனிய சுவாமிகளின் மறைவுக்கு ஆதீனம் அஞ்சலி

யாழ்ப்பாணம்,நவ.21

ஹவாய் தீவில் இயற்கை எய்திய தவத்திரு ஸ்ரீசுப்பிரமுனிய சுவாமிகளின் மறைவு குறித்து நல்லூர் திருஞானசம்பந்தர் ஆதீனம் அஞ்சலி செய்தி ஒன்றை வெளியிட்டிருக்கிறது.

அதில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

கொழும்புத்துறை சிவத்திரு யோகர் சுவாமிகளின் சிஷ்யரான தவத்திரு ஸ்ரீ சுப்பிரமுனிய சுவாமிகள் ஹவாய்த் தீவில் இயற்கையெய்தி இறைபதமடைந்து சிவயோக நிலைக்கு ஆட்பட்டிருப்பதையறிந்து நாம் எமது ஆத்மார்த்தமான அஞ்சலிப் பிரார்த்தனையைச் செலுத்துகின்றோம்.

சுவாமிகள் இந்து பீடத்தின் முதல்வராக இருந்து ஆன்மீக சம்பிரதாயங்களையும் சைவப் பாரம்பரியத்தையும் கட்டிக் காத்து வளர்த்ததோடல்லாமல் சிவ வழிபாட்டின் மேன்மையையும் மகத்துவத்தையும் புனிதத்தையும் உலக மக்களுக்கு எடுத்துரைத்து நெறிப்படுத்திய மகா ஞானியாவார்.

அமெரிக்காவிலே சைவத்தை நிலை நிறுத்திய பெருமை இவரையே சாரும்.

ஸ்ரீ சுப்பிரமுனிய சுவாமிகள் இறைபதம் பெற்றுத் திருவடி நிழலில் பெஞ்ஞான இன்ப நுகர்ச்சியைப் பெற நலலைக் குருமணியின் பாத கமலங்களைப் பணிந்து உளமாரப் பிரார்த்தித்து அஞ்சலிக்கின்றோம். சுவாமிகளின் புனித கைங்கரியத்தைத் தொடர்வதே நாம் அவருக்குச் செய்யும் கைம்மாறாகும் - என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ)

# சோளன் தேவை

எமது சங்கத்திற்கு சோளன் தேவைப்படுகிறது. ஒரு கிலோ ரூபா 25/=படி கொள்வனவு செய்யப்படும். வழங்குபவர்கள் கீழ்க் காணும் முகவரியில் ஒப்படைத்து பணத்தை உடன் பெற்றுக்கொள ளலாம்.

பொது முகாமையாளர்
யாழ்.மாவட்ட அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம்,
திருநெல்வேலி கிழக்கு,
கோப்பாய். (C-19380)



# கவிதை நூல் வெளியீட்டு விழா

*நூல்:* பாலையும் பயணமும்
*ஆக்கம்:* வைரமுத்து சுந்தரேசன்
*நாள்:* நாளை (22.11.2001) வியாழக்கிழமை
*நேரம்:* பிற்பகல் 3 மணி
*இடம்:* புவியியல் துறை மண்டபம், யாழ்.பல்கலைக்கழகம.
*தலைவர்:* திருமதி சாந்தி விக்னராஜா
*தலைவர், ELTC, யாழ்.பல்கலைக்கழகம்.*
*பிரதம விருந்தினர்:* பேராசிரியர் பொ.பாலசுந்தரம்பிள்ளை
*துணை வேந்தர், யாழ்.பல்கலைக்கழகம்.*

நிகழ்ச்சி நிரல்

தலைமையுரை
ஆசியுரை: 1. பேராசிரியர் ப.கோபாலகிருஷ்ண ஐயர்
கலைப் பீடாதிபதி, யாழ்.பல்கலைக்கழகம்
2. வண.பிதா து.ஜெபமோகன் விரிவுரையாளர், கிறிஸ்தவ, இஸ்லாமிய நாகரிகத்துறை, யாழ்.பல்கலைக்கழகம்
பிரதம விருந்தினர் உரை
வெளியீட்டுரை திரு.வ.சிவநாதன்
தலைவர், பொறியியல்துறை, யாழ்.பல்கலைக்கழகம்.
வாழ்த்துரை பேராசிரியர் அ.சண்முகதாஸ்
பட்டப்படிப்புகள் பீடாதிபதி யாழ்.பல்கலைக்கழகம்
திரு.மா.நடராசசுந்தரம்
முகாமைத்துவக் கற்கைகள், வர்த்தக பீடாதிபதி, யாழ்.பல்கலைக்கழகம்
நூல் விமர்சனம்: கலாநிதி இ.முருகையன்
கவிஞர் சோ.பத்மநாதன்
கோப்பாய் சிவம்
நூலாசிரியர் உரை
நன்றியுரை: திரு.வ.பரந்தாமன்
போதனாசிரியர் ELTC யாழ்.பல்கலைக்கழகம்.
திரு.சுந்தரம் சுந்தரேஸ்வரன்
விழா அமைப்புக் குழுத் தலைவர்.
(94702)



## சாவகச்சேரி மகளிர் கல்லூரி ஆசிரியருக்கு!

தென்மராட்சி,நவ.21
சாவகச்சேரி மகளிர் கல்லூரி ஆசிரியர்கள் அனைவரும் அவசிய மான படிவத்தில் கையொப்பமிடுவதற் காக நாளைமறுதினம் வெள்ளிக் கிழமை கரவெட்டி ரலன்ற் கல்வி நிலை யத்தில் இயங்கும் கல்லூரிக்கு வருகை தருமாறு அதிபர் திருமதி சிசிவநாதன் அறிவித்துள்ளார். (ம-117)



## அதிர்ஷ்டலாபச் சீட்டிழுப்பு பிற்போடப்பட்டுள்ளது

யாழ். பிரதேச செயலக நலன் புரிச்சங்கத்தால் இன்று (21.11.2001) புதன்கிழமை நடத்தப்படவிருந்த அதிர்ஷ்டலாபச் சீட்டிழுப்பு தவிர்க்க முடியாத காரணங்களால் 26.12.2001 ஆம் திகதிக்கு பிற்போடப்பட்டுள் ளது என்பதை அறியத்தருகின்றோம். தங்கள் கைவசமுள்ள சீட்டுக்களில் மேற்படி திகதியை மாற்றம் செய்து விற்பனை செய்யுமாறு அன்பாகக் கேட்டுக்கொள்கின்றோம்.

நலன்புரிச் சங்கம்,
யாழ்.பிரதேச செயலகம்.
(94700)



# UNIVERSITY OF JAFFNA SRI LANKA

University of Jaffna will entertain applications from suitably qualified persons upto 31.12.2001 for the undermentioned posts.

1. VISITING INSTRUCTORS IN PHYSICAL EDUCATION UNIT:
Cricket (Men)/ Soccer (Men)/ Chess (Men)/ Chess (Women)/ Volley Ball (Men)/ Volley Ball (Women)/ Tennis (Men)/ Karate (Men)/ Thachchi (Men)/ Thachchi (Women)/ Badminton (Men)/ Badminton (Women)/ Athletics - Track events (Men)/ Athletics - Field events (Men)/ Table Tennis (Men)/ Table Tennis (Women)/ Basket Ball (Men)/ Gymnastics (Men)/ Hockey (Women).

RATE OF PAYMENT:
**Rs.75/- per hour. (Maximum of Rs.900/- per Month)**

Application forms and other details may be obtained from the office of the Assistant Registrar/Establishments, University of Jaffna, Sri Lanka either in person or by sending a Money Order for Rs.20/- per form. Those who wish to obtain application forms by post are requested to send a Money Order/Postal Order drawn in favour of the Bursar, University of Jaffna together with a self - addressed stamped envelope 23x10 cm in size.

Applicants from the University System/Government Departments/ Corporations and Statutory Boards should channel their applications through the Heads of respective Institutions.

Applications received after the closing date will be rejected without intimation.

REGISTRAR
University of Jaffna,
Sri Lanka.
19th October 2001. (C/19381)



# அம்பாள் வெதுப்பக குதூகல திறப்பு விழா அழைப்பு

# OPENING CEREMONY OF AMBAL BAKERY

*அன்புடையீர்!*

நிகழும் கார்த்திகை மாதம் 7ஆம் நாள் (22.11.2001) வியாழக்கிழமை காலை 10.05-10.30 மணி வரையுள்ள தனுலக்கின அவிட்ட நட்சத்திரத்தில் வரும் சுபவேளையில் எமது வெதுப்பக திறப்புவிழாவை நிகழ்த்த உத்தேசித்துள்ளோம். அத்தருணம் எமது உற்றார், உறவினர், வாடிக்கையாளர், நண்பர்கள் அனைவரும் தங்கள் குடும்ப சமேதரராய் வருகை தந்து விழாவைச் சிறப்பிக்குமாறு தாழ்மையுடன் கேட்டுக்கொள்கின்றோம்.

*அம்பாள் வீதி,*
*வல்வெட்டித்துறை.*

தங்கள் நல்வரவை நாடும்:
இ.அமரசேனாதிபதி
குடும்பத்தினர். (94704)





யுத்த நிறுத்தம் செய்து, விடுதலைப் புலிகளுடன் பேசித் தீர்வு காணவேண்டும் என்று 14 வருடங்களுக்கு முன்பு தூர நோக்குடன் வலியுறுத்திப் பேசியவரும் மக்களின் அபிலாஷைகளைப் பூர்த்திசெய்யக் கூடியவரும் ஆற்றலும், அறிவும், அனுபவமும் மிக்கவரும் கூட்டுறவாளர்களின் நலனில் அக்கறை கொண்டவருமாகிய நான்கு தமிழ்க்கட்சி கூட்டமைப்பின் வேட்பாளரின் இல. 5 க்குப் புள்ளடி இட்டு வெற்றிபெறச்செய்வோம்.

# திரு.சீ.வீ.கே.சிவஞானம்

**(தமிழர் விடுதலைக் கூட்டணி)**

| | |
|---|---|
| சின்னம் | |
| இலக்கம் | 5 |

இ.முருகானந்தன்,
பா.நந்தன்.
கூட்டுறவுப் பணியாளர்கள்.

(93932)





# நாடாளுமன்றப் பொதுத்தேர்தல் - 2001

## கல்வி அபிவிருத்தியே எனது இலக்கு

## உங்கள் வாக்குகளைத் தாருங்கள்.

### ஆசிரியர்கள், மாணவர்கள், பெற்றோர்கள் அனைவரும் அணிதிரள்வோம்.

அன்பார்ந்த ஆசிரியர்களே!

அறிவே உலகின் முதற் பொருள். கல்வியே அதன் பொருள். ஒரு தனி மனிதனை, ஒரு குடும்பத்தை, ஒரு சமுதாயத்தை, ஓர் இனத்தை, ஒரு நாட்டை, ஏன் இந்த உலகத்தையே வழி நடத்துவது கல்வியே. கல்விக்கு நிகர் எதுவுமேயில்லை. கல்வியைக் கற்பிப்பவனே ஆசிரியர். அவனே உலகின் முக்கியமான, முதன்மையான தொழிலாளி. ஆசிரியத்தொழில் உலகின் முதற்றொழில். எல்லாத் தொழிலுக்கும் மூலாதாரமான கற்பித்தல் ஒரு புனிதமான தொழில். அந்தப் புனிதமான தொழிலைச் செய்யும் ஆசிரியனும் புனிதமானவனே. உலகில் எல்லாத் தொழிலாளரையும் உருவாக்குபவன் ஆசிரியன். அவன் சமுதாயத்தில் உண்மையாக, முதன்மையாக மதிக்கப்பட வேண்டியவன். அவன் தொழிலுக்கு நல்ல ஊதியம் வழங்கப்படவேண்டும் அவனுக்கு கொடுபட வேண்டிய ஊதியம் நிலுவை (Arrears) இன்றி உடன் வழங்கப்பட வேண்டும். ஆசிரியன் உரிமை பற்றி, நலன் பற்றி கற்றல் - கற்பித்தல் செயற்பாட்டுத் தேவைகள் பற்றிக் கதைக்க, குரல் கொடுக்க நாடாளுமன்றத்தில் ஒருவனாவது தேவை. ஆசிரியன் மன நிறைவோடு, நிம்மதியோடு கற்பிக்க வேண்டும். அப்பொழுதுதான் கல்வியில் உண்மையான அபிவிருத்தி ஏற்படும். அதுவே ஓர் இனத்தின், ஒரு நாட்டின் அபிவிருத்தியாகும்.

அன்பார்ந்த மாணவச் செல்வங்களே, பெற்றோர்களே!

யாழ்ப்பாண மக்களின் முதற்செல்வம் கல்வியே. அவர்களின் முதுகெலும்பு கல்வியே. யாழ்ப்பாண மக்கள், கல்வியில் அதிக பற்றுக் கொண்டவர்கள் என்பது உலகறிந்த உண்மை. ஆனால் கல்வியில் முன்னேற வேண்டிய வசதிகள் அனைத்தையும் அரசாங்கம் செய்துகொடுப்பதில்லை. இலவசப் புத்தகங்கள் எல்லா மாணவர்களுக்கும் வழங்கப்படுகின்றன என்று கூறிக்கொண்டாலும் தமிழ் மாணவர்கள் எல்லோரினது கைகளுக்கும் எல்லாப் புத்தகங்களும் வந்து சேருவதில்லை. தாமதமாக வருவதும், வந்துசேராமலும் இருக்கின்றன. இறுதிப்பரீட்சைகள் நெருங்கிவிட்டன. பாடப்புத்தகங்களை அடிப்படையாக வைத்தே பரீட்சைகள் நடத்தப்படும் என்று பரீட்சைத் திணைக்களங்கள் கூறுகின்றன. தெளிவான மாதிரி வினாக்களும் ஆசிரியர்களுக்கோ மாணவர்களுக்கோ வந்து சேரவில்லை. இந்நிலையில் மாணவர்கள் பரீட்சைக்கு எவ்வாறு தயார் செய்வது?

பாடசாலைகளில் இன்று நவீன சாதனங்களைப் பயன்படுத்தி நவீனமுறையில் கல்வியில் அபிவிருத்தி ஏற்பட்டுக்கொண்டிருக்கின்றது. தென்னிலங்கைப் பாடசாலைகளுக்கு வழங்கப்படும் நவீனசாதனங்கள் போன்ற சாதனங்கள் எமது பாடசாலைகளுக்கும் வழங்கப்பட வேண்டும். விஞ்ஞான, தொழில்நுட்ப மற்றும் ஆராய்ச்சிகளை மேற்கொள்வதற்கு வேண்டிய சகல வளங்களும் யாழ்.பல்கலைக்கழகத்திற்கு வழங்கப்படவேண்டும். தொழில்நுட்பக் கல்லூரிகளும் நவீனமயமாக்கப்படவேண்டும். ஓர் இனம், ஒரு நாடு சர்வதேச தரத்தில் வளர்ச்சியடைய ஆங்கிலம் மிக அவசியம் என்பதை ஒவ்வொரு மகனும் உணர்ந்து அதனைக் கற்க, கற்பிக்க ஊக்குவிக்க வேண்டும். ஆங்கிலக் கல்வியின் அபிவிருத்திக்கு வேண்டிய வழிவகைகளைக் காண்பதோடு ஆங்கிலப் புத்தகங்கள் கிராமியப் பாடசாலைப் பிள்ளைகளின் நிலைமைகளையும் கருத்திற்கொண்டு, அவர்களும் ஆங்கிலத்தைப் படிக்கத் தூண்டுபவையாகவும் எழுதப்படவேண்டும்.

கணிப்பீட்டுப் பரீட்சைமுறை மாற்றி அமைக்கப்படவேண்டும். வகுப்பறைகள் வசதியாக, ஒழுங்காக அமைக்கப்படும் வரை, பாடப் புத்தகங்கள் ஒழுங்காகக் கொடுக்கப்படும் வரை மாணவர்களது குடும்பப் பொருளாதாரம் நல்ல நிலையை அடையும்வரை கணிப்பீட்டுப் பரீட்சைமுறை எமது நாட்டுக்குப் பொருந்தாது. பொருளாதார வளம் படைத்த மேற்கு நாட்டுமுறையை எமது நாட்டுக்குத் திணிக்கக் கூடாது. கணிப்பீட்டு முறையில் உண்மையான கற்றல், கற்பித்தல் செயற்பாட்டை நடைமுறைப்படுத்த முடியாமல் இருக்கிறது. பொருத்தமற்ற பரீட்சை வைப்பதிலும், படிவங்கள் நிரப்புவதிலுமே ஆசிரியர்கள் தமது நேரத்தை வீணாக்குகின்றனர். இப்படியாகத் தீர்க்கப்படவேண்டிய கல்விப்பிரச்சினைகள் பல உள.

கல்வி அபிவிருத்தி என்னும் உன்னத, புனித இலட்சியத்திற்காகவே நான் இத்தேர்தலில் போட்டியிடுகின்றேன். உரிமைக்காகப் போராடுகின்ற வேளையில் கல்வி அபிவிருத்திக்காக உழைப்பதும் எமது மிக முக்கிய கடமையாகும். விடுதலைப் புலிகளும் கல்வியின் முக்கியத்துவத்திற்காக கல்விக்கெனத் தனிப்பிரிவு அமைத்துச் செயற்படுகின்றனர்.

எனவே அன்பார்ந்த தமிழ்மக்களே கல்வி அபிவிருத்தி என்னும் உன்னத, புனித இலட்சியத்துக்காக நாடாளுமன்றத்தில் குரல் கொடுக்க உங்கள் குடும்பத்தின் ஒரு சில வாக்கையாவது எனது கட்சியின் சின்னமான மணிக்கூட்டுக்கு நேரேயும் எனது இலக்கமான (2) இரண்டிற்கு நேரேயும் புள்ளடியிட்டு என்னை நாடாளுமன்றத்துக்குத் தேர்தெடுக்கும்படி மிக்க அன்புடனும் தாழ்மையுடனும் வேண்டுகின்றேன்.

# கந்தையா வேலும்மயிலும்

## புதிய ஜனநாயகக் கட்சி.

| 1 | ~~2~~ | 3 | 4 | 5 | 6 | 7 | 8 | 9 | 10 | 11 | 12 |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|

(C/93934)

என்றும் உங்கள் ஆசிரியர்

# அசுர குணங்கள் அகலட்டும்!



செம்மொழியான தமிழுக்குச் சிறப்புடைத் தலைவன் முருகன் ஆவான். 'முருகு' என்றாலும் முருகனைக் குறிக்கும். தமிழில் மூன்று இனம் உண்டு. அவை வல்லினம், மெல்லினம், இடையினம் எனப்படும். மெல்லினத்தில் ஒரு எழுத்து - மு. இடையினத்தில் ஒரு எழுத்து - ரு. வல்லினத்தில் ஒரு எழுத்து - கு. இந்த மூன்றும் சேர்ந்து 'முருகு' என்றாகிறது. மூவினத்தில் மூன்றெழுத்தைக் கொண்டு முருகப்பெருமானின் திருநாமம் அமைந்துள்ளது. இவ்விதமான சிறப்புப் பொருந்திய அழகிய நாமத்தையுடைய அழகன் முருகன், அவுணர்களை அழிப்பதற்கென்றே அகிலத்தில் உதித்தவன். மருவுமடியார்கள் மனத்தில் விளையாடும் வேலன் அவன்.

தேவர்களை எல்லாம் சிறையிலிட்டு, வதைத்து துன்பப்படுத்திய அசுரர்களான சூரபன்மன், சிங்கமுகன், தாரகாசுரன் ஆகியோரை அழித்தொழிக்க வேண்டுமென சிவபெருமானது அருளால் உதித்தவன். சிவனிடமிருந்து வரம் பெற்ற சூரபன்மனாதியோருக்கு ஆணவமும், அகங்காரமும், மமதையும் ஏற்பட்டன. கொடுத்தவனே பறிப்பது முறையன்று என எண்ணித் தன்னுடைய அம்சமாகவே அறுமுகப் பெருமானைத் தோற்றுவித்தருளினார்.

சூரன் யார்? எமது மும்மலங்களுமே உருவாகக் கொண்டவன். எமது ஆணவமும், அகங்காரமும், மமதையும், செருக்கும், நீண்ட நாள்களுக்கு நிலைக்கமாட்டாதென்பதற்கு சூரபன்மன் வரலாறும் இன்று நடைபெறும் சூரசங்காரத் திருவிழாவும் ஓர் எடுத்துக்காட்டாகும்.

## அடியவன்

முருகப் பெருமான் யுத்தத்திற்கு ஆயத்தமானார். இதை அறிந்த சூரபன்மன் "பால்மணம் மாறாப் பாலகனோடு, ஒரு சிறுவனோடு, நான் போராடுவதா? சீ வெட்கம்!" என்று எள்ளி நகையாடிப் பொருமினான்.

இருவரும் யுத்தகளத்தில் சந்தித்தனர். கருணை நிறைந்த முகத்தையுடைய முருகப் பெருமானைக் கண்டான் சூரன்.

"முண்டக மலந்தன்ன
மூவிரு முகங்களோடு.....
தண்டையுஞ் சிலம்புமார்க்கும்...
சரணமும் தெரியக் கண்ட"

சூரனுக்கு ஒரு கணம் மயக்கத்தை ஏற்படுத்தின. முருகனின் திருப் பெருவடிவத்தைக் கண்டவன் காதலாகிக் கண்ணீர் மல்கி உள்ளம் உருகினான். எல்லாவற்றையும் மறந்து முருகப் பெருமானது பாதத்தைப் பணிந்து சரண்புக ஆசைப்பட்டான்.

## இன்று சூரசங்காரம்

ஆணவ மேலீட்டினால் ஆணவம் அழிவைத் தரும் என்பதை உணராது மனம்மாறிய சூரன் முருகனோடு போர் புரிந்தான். கடுஞ்சமர் நடந்தது. இறுதியில் கருணைக் கடவுளாகிய கந்தன் சூரனை அழிக்காது மன்னித்து அவனுடலை இருகூறாக்கி சேவலும் மயிலுமாக ஆக்கிக் கொண்டான். தெரிந்தோ தெரியாமலோ தவறு செய்பவன் பிழைகளை உணர்ந்து மன்னிப்புக் கேட்டால் மன்னிக்கப்படுவான். இறைவன் ஒரு நாளும் புறக்கணிக்கமாட்டார் என்பதை முருகக் கடவுளின் செயல் எமக்கெல்லாம் எடுத்துக் காட்டுகின்றதல்லவா?

முருகப் பெருமான் மமதையை அடக்கி மயிலாகவும் செருக்கை அடக்கிச் சேவலாகவும் மாற்றினார்.

எமது வாழ்வில் மானிடராய்ப் பிறந்த நாம் மனம், மொழி, மெய் ஆகிய மூன்றாலும் அறம்புரிய வேண்டும். எமது அறிவு உயர உயர அடக்கம் உயர வேண்டும். உள்ளத்தில் இறைபக்தி இருக்க வேண்டும். நியாயம் அல்லாத வழிகளில் பொருள்களைச் சேர்க்காமல் நேர்வழியிலேயே சம்பாதிக்க வேண்டும். மற்றவர் மனம் புண்படாமல் பேசி தியாகங்கள் புரிந்து, விட்டுக் கொடுக்கும் மனப்பான்மையுடன் வாழவேண்டும் என்பது கந்தபுராணம் கற்றுத்தரும் பாடம்.

உணவுக்கு உப்பு இன்றியமையாதது போல் வாழ்வுக்கு அடக்கம் இன்றியமையாதது என்று நாம் உணர வேண்டும். "நமக்கு எல்லாம் தெரியும் மற்றவர்களுக்கு என்ன தெரியும்?" என்று நினைந்து செருக்குறக் கூடாது. பணிவு பெருமை சேர்க்கும். பண்பு சிறப்பைத் தரும். "எல்லா நாடும் நமது நாடு, எல்லா மக்களும் நமது சகோதரர்" என்று கருதி சாந்தமாகவும் அன்பாகவும் வாழவேண்டும். அப்பொழுதுதான் எமது அசுரகுணங்கள் எம்மை விட்டு அகன்று தேவ குணங்கள் எமக்கு ஏற்படும். நாம் ஆறுமுகப் பெருமானின் அருட் பெருங் கருணைக்குப் பாத்திரமாவோம். ☆

## வடமராட்சியில் புரட்சி கீதங்கள்

தென்மராட்சி,நவ.21

ஐந்து வருட இடைவெளியின் பின்னர் விடுதலைப் புலிகளின் புரட்சி கீதங்கள் வடமராட்சிப் பகுதி வீதிகளில் கேட்கக் கூடியதாக உள்ளது.

பிரசாரத்தில் ஈடுபடும் வாகனங்கள் புரட்சி கீதங்களை ஒலிபரப்பிய வண்ணம் செல்வதைக் காணக்கூடியதாக உள்ளது.

தலைவரின் பிறந்தநாள் அண்மித்துவரும் வேளையில் புரட்சி கீதங்கள் ஒலிபரப்பாவது மக்களுக்கு ஆச்சரியத்தை ஏற்படுத்தியுள்ளது.

படைமுகாம் பகுதியிலும் இக் கீதங்கள் ஒலிபரப்பாகின்றன. படையினர் கைதட்டி அவற்றை ரசிப்பதையும் காணமுடிகிறது. (ம-117)

## கருத்தரங்கு

யாழ்ப்பாணம்,நவ.21

யாழ்.பல்கலைக்கழக புவியியற் துறையினரின் ஏற்பாட்டில் இன்று புதன்கிழமை பிற்பகல் 3 மணிக்கு "புனரமைப்புக்கும் புனர்நிர்மாணத்திற்குமான திட்டமிடுதல்" என்ற தலைப்பில் கருத்தரங்கு நடைபெறவுள்ளது.

யாழ்.பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் பொ.பாலசுந்தரம் பிள்ளை தலைமையில் புவியியற் துறை மண்டபத்தில் நடைபெறவுள்ள இந்தக் கருத்தரங்கில் ஜேர்மன் ஆர்க் கொட்ராஸ் நிறுவன நிர்வாக இயக்குநர் கலாநிதி.ஜோகன் ஹோனர் கருத்துரையாற்றவுள்ளார்.

இந்தக் கருத்தரங்கில் ஆர்வமுள்ள அனைவரையும் கலந்து பயன்பெறுமாறு ஏற்பாட்டாளர்கள் தெரிவித்தனர். (ம-6)

★ ★ ★

யாழ்ப்பாணம்,நவ.21

யாழ்.பல்கலைக்கழக முகாமைத்துவ மாணவர் மன்றத்தின் ஏற்பாட்டில் நாளை வியாழக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு 'தேர்தல் முறைமையும் 12 ஆவது நாடாளுமன்றத் தேர்தலும்' என்ற கருப்பொருளில் கருத்தரங்கு ஒன்று நடைபெறவுள்ளது.

முகாமைத்துவ மண்டபம் - iii இல நடைபெறவுள்ள இந்தக் கருத்தரங்கில் யாழ்.பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் பொ.பாலசுந்தரம் பிள்ளை கருத்துரையாற்றுவார். இந்தக் கருத்தரங்கில் அனைவரையும் கலந்து பயன்பெறுமாறு ஏற்பாட்டாளர்கள் கேட்டுள்ளனர். (ம-6)

## 28ஆவது ஆண்டுக் கூட்டம்

சண்டிலிப்பாய்,நவ.21

அரசாங்க மருந்துக் கலவையாளர்கள் சங்க யாழ்.கிளையின் 28 ஆவது வருடாந்தப் பொதுக் கூட்டம் எதிர்வரும் 25ஆம் திகதி ஞாயிற்றுக் கிழமை முற்பகல் 9.30 மணிக்கு யாழ். நகரிலுள்ள மாவட்ட கூட்டுறவுச் சபை மண்டபத்தில் நடைபெறவுள்ளது. கிளையின் தலைவர் இ.செல்வரத்தினம் தலைமையில் நடைபெறவுள்ள இக்கூட்டத்தில் பல முக்கிய தீர்மானங்கள் நிறைவேற்றப்படவுள்ளதாக கிளையின் செயலாளர் தெரிவித்தார். (ம-135)

## தொடர்பு கொள்ள கோரிக்கை

யாழ்ப்பாணம்,நவ.21

செஞ்சிலுவை சர்வதேச குழுவின யாழ்.அலுவலகத்துடன் கீழே குறிப்பிடப்பட்டுள்ளவர்களை உடனடியாகத் தொடர்பு கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

அழைக்கப்பட்டுள்ளவர்களின் பெயர் விவரம் வருமாறு:-

★இளையதம்பி சிவானந்தம் (பொது நூலகம், சாவகச்சேரி நகர சபை.)

★மூர்த்தி குமாரசாமி (5ஆம் ஒழுங்கை, உடுவில்.)

★ஆறுமுகம் தங்கராஜா (சுதுமலை தெற்கு, மானிப்பாய்.)

★றொபேட் கென்னடி சவிரிமுத்து (யாழ்ப்பாணம்)

★சின்னத்தம்பி லோகநாதன், லோகநாதன் சுகந்தன், லோகநாதன் கிரிஜா (கண்டி வீதி, டிறிபேக் கல்லூரி அருகில், சாவகச்சேரி.)

★சண்முகசுந்தரம் சிவபாதம் (உசன், மிருசுவில்.)

ஆகிய 8 பேரையும் இல.120, கோயில் வீதியில் உள்ள செஞ்சிலுவைச் சங்க சர்வதேச குழு அலுவலகத்துடன் உடனடியாகத் தொடர்பு கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (ம-6)

# உலகியல் மூலம் இறைநிலை அடையும் மார்க்கத்தைக் காட்டிய இராமநாத வள்ளலார்

சோ பொன்னம்பலம் இராமநாதன் அவர்கள் சைவப் பெருங்குடி மகன். ஈழத்தாய் பெற்றெடுத்த தவப்புதல்வன். ஈழம்வாழ் மக்களின் நெஞ்சங்களில் நிறைந்துவிட்ட தேசியத் தலைவன். இனமத வேறுபாடின்றி இலங்கை மக்களுக்கெனப் பெருந்தொண்டுகள் பல புரிந்தார். இதனால் எல்லோருடைய மதிப்பும், அன்பும் இவருக்குக் கிடைத்தது. பல்வேறு பணிகளுக்கிடையிலும் சிறந்த அனுபூதிமானாகவும், ஆத்மஞானியாகவும் விளங்கினார்.

உலகியலில் இருந்து கொண்டே இறைநிலை அடையலாம் என்று

## இன்று அவரது நினைவு நாள்

வாழ்ந்து காட்டிய இல்லறஞானி சேர் பொன்.இராமநாதன் என்றால் மிகையாகாது. இவர் 1851ஆம் ஆண்டு அவதரித்து, 80 ஆண்டுகள் நிறைவாழ்வு வாழ்ந்து, 1930ஆம் ஆண்டு கார்த்திகை மாதத் திருவோண நட்சத்திரத்தில் சமாதி அடைந்தார். சமாதி அடைந்த இந்நாளில் அவரை நினைவு கூருவது சைவத்தமிழ் மக்கள் ஒவ்வொருவரினதும் கடமையாகும்.

காலத்திற்குக் காலம் அவதார புருஷர்கள் அவதரிக்கிறார்கள். அவர்தம் நோக்கம் நிறைவு பெற்றதும் பிரம்மத்துடன் ஐக்கியமாகிறார்கள். இந்த வகையில் அவதரித்த ஓர் அவதார புருஷரே சேர் பொன்னம்பலம் இராமநாதன் அவர்கள். 'தவமும் தவமுடையார்க்கே ஆகும்' என்றபடி, இவரது தந்தையார் இராமேஸ்வரப் பெருமானை வழிபடச் சென்ற பொழுது, எல்லா நலன்களும் நிரம்பப்பெற்ற ஒரு சற்புத்திரனைத் தந்தருள வேண்டுமென்றும், தேவரீர் அருள் பாலித்தால் அப்புதல்வனுக்குத் தேவரீரின் திருநாமத்தையே இடுவேன் என்றும் வேண்டிக் கொண்டார். அவ்வாறே இராமேஸ்வரனின் அருட் கடாட்சத்தால் பொன்னம்பல முதலியாருக்கு இரண்டாவது மகனாக அவதரித்தவரே சேர்பொன். இராமநாத வள்ளலார் ஆவார். முனைத் தவமுடைய இராமநாதன் எல்லா நலன்களும் வாய்க்கப் பெற்றவராய், பல்துறைப் புகழீட்டிய பெருமகனாய், சிறந்த ஆத்மஞானியாய் விளங்கினார். கருவிலே திருவுடைய இராமநாதன் இயல்பாகவே இறைநாட்டம் கொண்டவராக விளங்கினார்.

இளமைக்காலத்தில் தந்தையாரிடம் வரும் ஞானிகள், அருளாளர்களால் ஆசீர்வதிக்கப்பட்டார். அவர்களது அருட்போதனைகளில் ஈடுபாடுடையவராகவும் காணப்பட்டார். சிறந்த கல்விமானாக - சிறந்த வழக்கறிஞராக - சிறந்த அரசியல் ஞானியாக - சமூகத் தொண்டனாக - சமயத் தொண்டனாக - கல்விப் பணியாளனாகச் சிறந்து விளங்கிய போதும் ஆத்மஞானத்தில் சற்றும் விலகாதவராக விளங்கினார். ஏனைய பணிகளுக்கிடையிலும் யோகசாதனை புரிவதிலும், இறைவழிபாட்டிலும், ஞான நூல்கள் ஓதி உணர்வதிலும் ஊக்கங் காட்டினார்.

அருட்பரானந்த சுவாமிகளைச் சற்குருவாக வாய்க்கப் பெற்றார். குருநோக்கம் பெற்றபின் காந்தம் இரும்பை வலிப்பதுபோல் இறை ஞானத்திலேயே ஆழ்ந்து போவார். குருவருள் இன்றித் திருவருள் இல்லை என்ற நிலையை உணர்த்தினார். குருவருள் பெற்றபின் அவரது வாழ்க்கையும் போக்கும் வெகுவாக மாறி




விட்டன. நடை, உடை, உணவு யாவும் ஆன்மீகவழியில் அமைந்தன. ஆழ்ந்த ஆத்மஞானமும், பற்றற்ற போக்கும், அஞ்சா நெஞ்சும், வீரமும் இவரிடம் மிகுதியாகக் காணப்பட்டன. இவரது ஆத்மஞானம் கடல் கடந்த நாடுகளிலும் பரவியது. அமெரிக்கா வரை சென்று பொஸ்ரன், நியூயோர்க், வாஷிங்ரன் முதலிய நகரங்களிலும், தேவாலயங்களிலும், பல்கலைக்கழகங்களிலும் ஞானப் பேருரைகள் நிகழ்த்தினார். அமெரிக்க மக்கள் மனதில் ஆத்மீக விதையை விதைத்திட்டார். பலர் இதனால் கவரப்பட்டு இராமநாதனையே குருவாகப் பற்றிக் கொண்டனர். சுவாமி விவேகானந்தருக்குப்பின் அமெரிக்காவில் ஞான முழக்கம் செய்தவர். சேர் பொன். இராமநாதன் என்னும்போது எமது உள்ளங்கள் குதூகலிக்கின்றன. இவரது சொற்பொழிவுகள் 'மேற்கு நாடுகளிடையே காணப்படும் ஆத்மீகப் பண்பு' என்ற ஆங்கில நூலாக வெளிவந்துள்ளது.

இலங்கை மக்கள் அவருக்கு அளித்த பிரியாவிடையின் போது, 'இதுவரை ஆற்றிய அரசியல், சட்டத்துறை, கல்வி, சமயம் முதலாம் பணிகளிலும் மேலானபணி ஒன்றுளது என உணர்கிறேன்' என்றும் - இப்பெரும் பணியைத் தெரிந்து கொண்டவேளை இதுநாள்வரை அரசியலிலும், நீதிமன்றத்திலும் வீணாகக் கழிந்துவிட்டது என்றார். இக் கூற்றின் மூலம் தமது பணி முழுதும் ஆத்மீகப்பணியாகவே இருந்திருக்க வேண்டுமென்ற கருத்தை வெளிப்படுத்தினார்.

பண்டிதை
திருமதி வை.கணேசபிள்ளை

பல ஏக்கர் நிலப்பரப்புக்களைக் கல்லூரிக்கும், ஆலயங்களுக்கும் சொத்தாக்கிவிட்டு இவையாவும் பரமேஸ்வரன் சொத்து என்றார். இது அவர் தம்மை முழுமையும் இறைவனிடம் அர்ப்பணித்து யாவும் சிவன் செயல் என்று வாழ்ந்த நிலையைக் காட்டுவதாகும். மனிதப்பிறவியின் நோக்கத்தை நிறைவேற்றிய வள்ளலாருக்கு வானவர் நாடு வழிதிறந்தது. பிரமச்சரியம், கிருகஸ்தம், வானப்பிரஸ்தம், சந்நியாசம் என்ற படி நிலைகளில் முறையாக வாழ்ந்து, முழுத்துறவு பூண்டு பற்றற்ற ஞானியாகி, இன்று சீவன்முத்த நிலையில் இறைவனுடன் சங்கமமாகி விட்டார். இவரது பூதவுடல் அவருக்கென அமைக்கப்பட்ட சமாதியில் அமர்த்தப்பட்டு, கோயில் எழுப்பி, சிவ பிரதிஷ்டை செய்து, பூசைகள் நடைபெற்று வருகின்றன. சேர் பொன். இராமநாதன் புகழ் உலகுள்ள வரைக்கும் நின்று நிலவுக..! ☆


## பாராட்டி நன்றி நவில்கின்றோம்



திரு.ந.யோகராஜன்
B.A., P.G. Dip. In Edu. (O.U.S.L.), S.L.T.E.S.
DEPUTY ZONAL DIRECTOR,
DEPARTMENT OF
TECHNICAL EDUCATION & TRAINING
ZONE 4 (NORTH & EAST)

எமக்கு கடந்த ஒன்பது வருடகாலமாக நாள் சம்பளத்தில் வேலைசெய்த எங்களை நிரந்தர நியமனம் பெற்றுத் தந்தமைக்கு எமது உள்ளம் கனிந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றோம். மேலும் பணிப்பாளரின் பணிகள் தொடர மனதார வாழ்த்துகின்றோம்.

இ.இளங்கோவன்
குடும்பத்தினர்.

(94726)

## கண்ணீர்க் காணிக்கை

எமது கல்லூரியின் பீடாதிபதி
கலாநிதி திருநாவுக்கரசு கமலநாதன்
அவர்களின் அன்புத் தாயார்
திருமதி
அமுதவல்லி திருநாவுக்கரசு
அவர்கள் இறைபதம் எய்தியமையையிட்டு கண்ணீர்ப் பூக்களைக் காணிக்கையாக்குவதோடு, குடும்பத்தவரின் துயரில் நாமும் பங்குகொள்கின்றோம்.

கல்விசாரா உத்தியோகத்தர்கள்,
யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி.

(94723)

## வீடு வாடகைக்குத் தேவை

இருவர் கொண்ட சிறிய குடும்பத்துக்கு மின்சார வசதியுடன் சிறிய வீடு ஒன்று வாடகைக்குத் தேவை.

தொடர்புகொள்ளவேண்டிய தொலைபேசி எண், திகதி, நேரம் என்பவற்றுடன் தொடர்பு கொள்க. நல்ல வாடகை தரப்படும்.

விளம்பர இல.1397
C/O உதயன்,
யாழ்ப்பாணம்.


## சிறுவர் உரிமைகள் பற்றிய விழிப்புணர்வு கருத்தரங்கு

சண்டிலிப்பாய்.நவ.21

சிறுவர் பாதுகாப்பு நிறுவனம், வட இலங்கைப் பத்திரிகையாளர் சங்க உறுப்பினர்களுக்கு நடத்தும் சிறுவர் உரிமைகள் பற்றிய விழிப்புணர்வுக் கருத்தரங்கு எதிர்வரும் 25ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 9.30 மணி முதல் பிற்பகல் 2 மணிவரை யாழ். நகரிலுள்ள சிற்றி ஹோலில் நடைபெறவுள்ளது. இக்கருத்தரங்கில் சிறுவர் பாதுகாப்பு நிறுவனத்தின் மாவட்ட இணைப்பாளர் செல்வி எமர் சிராஞ்ஜில் (Emer Cearangle) உட்பட மற்றும் பலர் கலந்துகொண்டு உரையாற்றுவார்கள். (ம-135)

ஜனாதிபதி ஆவேசம்

# உங்களைக் கொலை செய்ய முயலும் ஐ.தே.கவினரைக் கொன்றுவிடுங்கள்

## பொ.ஐ.முன்னணியினருக்கு ஆலோசனை

கொழும்பு.நவ.21

"தேர்தல் வன்முறைகளின் போது உங்களைக் கொலை செய்ய முற்படுபவர்களைக் கொலை செய்வதற்கு ஒருபோதும் தயங்காதீர்கள்!"

பொ.ஐ.முன்னணியின் ஆதரவாளர்களுக்கு இப்படி 'அறிவுரை' கூறியிருக்கிறார் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க.

திஸமகராமவில் நேற்று இடம்பெற்ற தேர்தல் பிரசாரக் கூட்டம் ஒன்றில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

பொ.ஐ.முன்னணியின் ஆதரவாளர்கள் மீது ஐ.தே.க. ஆதரவாளர்கள் கண்மூடித்தனமான தாக்குதலை நடத்தி வருகின்றனர்.

எமது ஆதரவாளர்களைக் கொலை செய்வதற்காக பெருமளவான பணத்தைக் கொடுத்து தமது ஆதரவாளர்களை ஐ.தே.கட்சி ஊக்கப்படுத்துகின்றது.

எனவே எமது ஆதரவாளர்களில் எவராவது கொலை செய்யப்படுகின்ற சந்தர்ப்பத்தில் அல்லது ஆதரவாளர் எவரையாவது கொலை செய்ய முற்பட்டால் அவர்களைக் கொலை செய்வதற்கு பொ.ஐ.முன்னணியின் ஆதரவாளர்கள் அனைவரும் தயாராக இருக்கவேண்டும்.

இப்படி அவர் மேலும் தெரிவித்தார்.

இதேவேளை - இந்தப் பிரசாரக் கூட்டத்தில் கலந்துகொண்ட அமைச்சர் மஹிந்த ராஜபக்ஷ ஜனாதிபதியின் இந்தக் கருத்துத் தொடர்பாக அதிர்ச்சியடைந்ததோடு இதனைப் பிரசுரிக்க வேண்டாம் என்று ஊடகவியலாளர்களைக் கேட்டுக்கொண்டார் எனவும் தெரிவிக்கப்படுகிறது. (ம-4)

## நிறைகுறைந்த பாணை விற்றவருக்கு அபராதம்

யாழ்ப்பாணம்,நவ.21

நிறைகுறைந்த பாணை கடையில் விற்பனை செய்தமைக்காக விற்பனையாளர் ஒருவருக்கு மல்லாகம் நீதிமன்ற நீதிவான் 750 ரூபா அபராதம் விதித்துள்ளார்.

இணுவில் பகுதியில் உள்ள தனியார் கடை ஒன்றிலேயே மேற்படி நிறைகுறைந்த பாண் விற்பனை செய்தமை கண்டுபிடிக்கப்பட்டது.

இதேவேளை - சுன்னாகம் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்தால் நிறைகுறைந்த பாண் தயாரிக்கப்பட்டமையும் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. இது தொடர்பாகவும் மல்லாகம் நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. இது தொடர்பான விசாரணைகள் பிறிதொரு தினத்தில் நீதிமன்றில் நடைபெறவுள்ளதாக மேலதிக அரச அதிபர் து.வைத்திலிங்கம் தெரிவித்தார். (ம-ரி)


## பாராட்டி வாழ்த்துகின்றோம்



### திரு.க.மங்களேஸ்வரன்

(B.A. (HONS), Dip.in Edu., SLPS 2 - II)

எமது பாடசாலையின் அதிபர் திரு.க.மங்களேஸ்வரன் அவர்கள் 2000.08.04 தொடக்கம் இலங்கை அதிபர் சேவையின் அதிபர் தரம் 2 IIக்கு பதவி உயர்வு பெற்றமையையிட்டு அவரை உளமாரப் பாராட்டுவதுடன், அவர் தனது சேவையில் மேன்மேலும் உயர்வுகள் பெற வாழ்த்துகின்றோம்.

இணைக்கப்பட்ட ஆசிரியர்கள்,
*யா/கச்சாய் அ.த.க.பாடசாலை.*

(94716)



## தமிழர் விடுதலைக் கூட்டணி

கோப்பாய்த் தொகுதி
கிளை அலுவலகத் திறப்பு விழாவும் கருத்தரங்கும்

*காலம்:* இன்று (21.11.2001) புதன்கிழமை காலை 10 மணி.
*இடம்:* நீர்வேலி கந்தசுவாமி கோயில் அருகில்
*தலைவர்:* திரு.க.தர்மலிங்கம் J.P.
*மங்கள விளக்கேற்றல்:* திரு.க.சுரேஷ் பிரேமச்சந்திரன் (வேட்பாளர்)
*திறந்து வைப்பவர்:* திரு. மாவை சோ.சேனாதிராசா (வேட்பாளர்)

இன்னும் பல வேட்பாளர்களும் கலந்துகொள்ளும் இக்கருத்தரங்குக்கு கட்சி ஆதரவாளர், அனுதாபிகள் அனைவரும் அன்புடன் அழைக்கப்படுகின்றனர்.

செயலாளர்
*கோப்பாய்க் கிளை.*

(93936)



## கண்ணீர் அஞ்சலி

எமது ஆலயத்தில் பல வருடங்களாகத் தொண்டாற்றி வந்த

### பூபாலசிங்கம் பிரபாலன் (பிரபா)

அவர்களின் மறைவினால் துயருற்றிருக்கும் அவரது குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்து, எமது ஆலயத்தின் சார்பாக கண்ணீரஞ்சலியைக் காணிக்கையாகச் சமர்ப்பிக்கின்றோம்.

ஆத்மா சாந்தி அடைவதாக!

நம்பிக்கைப் பொறுப்பாளர் சபை,
ஆசிமட அரசடி விநாயகர் ஆலயம்,
கோண்டாவில் கிழக்கு.

(94712)



## மரண அறிவித்தல்

### சிவபுண்ணியம் குலேந்திரராசா (சந்திரன்)

வல்வெட்டியைப் பிறப்பிடமாகவும் இணுவில் கிழக்கை வசிப்பிடமாகவும் கொண்ட சிவபுண்ணியம் குலேந்திரராசா (சந்திரன்) 17.11.2001 சனிக்கிழமை இரவு காலமானார்.

அன்னார் இணுவில் கிழக்கு மாதர் சங்கத் தலைவியான செல்வலட்சுமி (செல்லா) அவர்களின் அன்புக் கணவரும் சிவபுண்ணியம் - இரத்தினபூபதி ஆகியோரின் அன்பு மகனும் காலஞ்சென்ற மாங்கன்று சீவரத்தினம் மற்றும் பத்மாசனி ஆகியோரின் அன்பு மருமகனும் அகிலன் (பிரான்ஸ்), தர்மினி (கொழும்பு), கோகுலன் (கனடா), ஷாழினி, மகிந்தன், சத்தியசாயினி, ஜெனனி ஆகியோரின் அன்புத் தந்தையாரும் பார்த்திபன், சித்திரவனிதா, ரஞ்சன், கௌரி ஆகியோரின் அன்புச் சகோதரரும் தீசன் (கனடா), ரதிதேவி (இந்தியா), பாக்கியலட்சுமி (அமெரிக்கா), கண்ணன் (கனடா), சாந்தலட்சுமி (அமெரிக்கா), சத்தியலட்சுமி (கனடா), ஜெயராம் (கொழும்பு), செல்வக்குமார் (சுவிஸ்) ஆகியோரின் மைத்துனரும் நாகராசா, சண்முகபாஸ்கரன், குமார், சாந்தினி, யசோ ஆகியோரின் சகலனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (21.11.2001) புதன்கிழமை பிற்பகல் 1.00 மணியளவில் நடைபெற்றுப் பூதவுடல் தகனக்கிரியைக்காக பூவோடை மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*இணுவில் கிழக்கு.* (94721) தகவல்: எஸ்.ஜெயராம்.



எஸ்.எஸ்.யசோதரன் ஆட்ஸ் நிறுவனத்தின்
10ஆவது ஆண்டு நிறைவை ஒட்டி யாழ்.குடாநாட்டு இளைஞர்களுக்கான

## "இலவச ஸ்கிறீன் பிறிண்டிங் பயிற்சி"

25.11.2001இற்கு முன் விண்ணப்பப்படிவங்களைப் பெற்று பதிவை மேற்கொள்ளும் 100 நபர்களுக்கே இச்சலுகை.

மேலதிக விவரங்களை இன்றைய யாழ்.சேவையில் 8 முதல் 8.30 மணிவரை கேட்டு மகிழுங்கள்.

*விண்ணப்பப் படிவங்களைப் பெறுமிடம்:-* *S.S.யசோதரன் ஆட்ஸ், 68, கன்னாதிட்டி வீதி, யாழ்ப்பாணம்.*

(94722)



## நாடாளுமன்றப் பொதுத்தேர்தல் 2001

யாழ்.மாவட்டம்

முஸ்லிம் காங்கிரஸின் ஒரேயொரு தமிழ் வேட்பாளர்


### ஞானசுந்தரம் ஆனந்தகுமார்


தமிழினத்தின் உரிமைகளை வென்றெடுக்க
களத்தில் நின்று தியாக வரலாற்றை
படைத்துக்கொண்டிருக்கும் போராளிகளை
பயங்கரவாதிகள் என்று பட்டம் சூட்டும்
வஞ்சகர்களின் பிரசாரக் குரலை முறியடிக்க,

தமிழ் மண்ணில் சுதந்திரக் காற்று வீச
விடுதலைப் புலிகளின் அரசியல் பிரிவுடன்
மட்டும் பேச்சுவார்த்தையை முன்னெடுக்க,

*தந்தை செல்வா காட்டிய பாதையில்*
*உறுதியுடன் செயற்படுவேன்.*





(C/19384)

# தலிபான் படையினரின் பின்னடைவு; தோல்வியா? தந்திரமா?



பயங்கரவாதத்துக்கு எதிரான நடவடிக்கை என்ற பெயரில் ஆப்கானிஸதான்மீது அமெரிக்கா வான் தாக்குதல்களை ஆரம்பித்தபோது ஏற்பட்ட பரபரப்பை விட, கடந்த சில நாள்களாக தமது கட்டுப்பாட்டில் இருந்த பகுதிகளிலிருந்து - அதுவும பல நாள்கள் விமானத் தாக்குதல்களைத் தாக்குப்பிடித்த - 10 ஆண்டுகள் ரஷ்யப் படைகளுக்கு தண்ணீர் காட்டிய முஜாஹிதீன் வீரர்கள் அடங்கிய - தலிபான் படையினர் திடீரென்று விரட்டப்பட்டுவிட்டதாகச் சொல்லப்படுவது, அதிக பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

அமெரிக்கப் பாதுகாப்புத் தலைமையகமான பென்டகனில் இராணுவ நிபுணர்கள் இதுதொடர்பாக மிகக் கவனத்துடன் ஆராய்வதாகச் செய்திகள் கசிந்துவருகின்றன.

### அமெரிக்காவின் குழப்பம்

ஆப்கானிஸ்தானில் தலிபான்களுக்கு ஏற்பட்டுள்ள பின்னடைவு, அமெரிக்க இராணுவப் பலத்தைத் தாக்குப்பிடிக்கமுடியாத தலிபான்கள் அடைந்த தோல்வியா? - அல்லது, அமெரிக்காவின் திட்டங்களை - கனவுகளை - தவிடுபொடியாக்கிய ஆப்கான் புதைசேற்றில் அமெரிக்காவை மாட்டிவிடத் தலிபான்கள் கடைப்பிடிக்கும் தந்திரமா? -

இந்தக் குழப்பமே அமெரிக்க இராஜதந்திரிகளை கலங்கடித்துள்ளது. ஒருவேளை அமெரிக்கப் படைகளின் வழிகாட்டுதலுடன் தலிபான்

## ஆப்கான் புதைகுழியில் சிக்குமா அமெரிக்கா?

களை எதிர்த்துப் போரிட்ட வடக்குக் கூட்டணியின் வெற்றியாகவே இது இருந்தாலும்கூட - ஆப்கானிஸ்தானில் தமது கட்டுப்பாட்டு நகரங்களை முற்றாக இழந்து தலிபான்கள் ஓடி ஒழிந்து கொண்டாலும் - அமெரிக்கா, பிரச்சினை முடிந்ததென்று நிம்மதியாக மூச்சுவிட முடியாது என்றே நம்பப்படுகிறது. தற்போது ஈரானில் வசிப்பவரும், சோவியத் படைகளுக்கு எதிராக முன்னர் போராடியவருமான ஆப்கான் கொமாண்டர் குல்புத்தீன் ஹிக் மதியார் என்பவர் ரஷ்யப் பத்திரிகை ஒன்றுக்குத் தெரிவித்த கருத்துகள் எதிர்காலத்தைப் படம்பிடித்துக் காட்டுகின்றன....

கேந்திர முக்கியத்துவமிக்க மத்திய ஆசியப் பகுதியை கட்டுப்பாட்டில் கொண்டுவர அமெரிக்கா முயல்வதை ரஷ்யர்கள் எவ்வாறு ஆதரிக்க முடியும். அத்தகைய நிலையில், தலிபான்களின் கெரில்லாப் போருக்கு ஆதரவு தரும் சக்திகள் இல்லையென்று கூறிவிடமுடியாது. பல பிரதான நகரங்களை தலிபான்கள் இழந்துவிட்டாலும் போர் இன்னமும் முடிவடைந்துவிடவில்லை. நீண்டகால கெரில்லா யுத்தம் ஒன்றை அமெரிக்கா எதிர்நோக்கவேண்டியிருக்கும்.

ஹிக்மதியாரின் இந்த வார்த்தைகள் தலிபான்களின் எதிர்கால நடவடிக்கையை எடுத்துக்காட்டுகின்றன. ஆயினும், தலிபான்களிடமிருந்து நாளை வரப்போகும் இராணுவ அச்சுறுத்தலைவிட அமெரிக்கா கவலை கொண்டிருக்கும் மற்றொரு விடயம் உள்ளது. தலிபான்களின் சமயோசித தந்திரோபாயத்தால் எழுந்துள்ளதாகக் கருதப்படும் - ஆப்கானிஸ்தானின் இன்றைய அரசியல் சூழ்நிலையே அமெரிக்காவின் தற்போதைய தலைவலி.

ஆப்கானிஸ்தானில் தாக்குதலை ஆரம்பித்தபோது அமெரிக்கா தொடங்கிய அரசியல் மற்றும் இராஜதந்திர நகர்வுகளையும் திட்டங்களையும்விட அங்கு இராணுவ நிகழ்வுகள், மாற்றங்கள் மிக வேகமாக நடந்துவிட்டதால், ஆப்கான தலைவர்கள், இனக்குழுக்கள் ஆகிய சக்திகளிடையே கருத்து முரண்பாடுகளும் பிணக்குகளும் தோன்றிவிட்டன. இத்தகையதொரு நிலையை ஏற்படுத்தவே, தலிபான்கள் 'திடீர்த் தோல்வியை' ஏற்றதாகக் கூறப்படுகிறது. இது உண்மையோ, பொய்யோ? ஆனால் இதனால் அமெரிக்கா 'ஆப்பிழுத்த குரங்காக' அவதிப்படுவது மட்டும் நிதர்சனமான உண்மை. இனப் பிரிவுகளைச் சேர்ந்த போர்த்தளப் பகுதிகளின் கூட்டணியான வடக்குக் கூட்டணி, அமெரிக்காவின் உதவியுடன் தலிபான்களை வெற்றிகொண்டதுமே தமது போக்கைத் திசைமாற்றத் தொடங்கிவிட்டன. இத்தனைக்கும் தலிபான்களிடமிருந்து மீட்கப்பட்ட பிரதேசங்கள் அனைத்துமே வடக்குக் கூட்டணியின் கட்டுபபாட்டில் இருப்பதாகச் சொல்லிவிடமுடியாது.

ஆப்கானில் மொத்தம் 31 மாகாணங்கள் உள்ளன. இவற்றில் வடக்குப்புற மாகாணங்கள் வடக்குக் கூடடணியிடம் வீழ்ந்துள்ளன. அதே வேளை தென்பகுதி மாகாணங்களை ஆங்காங்கே உள்ள ஆயுதம் தாங்கிய - தலிபான்களையும், வடக்குக் கூட்டணியையும் ஒருங்கே எதிர்க்கும் ஆயுதம் தாங்கிய இனக்குழுக்கள் தமது கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவந்துள்ளன. வடக்குக் கூட்டணியினர் அங்கு வருவதற்கு முன்னரேயே, தலிபான்கள் பின்வாங்கிவிட்டதால் இனக குழுக்களுக்கு இது சாத்தியமாகிவிடடது.

### தடையால் எரிச்சல்

தென்பகுதியில் அதிகம் வாழும் 'பஸ்தூன்' இனத்தினர் தமது திருமண வைபவங்களில் நடத்தும் பாரம்பரிய இசை நிகழ்ச்சிக்கு, தலிபான்கள முன்னர் தடைவிதித்திருந்தனர். இதனால் அவர்கள் தலிபான்களிடம் எரிச்சல் கொண்டிருந்தனர்.

இந்த நிலையில் அங்கு வைத்து வடக்குக் கூட்டணியுடன் போரிடுவதைத் தவிர்ப்பதற்காகவே தலிபான்கள் பின்வாங்கிவிட்டதாகச் சொல்லப்படுகிறது.

மேலும் ஆப்கானின் கிழக்கு மற்றும் மத்திய பகுதிகளில் தலிபான்கள் வெளியேறியதும், அங்குள்ள முஜாஹிதீன்கள் அப்பிரதேசங்களைக் கைப்பற்றிவிட்டனர்.

பொதுமக்களுக்கு ஏற்படக்கூடிய ஆபத்துக்களைத் தவிர்ப்பதற்காகவே தாம் பின்வாங்கியதாகத் தலிபான்கள் அறிவித்துள்ளனர். எது எப்படியோ, தலிபான்களுக்குப் பின்னர் ஆப்கானில் அமைக்கப்படவுள்ள அரசில் இனக்குழுக்களிடையேயான பலமான அதிகாரப் போட்டிக்கு வழியேற்பட்டுவிட்டது. இதனைச் சமாளிக்கும் - மணலைக் கயிறாகத் திரிக்கும் - பாரிய பொறுப்பு அமெரிக்காவின் தோளில் ஏற்றப்பட்டு விட்டது.

அதுமட்டுமல்ல, வடக்கில் 'குன்தூஸ்' நகரில் வடக்குக் கூட்டணியின் முற்றுகையில் சுமார் இரண்டாயிரம் தலிபான் படையினர் சிக்கியுள்ளனர். இவர்களில் பெரும்பாலானவர்கள் தலிபான் படையில் அங்கம் வகிக்கும் பாகிஸ்தானியரும், செச்சினியர்களும் ஆவார்கள்.

தங்களை குன்தூஸிலிருந்து வெளியேற அனுமதிக்குமாறு இவர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். இதற்கு, வடக்குக் கூட்டணியும், அமெரிக்காவும் மறுத்துவருகின்றன.

இதிலும் ஒரு தர்மசங்கடம் அமெரிக்காவுக்கு. குன்தூஸிலிருந்து அவர்களை வெளியேறவிட்டால் தலிபான்களின் வலு அதிகரிக்கும். தாக்கியழித்தாலோ பாகிஸ்தானிய, செச்சினிய பழங்குடிகளிடம் தலிபான்களின் ஆதரவு பெருகும். ஆகவே எப்படியாவது குன்தூஸில் சிக்கியுள்ள தலிபான்களை சரணடைய வைத்துவிட அமெரிக்கா பிரயத்தனம் செய்கிறது.

அரசியல் தலைநகர் காபூல் வடக்குக் கூட்டணியிடம்; இராணுவத் தலைநகர் கந்தகாரோ 'பஸ்தூன்' இனத்தினரிடம். இந்த நிலைமையும் ஆப்கானில் அதிகாரப் போட்டிக்கு சாமரம் வீசுகிறது.

இதனைச் சமாளிக்கும் திறமை அமெரிக்காவுக்கு இருப்பதாகவே கருதப்பட்டது. ஆனால் வடக்குக் கூட்டணியின் இன்றைய செயற்பாடுகள் - வெற்றிகிட்டியவுடன் அமெரிக்காவைப் புறந்தள்ளும் அதன் நிலைப்பாடு - அமெரிக்காவுக்கு கவலையளித்துள்ளது.

அமெரிக்க விமானத்தாக்குதலின் உதவியுடன், விரைவாக முன்னேறிய வடக்குக் கூட்டணி, காபூலை அண்மித்தபோது, காபூல் நகரை முற்றுகையிடும்படியும், நகருக்குள் நுழைய வேண்டாமெனவும் அமெரிக்கா கேட்டுக்கொண்டதாகக் கூறப்படுகிறது.

### 'குழையல் சோறு'

காபூலிலும் பெரும்பான்மையாக 'பஸ்தூன்' இனத்தினரே உள்ளனர். வடக்கு முன்னணியில் இருப்பவர்கள் தாஜிக் மற்றும் உஸ்பெக் இனத்தவர். இவர்களைத்தவிர குர்திஷ், ஈரானியர் உட்பட வேறு பல இஸ்லாமிய இனத்தவர்களும் அதில அடக்கம்.

ஆகவே இந்தக் 'குழையல் சோறு' கூட்டணி, காபூலுக்குள் நுழைவது பஸ்தூன்களை ஆத்திரமூட்டும் என்று அமெரிக்கா எண்ணியது.

இதனைப் புரிந்துகொண்டுதானோ என்னவோ! சென்ற வேகத்திலேயே காபூலுக்குள் நுழைந்துகொண்டது வடக்குக் கூட்டணி. இதனால், பஸ்தூன் தலைவர்களுடன் கலந்து பேசி காபூலில் அவர்களின் ஆதரவுடன், தற்காலிக அரசொன்றை அமைக்கும் அமெரிக்கத்திட்டம் பிசுபிசுத்துப்போனது.

காபூலை வடக்கு கூட்டணி கைப்பற்றுவதை பாகிஸ்தான் விரும்பவில்லை. ஆப்கானின் வட எல்லை நாடுகளின் செல்வாக்கு வடக்குக் கூட்டணியில் இருப்பதால், அது தனக்குப் பாதகமாகும் என்று பாகிஸ்தான் அஞ்சுகிறது.

ஆகவே பஸ்தூன்களை வடக்குக் கூட்டணிக்கு எதிராகப் பாகிஸ்தான் தூண்டிவிடக்கூடும் என்ற கவலையும் அமெரிக்காவை வாட்டுகிறது.

அப்படி ஏதும் நடந்தால், ஆப்கான் தொடர்பான அமெரிக்கக் கொள்கைகள், பாகிஸ்தானின் விருப்பு வெறுப்புக்களுக்கு அமையவே உருவாகும. இது அமெரிக்காவின் இராஜதந்திரத்தை கேலிக்குரியதாக்கிவிடும்.

இது ஒருபுறமிருக்க, காபூலை கைப்பற்றுவதன் மூலம் ஆப்கானின் ஆட்சியைப் பிடித்துவிடலாம் என்பதே ஆப்கானிஸ்தானிய இனக் குழுக்களின் இலட்சியமாக இருந்துவருகிறது. அமெரிக்காவின் எச்சரிக்கையையும் மீறி காபூலுக்குள் வடக்குக் கூட்டணி நுழைந்ததற்கும் இதுவே காரணம் என்று ஆய்வாளர்கள் கருதுகின்றனர்.

வடக்குக் கூட்டணியில் அங்கம் வகிக்கும் 'ஜமாதி இஸ்லாமி' என்ற அமைப்பு விடுத்துள்ள கோரிக்கை, அமெரிக்கத் தலையீட்டில் வடக்குக் கூட்டணியினர் முழு நம்பிக்கை வைக்கவில்லை என்பதைக் காட்டுகிறது. காபூல் அருகே உள்ள வக்ரம் விமானத் தளத்தில் தற்போதுள்ள சுமார் 100 பிரிட்டிஷ் படையினரில் 15பேர் மட்டுமே அங்கிருக்கலாம். மற்றவர்கள் வெளியேறவேண்டும் என்று அந்த அமைப்பு வற்புறுத்துகிறது.

வக்ரம் விமானத் தளத்திலிருந்து செயற்படுத்தப்படும் நிவாரண உதவிகளைப் பாதுகாக்கவே பிரிட்டிஷ் படைகள் அங்கு நிலைகொண்டிருப்பதாக அமெரிக்கா கூறுவதை ஜமாதி இஸ்லாமி நம்ப மறுத்துவிட்டது.

ஜமாதி இஸ்லாமி மட்டுமன்றி, முழு வடக்குக் கூட்டணி அமைப்புக்களும், 'வக்ரம்' விமானத்தளத்தில் உள்ள பிரிட்டிஷ் படையினர், 'தமது தலைமேல் தொங்கும் கத்தி' எனவே எண்ணுவதாகத் தெரிகிறது.

### அதிகார ஆசை

இந்தப் பிரச்சினையைச் சமாளிக்க அமெரிக்கா விழிபிதுங்கும் நிலையில், ஆப்கானிஸ்தானின் 'முன்னாள்கள்' இருவரது பதவியாசை வேறு அமெரிக்காவின் கழுத்தை இறுக்குகிறது. 5ஆண்டுகளின் முன்னர் தலிபான்கள் காபூலைக் கைப்பற்றியபோது, பதவிகவிழ்க்கப்பட்ட முன்னாள் அதிபர் பர்குதீன் ரபானி மற்றும் ஆப்கானின் மன்னர் ஷாகிர் ஷா ஆகியோரே சந்தடி சாக்கில் பதவிக்கு வரத் துடிப்பவர்கள்.

இதுவரை காலமும் ஈரானில் தங்கியிருந்த ரபானி, வடக்குக் கூட்டணி காபூலைக் கைப்பற்றியதும், உடனடியாக காபூலை வந்தடைந்தார். வடக்குக் கூட்டணியின் அதிபராகத் தன்னை ஆக்கிக்கொள்ளும் திட்டத்துடனேயே அவர் காபூல் மண்ணை மிதித்ததாகத் தெரிகிறது. இத்தாலியில் தங்கியுள்ள மன்னர் ஷாகிர் ஷாவுக்கு இது வயிற்றில் புளியைக் கரைத்துள்ளது. அமெரிக்காவின் உதவியுடன் மன்னர் அந்தஸ்தை மீண்டும் பெறலாம் என்று கனவுகண்ட அவர், ரபானியின் வேகம் கண்டு அதிர்ந்து போனார்.

ஆப்கான் தளபதி அப்துல் ஹக் மூலம் மீண்டும் ஆப்கானில் ஆட்சியைப் பிடிக்க மன்னர் ஷா வகுத்த திட்டம், சமீபத்தில் ஹக், தலிபான்களால் கொல்லப்பட்டதும் மண்கவ்வியது. அந்த வேதனையை, ரபானியின் முயற்சி மேலும் அதிகரித்துள்ளது.

அதனால்தான், ரபானி காபூலுக்குத் திரும்பியதை மன்னர் தரப்பு கடுமையாகக் கண்டித்துள்ளது.

"காபூலுக்குத் திரும்பியுள்ள முன்னாள் அதிபர் பர்குனுதீன் ரபானி; ஆப்கானிஸ்தானின் ஆட்சியாளராகத் தன்னை அடையாளம்காட்ட முயற்சிக்கக்கூடாது."

- இவ்வாறு மன்னர் தரப்பு எச்சரித்துள்ளது. மன்னருக்கு இப்போதுள்ள ஒரே நம்பிக்கை 'பஸ்தூன்' தலைவர்களின் ஆதரவுதான்.




காபூல் மசூதியின் முன்பாக பிச்சையெடுக்கும் மாது. தலிபான்கள் ஆட்சி முடிந்து, வடக்குக் கூட்டணி காபூலைக் கைப்பற்றிய பின்னர் எடுக்கப்பட்ட படம் இது.

ஆனால் இதில் வேடிக்கை என்னவென்றால், ரபானிக்கு ஆதரவளிக்கும் வடக்குக் கூட்டணி காபூலிலும்; மன்னருக்கு ஆதரவளிக்கும் பஸ்தூன்கள் கந்தகாரிலும் ஆதிக்கம் செலுத்துவதுதான். காபூலில் ரபானி அதிபராகப பதவியேற்றால், கந்தகாரில் மன்னராக ஷாகிர் ஷா முடிசூடிககொள்ள நேரிடும். பதவி ஆசைகளின் வேகத்தில் எதுவும் நடக்கலாம். இதுவும் அமெரிக்காவுக்கே தலையிடியாகும்.

இந்தப் பதவிச் சண்டைகளின் மத்தியில், ஆங்காங்கே உள்ளூர்த் தலைவர்கள், தமக்குப் பிடித்தவர்களை மாகாண ஆளுநர்களாக பதவியில் அமர்த்திவருகின்றனர்.

உதாரணமாக ஜெய்ன்ஸார் மாகாணத்தில், ஹஜ் ஹாஜி அப்துல் காதிர் என்பவர் ஆளுநராகப் பதவியேற்றார். இவர் முன்னர் ஆளுநராக இருந்ததாகக் கூறப்படுகிறது. அத்துடன், தலிபான்களால் கொல்லப்பட்ட ஆப்கான் கொமாண்டர் - மன்னரின் தூதர் - அப்துல் ஹக்கின் சகோதரர் இவர் என்பது குறிப்பிடத்தக்கது. இப்படி நியமிக்கப்படுபவர்களின் செல்வாக்கும் ஆப்கானின் எதிர்காலத்தை நிர்ணயிப்பதில் ஆதிக்கம் செலுத்தப்போகிறது.

இதற்கிடையில் ஆப்கானில் பல்லின இடைக்கால அரசொன்றை அமைக்க ஐ.நா. திட்டமொன்றை வகுத்துள்ளது.

இரு வருடங்கள் ஆட்சியில் இருக்கும் அந்த இடைக்கால அரசை அங்கீகரிக்க ஆப்கானின் மூத்த பழங்குடியினர் சபை (லோயா/ஜிர்கா) கூட்டப்படவேண்டும். அத்துடன் புதிய அரசமைப்பொன்றும் உருவாக்கப்பட வேண்டும். ஐ.நா. திட்டத்தில் அடங்கியுள்ள இந்த அம்சங்கள் நிறைவேற வேண்டுமானால் அங்கு பாதுகாப்பு உத்தரவாதம் வேண்டும்.

கடந்த காலங்களில் மிக மோசமான மனித உரிமை மீறல்களுக்கு 'பெயர் பெற்ற' வடக்குக் கூட்டணி - அதிகாரத்தைக் கைப்பற்றும் ஆசையைத் தியாகம் செய்து - ஐ.நாவின் திட்டத்துக்கு ஒத்துழைக்குமா என்பது கேள்விக்குறியே.

பழங்குடி சபையின் கூட்டத்தைக் கூட்டுவதில் வடக்குக் கூட்டணி மெதனம் காட்டி வருவது இந்தச் சந்தேகத்தை அதிகரித்துள்ளது.

இதையும் மீறி ஆப்கானின் பாதுகாப்பை உறுதிப்படுத்த பின்வரும் 3 வழிகளே உள்ளன.

1. ஆப்கானிய இனக்குழுக்கள் அடங்கிய பாதுகாப்புப் படையை அமைத்தல்.
2. ஐ.நா. அமைதிப்படையிடம் ஆப்கான் பாதுகாப்பை ஒப்படைத்தல்.
3. இஸ்லாமிய நாடுகளின் படைகளைக்கொண்டு பாதுகாப்புச்சேனை ஒன்றை அமைத்தல்.

இந்த மூன்று வழிகளில் இறுதி யோசனையே சிறந்ததென்று ஐ.நா. உட்பட நடுநிலை அமைப்புகளின் எண்ணம்.

ஆப்கானில் பாதுகாப்பை உத்தரவாதப்படுத்தாமல், அங்கு அரசியல் தீர்வொன்றை நடைமுறைப்படுத்துவது 'கொக்கு தலையில் வெண்ணெய் வைத்துப் பிடிக்கும்' கதையாகிவிடும்.

தலிபான்கள் கெரில்லாப் போரைத் தீவிரப்படுத்தினால் ஆப்கானின் பாதுகாப்பை எவர் கவனிக்கிறார்களோ, அவர்களுடனேயே மோத நேரிடும்.

அப்படிப்பட்ட ஒரு சூழ்நிலையில் இஸ்லாமிய நாடுகளின் படைகள் ஆப்கானின் நிலை கொள்வதே தனக்கு ஆதாயம் என்று அமெரிக்கா கருதக்கூடும். ஆனால் இதிலும் ஒரு அபாயம் இல்லாமலில்லை. இஸ்லாமிய நாடுகளின் படையினர் தனிப்பட்ட முறையில், தலிபான்கள் மீது, இஸ்லாமியர் என்ற ரீதியில் - பச்சாதாபப்படத் தொடங்கினால் அதன்பிறகு அமெரிக்காவின் திட்டம், அதன் வர்த்தக நிலையக்கட்டடங்கள் போல தகர்ந்துவிடக்கூடும். முகம் தெரியாத தலிபான் தலைவர் முல்லா மொகமட் ஓமரையோ, எங்கிருக்கிறார் என்றே தெரியாத ஒஸாமா பின்லேடனையோ தேடிப்பிடித்துக் கொல்வதை விட, ஆப்கானில் அரசியல் தீர்வொன்றைக் காண்பதே அமெரிக்காவின் தற்போதைய தலையாயப் பிரச்சினையாக இருக்குமென்று ஆய்வாளர்கள் கருதுகின்றனர்.

ஆக மொத்தத்தில் ஆப்கானிஸ்தானை ஆளப்போவது யாராக இருந்தாலும், மூச்சுத் திணறப் போவது அப்பாவி ஆப்கான் மக்களே.

☆

**பாமரன்**

# சின்னஞ்சிறு விளம்பரம்

## விற்பனைக்கு

50 நாள் நிரம்பிய, பூச்சி நீக்கிய நல்லின அல்சேசன் (ஜேர்மன் சில்வர் கோல்ட்) பெண் நாய்க்குட்டிகள் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: சிவகுமார், 'கம்பளை இல்லம்', வட்டக்குளம் அருகில், கட்டப்பிராய்ச் சந்தி. (94701)

கோழி எரு விற்பனைக்கு உண்டு. தொடர்பு:- இல.19, முருகேசர் ஒழுங்கை, முத்திரைச் சந்தையடி, நல்லூர். (94696)

இறைச்சிக் கோழி Broiler மற்றும் இறைச்சிக்கோழிகள் சுத்தம் செய்து பெற்றுக்கொள்ளலாம். ஞாயிற்றுக்கிழமைகளில் விசேட சேவை. இல.19, முருகேசர் ஒழுங்கை, முத்திரைச்சந்தையடி, நல்லூர். (94697)

புறொயிலர் இறைச்சிக்கோழி விற்பனைக்கு உண்டு. மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக்கொள்ளலாம். தொடர்பு: நா.துரைசிங்கம், கோப்பாய் வீதி, உரும்பிராய். (94706)

## இறைச்சிக்கோழி

புறொயிலர் (1kg 170/=), கல்பேட்ஸ் என்பன விற்பனைக்கு உண்டு. சுத்தம் செய்தல் இலவசம். தொடர்பு: மான்ஸ் பாடசாலை வீதி, உடுவில். (94614)

## வீடற்றவன்

வானொலியில் வாழ்க்கைகள் பலவிதம் நாடகம் கேட்டீர்களா? அதை எழுதிய அராலியூர் ந.சுந்தரம்பிள்ளையின் நூல் வீடற்றவன் நாவலின் விளக்கமும் விமர்சனமும். க.பொ.த. மாணவர்கள் இலக்கியம் கற்கப் பயன்படும். ரூபா 25/=. (94666)

## தவறிவிட்டது

பான்போத் இல்லம், டச்றோட், உடுவிலைச் சேர்ந்த அரியரத்தினம் பாலச்சந்திரன் என்பவரின் தேசிய அ.அ. (இல.391313008V), விசேட அ.அ (இல.0906014997) என்பன மக்கள் வங்கிக்கும் பிரதான வீதிக்கும் இடையில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் தயவுசெய்து மேற்கூறிய விலாசத்தில் ஒப்படைத்து உதவவும். (94698)

இராமநாதன் வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியைச் சேர்ந்த கந்தசாமி பொன்மணி என்பவருடைய விசேட அ.அ. (இல.0902022636) பரமேஸ்வராச் சந்திக்கு அருகில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் மாயவன் கொமினிகேஷன், இராமநாதன் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் ஒப்படைக்கவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும். (94680)

## அறிவுறுத்தல் கூட்டம்

வலி.தெற்கு,நவ.21

வலிகாமம் கல்வி வலயத்தில் உள்ள பாடசாலைகளில் தரம் மூன்று மாணவர்களுக்கான இவ்வருட இறுதிக் கணிப்பீடை தயாரிப்பது தொடர்பான அறிவுறுத்தல் கூட்டம் நாளை பிற்பகல் ஒரு மணிக்கு நடைபெற உள்ளது.

மல்லாகம் மகா வித்தியாலயம், மருதனார்மடம் இராமநாதன் கல்லூரி, மானிப்பாய் மகளிர் கல்லூரி, சித்தங்கேணி ஸ்ரீ கணேசா வித்தியாலயம் ஆகிய இடங்களில் நடைபெற உள்ள இக்கூட்டத்துக்கு சம்பந்தப்பட்ட ஆசிரியர்களை தவறாது அனுப்பி வைக்குமாறு ஆரம்பக் கல்வி உதவிக் கல்விப் பணிப்பாளர் சி.மாதவக்குமாரன் பாடசாலை அதிபர்களுக்கு அறிவித்துள்ளார். (ம-152)

---

## நுணாவில் வர்த்தகர்கள் கவனத்துக்கு

புனர்வாழ்வு அமைச்சினால் வழங்கப்படவுள்ள நிதி சம்பந்தமாக, கொடுப்பனவுக்கான படிவத்தில் கையொப்பம் இடவேண்டியிருப்பதால் சகல அங்கத்தவர்களும் இன்று (21.11.2001) புதன்கிழமை செயலாளரிடம் வந்து தவறாது படிவத்தில் கையொப்பத்தை இடுமாறு கேட்டுக்கொள்கின்றோம். படிவங்கள் யாவும் நாளை 22.11.2001ஆம் திகதி செயலகத்தில் ஒப்படைக்கப்படவேண்டும்.

**நுணாவில், மட்டுவில், சரசாலை**
**வணிகர் கழகம்**

*நஷனல் வீடியோ சென்ரர் அருகில்*
*182, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம்.* (94710)

---

சைவ வித்தியா விருத்திச் சங்கம்

## புதிய சிறார்களை அனுமதித்தல் - 2002

சைவ வித்தியா விருத்திச் சங்கம் நடத்தும் சைவச் சிறுவர் இல்லத்திற்கு நல்லூர் பிரதேச செயலகத்தில் இருந்து அனுமதிபெற்ற சிறார்களின் பெற்றோர் அல்லது பாதுகாவலர் 25.11.2001 அன்று காலை 9.00 மணிக்கும் 11.00 மணிக்கும் இடையில் தங்கள் அனுமதிபெற்ற சிறார்களுடன் சங்கத்திற்கு வருகை தருமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறீர்கள்.

*பிற்குறிப்பு: ஆண்டு 2000, 2001இல் அனுமதி பெற்றவர்களும் வருகைதரும்படி கேட்டுக்கொள்ளப்படுகிறீர்கள்.*

*சைவ வித்தியா விருத்திச் சங்கம்*
*கலாசாலை வீதி, திருநெல்வேலி,*
*யாழ்ப்பாணம், இலங்கை* (C/19382)

பேரா.அ.சண்முகதாஸ்
தலைவர்

---

## நன்றியுடன் பாராட்டி வாழ்த்துகின்றோம்

### ஊர்காவற்றுறை ஸ்ரீ ஞான வைரவர் ஆலயம்

ஊர்காவற்றுறை மாவட்ட வைத்தியசாலையில் அமைந்திருக்கும் மேற்படி ஆலய திருப்பணி புனரமைப்பு வேலைகளுக்காக நிதி ஒதுக்கீட்டில் ரூபா இரண்டு லட்சத்தை வழங்கி அதிலிருந்து ஒரு லட்சரூபாவை உடன்தந்துதவியமைக்காக -

வடக்கு புனர்வாழ்வு, புனரமைப்பு மற்றும் வடக்கு - கிழக்கு தமிழ் விவகார இந்து கலாசார
மாண்புமிகு அமைச்சர்
**கே.என்.டக்ளஸ் தேவானந்தா**
அவர்களையும்

யாழ்.மாவட்ட முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்
**கே.வி.குகேந்திரன் (ஜெகன்)**
அவர்களையும்

ஊர்காவற்றுறை ஈ.பி.டி.பி. அமைப்பாளரும் பிரதேச சபைத் தலைவருமான
**என்.மதனராசா (மனோ)**
அவர்களையும்

மனமாரப் பாராட்டி எமது நல்வாழ்த்துக்களையும் நன்றியுணர்வுடன் தெரிவித்துக்கொள்கின்றோம்.

*ஸ்ரீ ஞானவைரவர் ஆலயம்,*
*மாவட்ட வைத்தியசாலை,*
*ஊர்காவற்றுறை.* (94714) - ஆலய பரிபாலன சபையினர்

---

## கருத்தரங்கு

| | |
|---|---|
| இடம் | :- முகாமைத்துவ மண்டபம் III |
| காலம் | :- நாளை (22.11.2001) வியாழக்கிழமை பிற்பகல் 3.00 மணி |
| விடயம் | :- "தேர்தல் முறைமையும் 12ஆவது நாடாளுமன்றப் பொதுத் தேர்தலும்" |
| வழங்குபவர் | :- பேராசிரியர் பொ.பாலசுந்தரம்பிள்ளை (துணைவேந்தர் யாழ்.பல்கலைக்கழகம்) |

*ஆர்வலர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.*

முகாமைத்துவ மாணவர் மன்றம்,
யாழ்.பல்கலைக்கழகம்
(94713)

---

## ஈழமக்கள் ஜனநாயகக் கட்சி
### (ஈ.பி.டி.பி.)
### பொதுத்தேர்தல் - 2001

எம் இனிய மக்களே!

எமது கிராம மக்களின் வளர்ச்சிக்காகவும் கிராம அபிவிருத்திக்காகவும் மக்களுடன் மக்களாக நின்று தம்மையே அர்ப்பணித்து அயராது சேவையாற்றிவருகின்ற ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் சின்னமான வீணைச் சின்னத்துக்கு உங்கள் பொன்னான வாக்குகளை அளித்து இவர்களை நாடாளுமன்றத்துக்கு அனுப்புவதன் மூலம் எமது கிராமத்தின் வளர்ச்சியை மேன்மேலும் மெருகூட்டும் வண்ணம் அன்புடன் கேட்டுக் கொள்கின்றோம்.



மாண்புமிகு அமைச்சர்
கே.என்.டக்ளஸ் தேவானந்தா



முன்னாள் நாடாளுமன்ற
உறுப்பினர்
உயர்திரு.கே.வி.குகேந்திரன் (ஜெகன்)



வட்டுக்கோட்டைத் தொகுதி ஈ.பி.டி.பி.
அமைப்பாளரும், வேட்பாளருமாகிய
உயர்திரு.ந.திரிலோகநாதன் (லோகன்)



*அனைவருக்கும் சித்தன்கேணி பெரியவளவு மஹா கணபதிப் பிள்ளையாரின் அருள் பாலிக்கட்டும்.*

(93935) - சித்தன்கேணி வாழ்மக்கள்.

---

## 31 ஆம் நாள் நினைவஞ்சலி

தாயின் மடியில் 26 - 06 - 1942



ஆண்டவன் அடியில் 22 - 10 - 2001

அமரர்
### தாமு கணபதிப்பிள்ளை

(வைத்தியர், சோதிடர், முன்னாள் கட்டடப் பகுதி களஞ்சியப் பொறுப்பாளர், ஈழநாடு பத்திரிகை நிருபர் - எழுதுமட்டுவாழ்)

*அன்பின் திருவுருவாய் ஆதரவின் திருக்கரமாய்*
*மன்னுபுகழ் மாண்பின் உறைவிடமாய்*
*கல்வி ஊட்டும் ஆசானாய்*
*அறிவுடைய மருத்துவனாய்*
*துணிவுடைய பக்தனாய்*
*மகவுகளின் ஏற்றத்திற்காய்*
*உறுதிகொண்டு உழைத்து நின்றீர்!*
*உலகமதில் வாழ்ந்து சென்ற தங்கள்*
*உறுதிநிலை மறைந்திடுமோ மண்மீதில்?*

நிரந்தர முகவரி:
*சிவன்கோயிலடி,*
*எழுதுமட்டுவாழ் தெற்கு,*
*எழுதுமட்டுவாழ்.*
தற்காலிக முகவரி:
*கடுக்காய்,*
*கரவெட்டி கிழக்கு, கரவெட்டி.*

தங்கள் பிரிவால் வாடும்:
மனைவி, மகள், மருமகன்,
பேரப்பிள்ளைகள்.

(94717)

---

## INSTITUTION OF ENGINEERS SRI LANKA NORTHERN CENTRE

### Public Lecture on
### "Compressive Strength on Concrete Cubes"

by

**Eng.Mr.K.Sriskandarajah** *B.Sc.Eng.M.I.E. (SL), C.Eng., M.Eng. (AIT) of Development Consultants Consortium.*

Will be held at Jaffna College, Technical Institute Vaddukoddai on 22nd November 2001 at 15.00 hrs.

*All Engineers, Interested Technical Officers and Contractors are cordially invited.*

**- Secretary.**

Dept. of Agricultural Economics,
University of Jaffna.
2001.11.20 (94709)

---

## புதுக்கடை மங்களகரமான திறப்பு விழா அழைப்பு

*அன்புடையீர்!*

நிகழும் விஷு வருஷம் கார்த்திகை மாதம் 6ஆம் நாள் இன்று (21-11-2001) புதன்கிழமை நண்பகல் 12 மணிக்கு வரும் சுபவேளையில்

நெல்லியடி மத்திய மகா வித்தியாலய வீதியில்

### சந்துஜன் அழகுச் சோலை

என்னும் ஸ்தாபனத்தை குச்சம் ஞானவைரவர் திருவருளை முன்னிட்டு மங்களகரமாக ஆரம்பிக்கவுள்ளோம். அத்தருணம் அன்பர்கள், நண்பர்கள், வாடிக்கையாளர்கள் அனைவரையும் கலந்து சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

*மத்திய மகா வித்தியாலய வீதி,*
*நெல்லியடி.* (94711)

தங்கள் நல்வரவை நாடும்:
உரிமையாளர்
மு.ஜெகந்தன்

### மக்களே சிந்தியுங்கள்; செயற்படுங்கள்

# உரிமைப் பிரச்சினைக்கு நிரந்தரத்தீர்வு கிடைத்தால் அன்றாடப் பிரச்சினைகளுக்கும் தீர்வு கிடைக்கும்

## தேர்தல் நிலைப்பாடு குறித்து பல்கலை மாணவர் ஒன்றியம் அறிக்கை

எமது உரிமைப் பிரச்சினைகளுக்கு எப்போது நிரந்தரத் தீர்வு - விடிவு - கிட்டுமோ அப்போதுதான் அன்றாட - அடிப்படைப் பிரச்சினைகளுக்குத் தீர்வு கிட்டும்.

- இவ்வாறு பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் வெளியிட்ட அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

அன்பான தமிழ் மக்களே!

கடந்த பல வருடங்களாக யுத்த சூழலுக்கும் அதனால் பல நெருக்கடிகளுக்கும் உள்ளாகி துன்ப துயரங்களில் நாளாந்தம் வாடி வதங்கிக் கொண்டிருக்கும் தமிழ் மக்களிடம் இன்னொரு பொதுத் தேர்தலுக்காக வாக்குக்கேட்டு பல வேட்பாளர்கள் வீட்டு வாசற்கதவை நித்தமும் தட்டிக் கொண்டிருக்கிறார்கள். இவர்களில் ஒரு சிலர் அன்றாடப் பிரச்சினைகளை முதன்மைப்படுத்துகின்றார்கள், வேறு சிலர் தமிழ் மக்களின் உரிமைப்பிரச்சினைகளுக்கு முன்னுரிமை கொடுக்கிறார்கள்.

உரிமைப் பிரச்சினைதான் தமிழ் மக்களின் அடிப்படைப் பிரச்சினை.

### உரிமைப் பிரச்சினை பூதாகரமானது

அன்றாடப் பிரச்சினைகள் உருவானது எப்படி? யுத்த சூழ்நிலையே அன்றாடப் பிரச்சினையை தோற்றுவித்தது. யுத்த சூழ்நிலை தமிழ் மக்களின் பிரதேசங்களில் தோற்றம் பெற்றது எவ்வாறு? தமிழ் மக்களுடைய உரிமைக் குரல்கள் கடந்த காலங்களில் பேரினவாதிகளால் ஆயுதமுனையில் அடக்கப்பட்டமையால்தான் அடிப்படைப் பிரச்சினையான உரிமைப்பிரச்சினை பூதாகாரமாக உருவெடுத்தது.

அது 40 களில் பிரஜாவுரிமைப் பிரச்சினையாக உருவெடுத்து 50 களில் மொழிப் பிரச்சினையாகவும், 60களில் தமிழர்கள் வேலை வாய்ப்புகளில் முற்றாகப் புறக்கணிக்கப்பட்டமை மூலமும், 70 களில் தரப்படுத்தல் மூலம் தமிழ் மாணவர்களின் உயர் கல்வி வாய்ப்புக்கான கதவுகள் அடைக்கப்பட்டதன் மூலமும் தமிழ் மக்களின் அடிப்படைப் பிரச்சினை, இலங்கையின் இனப் பிரச்சினையாக விஷ்வரூபம் எடுத்தது. 80களில் இருந்து இன்று வரை கொடூரமான இராணுவ ஒடுக்கு முறையின் காரணமாக தமிழ் மக்களின் உரிமைப் போராட்டம் விடுதலைப் போராட்டமாக வடிவம் பெற்றது. இக்கொடிய யுத்த சூழ்நிலை தான் அன்றாடப் பிரச்சினைகளைத் தோற்றுவித்தது.

தமிழ்ப் பிரதேசங்கள் மீது போர்வாதிகளால் விதிக்கப்பட்ட பொருளாதாரத் தடைமூலம் உணவு, மருந்து மற்றும் நாளாந்த பாவனைப் பொருள்கள் அனைத்தும் தடைசெய்யப்பட்டன. இந்தத் தடை முற்றாக நீக்கப்படவில்லை. இன்னமும் தொடர்ந்து கொண்டே இருக்கிறது.

### எரிபொருளுக்கு பலத்த கட்டுப்பாடு

☆ இன்றும் எரிபொருள் விநியோகத்திற்கு இராணுவம் பலத்த கட்டுப்பாடுகளை விதித்துள்ளது. இது குடாநாட்டிற்குள் போக்குவரத்துப் பிரச்சினையை தோற்றுவித்துள்ளது. இது அன்றாடப் பிரச்சினை இல்லையா?

☆ குடாநாட்டிற்கு வெளியே சென்று வருவதற்கான போக்குவரத்துப் பிரச்சினை இன்றும் உள்ளது. இது அன்றாடப் பிரச்சினை இல்லையா?

☆ யாழ்போதனா வைத்தியசாலை உள்ளிட்ட ஏனைய சகல ஆதார வைத்தியசாலைகளிலும் மருந்துப் பொருள்களுக்கும் வைத்திய நிபுணர்களுக்கும் பலத்த பற்றாக்குறை நிலவிக்கொண்டே இருக்கிறது. இது அன்றாடப் பிரச்சினை இல்லையா?

### நீண்ட நேர மின்வெட்டு

☆ கடந்த ஐந்து வருடங்களாகியும் இன்னும் பல பகுதிகளுக்கு மின்சாரம் வழங்கப்படவும் இல்லை. ஏனைய பகுதிகளுக்கு நீண்ட நேரம் மின்வெட்டு அமுலில் உள்ளது. இது அன்றாடப் பிரச்சினை இல்லையா?

☆ குடாநாட்டை இராணுவம் ஆக்கிரமித்து ஐந்து வருடங்கள் ஆகியும் பல இடங்களுக்கு தொலைபேசி வசதிகள் இன்னும் வழங்கப்படவும் இல்லை. ஏனைய பகுதிகளுக்கும் வழங்கப்பட்டுள்ள தொலைபேசி இணைப்புக்கள் அடிக்கடி துண்டிக்கப்பட்டு வருவதுடன் சீரற்றும் காணப்படுகிறது. இது அன்றாடப் பிரச்சினை இல்லையா?

☆ குடாநாட்டில் இடம்பெயர்ந்து வாழும் மக்களுக்கு தரம் குறைந்த நிவாரணப் பொருள்களே வழங்கப்படுகின்றன. இது அன்றாடப் பிரச்சினை இல்லையா?

☆ பாடசாலை மாணவர்களுக்கான பாடப் புத்தகங்கள் விநியோகத்தில் நீண்டகால தாமதமும், சீருடை விநியோகத்தில் சீரற்ற முறைகளும் பின்பற்றப்படுகின்றன. இது அன்றாடப் பிரச்சினை இல்லையா?

### விவசாயிகள் பாதிப்பு

☆ ஊரடங்குச் சட்டம் நடைமுறையில் இருப்பதால் விவசாயிகள் தமது உற்பத்திப் பொருள்களை உரிய நேரத்தில் சந்தைப்படுத்த முடியாதுள்ளது. இது அன்றாடப் பிரச்சினை இல்லையா?

☆ குடாநாட்டுக்குள்ளேயே இராணுவத்தினரின் ஆக்கிரமிப்பிலுள்ளதும், ஆயுதமேந்திய அரசியல் கட்சிகளால் மக்களை அடக்கி ஆளும் பிரதேசங்களுக்குக் கூட, நினைத்த போது நினைத்த நேரத்தில் அவசிய தேவைகளுக்குக் கூட பிரயாணம் செய்ய முடியாத நிலை காணப்படுகிறது. இரவு நேர ஊரடங்கு காரணமாக எத்தனையோ கர்ப்பிணித் தாய்மார்கள் வீட்டிலேயே பிரவசம் நிகழ்ந்து இரத்தப் பெருக்கு காரணமாக இறந்துள்ளார்கள். எத்தனையோ நோயாளர்கள் இரவில் பயணிக்க முடியாத நிலையில் இறந்துள்ளார்கள். இது அன்றாடப் பிரச்சினை இல்லையா?

☆ கடற்றொழிலாளர்கள் தமக்கு வசதியான நேரத்தில் போதியளவு தூரம் சென்று, போதியளவு நேரம் மீன் பிடிக்க முடியாத நிலை காணப்படுகின்றது. இது அன்றாடப் பிரச்சினை இல்லையா?

☆ குடாநாட்டில் பகலில்கூட யுவதிகள் இன்று சுதந்திரமாக - அச்சமின்றி நடமாடமுடியாத நிலை காணப்படுகின்றது. இது அன்றாடப் பிரச்சினை இல்லையா?

☆ திருட்டுக்கள், களவுகள், கொலைகள், பெண்களைக் கடத்தல், கசிப்பு உற்பத்தி, வழிப்பறிக் கொள்ளைகள், பாலியல் வல்லுறவுகள், கோஷ்டி மோதல்கள், ஆபாசப்படங்கள் என்பன அதிகரித்துள்ளன. இவற்றை எவராலும் கட்டுப்படுத்த முடியாதுள்ளது. இது அன்றாடப் பிரச்சினை இல்லையா?

### குடாநாட்டில் கலாசாரச் சீரழிவு

☆ கலாசாரச் சீரழிவுகளால் எமது குடாநாட்டு மாணவர்களினது கல்வித்தரம் வீழ்ச்சியடைந்து செல்கின்றது. இது அன்றாடப் பிரச்சினை இல்லையா?

இத்தனை பிரச்சினைகளிலும் எது முழுமையாகவோ, முற்றாகவோ தீர்க்கப்பட்டது? எதுவும் தீர்க்கப்படவில்லை. மாறாக புதுப்புது வடிவில் அன்றாடப் பிரச்சினைகள் உருவாக்கிக் கொண்டுதான் இருக்கின்றன. எமது உரிமைப் பிரச்சினைகளுக்கு நிரந்தரத் தீர்வு காணப்படும் வரை இதனை எவராலும் தீர்க்கவே முடியாது. தீர்ப்பதாக வண்ண வண்ண போஸ்டர்கள் ஒட்டலாம்; 'கட்அவுட்'டுக்களைக் கீறிவைத்து மக்களை ஏமாற்றலாம்.

எனவே மக்களே சிந்தியுங்கள்; செயற்படுங்கள்; நிரந்தர சமாதான முயற்சியைக் குழப்பியடிக்க முயல்பவர்களை இனம்கண்டு அன்றாடப் பிரச்சினைகளுக்கு முக்கியத்துவம் கொடுக்காது அடிப்படை பிரச்சினைகளைத் தீர்க்க கூடியதான -

புலிகள் மீதான தடை நீக்கம் -

தமிழ் மக்கள் மீதான பொருளாதாரத் தடை நீக்கம் -

புலிகளுடன் பேச்சுக்களை ஆரம்பித்தல் -

என்ற விடயத்தில் எமது ஒற்றுமையை வெளிப்படுத்துவோம்.

தேர்தலில் அனைவரும் வாக்களிப்போம். ☆

# எந்தக் கட்சி ஆட்சிக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சேவைகளை ஆற்றி, பிரச்சினைகளைத் தீர்த்து வைக்கமுடியும் என நம்புகின்றோம்.

எமது இனத்தின் சுபீட்சத்துக்காக எந்தக் கட்சியுடனும், அது ஐதே.கட்சியாக இருந்தாலும் சரி இணைந்து எம் மக்களின் தேவைகளுக்காகப் பேரம் பேசுவோம். நாம் இவற்றை அரசியல் காரணங்களுக்காகச் செய்யவில்லை. நான் அமைசசர் பொறுப்பை ஏற்றுக்கொண்டது ஆடம்பரத்துக்காகவோ அல்லது புகழுக்காகவோ அல்ல. அதிகாரத்துக்காகத்தான்; நான் அதிகாரம் என்பது அரசியல் அதிகாரத்தைத்தான். இந்த அதிகாரத்தின் மூலமே இன்று எவ்வளவோ விடயங்களை நிறைவேற்றக் கூடியதாகவுள்ளது.

நான்கு கட்சிகள் ஏன் கூட்டுச் சேர்ந்துள்ளன? ஈ.பிடி.பியின் அரசியல் பலம் மற்றும் எமது கட்சிக்கு ஆதரவாக மக்கள் அணிதிரள்வது ஆகியவற்றை உடைக்க வேண்டும் என்பதற்காகத்தான் கூட்டமைப்பே தவிர, மக்களின் அபிலாசைகளுக்காக இல்லை. எதிர்ப்பு அரசியல் என்பதன் மூலம் எதிர்க்க வேண்டிய விடயங்களை எதிர்க்க வேண்டும். பெற வேண்டியவற்றைப் பெறவேண்டும். அதைவிடுத்து நாங்கள் முன்வைத்த இடைக்கால நிர்வாகம் தொடர்பான யோசனைகளைப் புறந்தள்ளுவது அல்ல. த.வி.கூட்டணி அதனைப் புறந்தள்ளிவிட்டது. தமது அபிப்பிராயம்தான் மக்களின் அபிப்பிராயம் என்றும் கூறிவிட்டது. இதன் காரணமாக எமது யோசனைகள் கைவிடப்பட்டுவிட்டன.

1998 ஆம் ஆண்டு அரசியல் தீர்வுத்திட்டம் பற்றி 19 பக்கங்களில் அரசுக்கு சமர்ப்பித்தோம். ஆனால் கூட்டணியோ மூன்றரை வரிகளில் மட்டும் சமர்ப்பித்தது.

பொ.ஐ.முன்னணி அரசு பெரும்பான்மைப் பலத்தை இழந்த சந்தர்ப்பத்தில் ஜே.வி.பி. ஆதரவு கொடுத்ததன் மூலம் தனது காரியங்களைச் சாதித்துக் கொண்டது. இதை ஏன் தமிழ்க் கட்சிகள் பயன்படுத்தவில்லை? அப்படிப் பயன்படுத்தியிருந்தால் முக்கியமான நான்கு கோரிக்கைகளை முன்வைத்திருக்கமுடியும்.

உடனடி யுத்தநிறுத்தம், விடுதலைப் புலிகளுடன் பேசுதல், கௌரவமான - விரைவான - தீர்வு, மக்களின் அன்றாடப் பிரச்சினைகளுக்கு உடனடித் தீர்வு போன்ற நான்கு கோரிக்கைகளை முன்வைத்து அரசுக்கு ஆதரவு வழங்கியிருக்கலாம். ஆனால் அதைச் செய்வதற்கு சுயநல அரசியல் அவர்களுக்கு இடம் கொடுக்கவில்லை.

"கடந்த காலங்களில் பல தமிழ்க் கட்சிகள் செய்யாதவற்றை, செய்ய விரும்பாதவற்றை, செய்ய முடியாதவற்றை நாம் செய்துள்ளோம்; செய்து வருகின்றோம். எமது தற்போதைய இலக்கு பொதுத்தேர்தலில் யாழ். மாவட்டத்தில் 9 இடங்களையும் கைப்பெற்றுவதுதான். எமக்குக் கிடைக்கும் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி எந்தக் கட்சியுடன் ஆட்சி அமைத்தாலும் எமது மக்களின் பிரச்சினைகளுக்கு எம்மால் இயன்ற வரையும் செயலாற்றுவோம் - என்றார்.

ஈ.பி.டி.பியின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் கே.வி.குகேந்திரன் தெரிவித்ததாவது:-

காணாமற்போனோர் பாதுகாவலர் சங்கத்தை உருவாக்கியவர்கள் நாங்கள்தான். ஆனால் இன்று யார் யாரோ எல்லாம் அதற்கு உரிமை கோருகிறார்கள்; அபிப்பிராயம் தெரிவிக்கிறார்கள். அவர்களின் பிரச்சினைகளை வெளி உலகிற்குத் தெரியப்படுத்தவே சங்கமொன்றை உருவாக்கினோம். சங்கம் உருவாக்கப்பட்டதன் காரணமாக தற்போது கைது செய்யப்படுதல் மிகவும் குறைந்துள்ளது. அத்துடன் காணாமற்போனோரின் குடும்பங்களுக்கு எங்களால் இயன்ற உதவிகள், வேலை வாய்ப்புக்கள் ஆகியவற்றை வழங்கி வருகின்றோம். இதுதெரியாதவர்கள் எம்மைப் பற்றிப் புலம்பித்திரிகிறார்கள்.

தீவகத்தைப் பற்றி பல்வேறுபட்ட கருத்துக்கள் ஒவ்வொரு கட்சிகளாலும் தெரிவிக்கப்படுகின்றன. ஆனால் அங்குள்ள உண்மையான நிலைமையை நீங்களும் சென்று பார்க்கலாம். நெடுந்தீவைப் பழுதாக்கியது பல்கலைக்கழக மாணவர்கள்தான். அங்கு சுற்றுலா என்ற போர்வையில் சென்று திண்டு, குடித்துவிட்டு வேறு எதை எதையோ எல்லாம் செய்துவிட்டு வருகிறார்கள். அந்த நெடுந்தீவில் நாங்கள் செய்த வேலைத் திட்டங்களின் காரணமாகவே அவர்கள் சென்று வருகிறார்கள். பின்பு பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் என்ற பெயரில் அறிக்கைகள் விடுகிறார்கள் - என்றார்.

முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரான எஸ்.தவராஜா குறிப்பிடுகையில் -

வீர வசனங்கள் பேசி எமக்குக் கிடைக்க வேண்டியவற்றை கிடைக்காமல் செய்வதுதான் தமிழ்க் கட்சிகளின் வேலை. தீவகம் பற்றி மகேஸ்வரன் கூறியது எல்லாம் வெறும் புரளி. அவர் ஒரு புளுகு மூடை. எமது அமைச்சரின் மறைமுகமான அழுத்தத்தின் காரணமாகவே அதிகளவு மாணவர்கள் பல்கலைக்கழகத்துக்கு உள்வாங்கப்பட்டனர். இதை விடுத்து ஒருசில மாணவர்கள் ஒன்றியம் என்ற பெயரில் அறிக்கை விடுவது கெட்டித்தனமான செயல் அல்ல - என்று தெரிவித்தார்.

பத்திரிகையாளர் மாநாட்டில் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரான என்.சிவதாசன், வேட்பாளர்களான துரைராஜா பாஸ்கரன், கந்தசாமிஐயர் பாலநடராஜ ஐயர், கனகரட்ணம் மணிபல்லவராஜன் ஆகியோரும் கலந்து கொண்டனர்.

(10-9)

# திருநெல்வேலி வாசியை தொடர்ந்து விளக்கமறியலில் வைக்க உத்தரவு

பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தன் கீழ் கைது செய்யப்பட்ட - திருநெல்வேலியைச் சேர்ந்த மகேந்திரநாதன் சங்கரிடம் இருந்து மீட்கப்பட்டதாகத் தெரிவித்து ஊரெழு இராணுவத்தினரால் பொலீஸாரிடம் ஒப்படைக்கப்பட்டிருந்த 'ஹைஏஸ்' வான் நேற்று யாழ்.நீதிவான் நீதிமன்றத்தால் உரிமையாளரிடம் ஒப்படைக்கப்பட்டது.

நேற்று யாழ்.நீதிவான் நீதிமன்றில் நடைபெற்ற இந்த வழக்கு விசாரணைகளின்போது சந்தேகநபரான சங்கரின் சார்பில் சட்டத்தரணி அப்பாத்துரை விநாயகமூர்த்தி ஆஜரானார்.

இந்த வழக்கின் சான்றுப் பொருளாக நீதிமன்றில் ஒப்படைக்கப்பட்டுள்ள வாகனத்துக்கும் சந்தேகநபருக்கும் எந்தவித தொடர்பும் இல்லை என்றும் -

இந்த வாகனத்தை ஊரெழு இராணுவத்தினர் நெல்லியடியைச் சேர்ந்த சின்னையா செல்வராஜா என்பவரிடம் இருந்து கைப்பற்றி பொலீஸாரிடம் ஒப்படைத்திருந்தனர் என்றும் -

நீதிமன்றில் முற்படுத்தப்பட்ட இந்த வாகனத்தை சந்தேகநபர் விடுதலைப் புலிகளின் பணத்தில்தான் வாங்கினார் என்ற குற்றச்சாட்டுக்கு எந்தவித ஆதாரமும் இல்லை என்றும் - சந்தேகநபர் சார்பில் ஆஜரான சட்டத்தரணி நீதிமன்றில் வாதிட்டார்.

வாகன உரிமையாளரான சின்னையா செல்வராசாவிடம் 3 லட்சம் ரூபா பிணைமுறி நிறைவேற்றி, அத்தோடு இந்த வழக்கு விசாரணை முடியும்வரை வாகனத்தை அவர் விற்கவோ, கைமாற்றவோ கூடாது என்ற நிபந்தனையுடன் வாகனத்தை அவரிடம் கையளிக்குமாறு நீதிவான் ஆர்.ரி. விக்னராஜா உத்தரவிட்டார்.

இதேவேளை -

சங்கரின் வைத்திய அறிக்கை உயர்நீதிமன்றுக்கு கிடைக்காத காரணத்தால் உயர்நீதிமன்றில் தாக்கல் செய்யப்பட்டுள்ள அடிப்படை மனித உரிமை மீறல் விசாரணை எதிர்வரும் டிசெம்பர் மாதம் 11ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது என்று நீதிமன்றின் கவனத்துக்குக் கொண்டு வரப்பட்டது.

இதனை அடுத்து யாழ்.போதனா வைத்தியசாலை சட்ட வைத்திய அதிகாரிக்கு சந்தேக நபரின் சட்ட வைத்திய அறிக்கையை உடனடியாக உயர் நீதிமன்றுக்கு அனுப்பி வைக்குமாறும் அதன் பிரதியை யாழ்.நீதிவான் நீதிமன்றுக்கு அனுப்பி வைக்குமாறும் அதுவரை சந்தேகநபரை விளக்கமறியலில் வைக்குமாறும் நீதிவான் உத்தரவிட்டார்.

(க-6)


## ஆறாத துயரத்தில் ஆறு ஆண்டுகள்

மழலை மொழியுடன்: 10 ★ 06 ★ 1929



கந்தன் கழலுடன்: 29 ★ 10 ★ 1995

### அமரர் ஷண்முகரத்னம் குமரேசன்

(முன்னாள் விரிவுரையாளர்
அரசினர் ஆசிரிய பயிற்சிக்கலாசாலை கோப்பாய்)

திதி: ஸ்கந்த ஷஷ்டி

சைவமுந் தமிழும் சமயாசாரமும் சாற்றிடு வடமொழியும்
கைவரப் பெற்றவர் கவிகலை சந்தமும் ஷண்முக குமரேசன்
ஐப்பசித் திங்களில் அருட்பதம் பெற்றார் அறுபத்தாறகவையிலே
ஐயிருவிரல் தொழ அஞ்சலி செய்த நம் அவனியில் மறவாது

மணியகாரன் ஒழுங்கை
கொக்குவில்.

(C/19386)

மனைவி,
பிள்ளைகள்.

# ஆயிரத்தை எட்டிய தேர்தல் வன்முறைகள்

கொழும்பு,நவ.21

நாட்டில் தேர்தல் வன்முறைகள் ஆயிரத்தை எட்டிவிட்டன. நேற்றுப் பகல் வரை 975 வன்முறைகள் நடைபெற்றிருக்கின்றன.

நேற்றுக்காலையுடன் முடிவுற்ற 24 மணிநேரத்தில் மட்டும் பிரதான கட்சிகளால் 38 முறைப்பாடுகள் தொவிக்கப்பட்டன.

சிலாபம் பொலீஸ் பகுதியிலேயே வன்முறைகள் எண்ணிக்கையில் தொடர்ந்தும் முதலிடம் வகித்து வருவது குறிப்பிடத்தக்கது. (க)

## நெடுமாறன் கைது

சென்னை,நவ.21

'போடோ' சட்டத்தை எதிர்த்து சென்னையில் அரச விருந்தினர் மாளிகைக்கு முன்னால் சங்கிலிப் போராட்டம் நடத்திய தமிழ்தேசிய இயக்கத்தின் தலைவர் பழ.நெடுமாறன் உட்பட 26 பேரை பொலீஸார் கைதுசெய்தனர்.

(க-9)

## புனாவையில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

திருத்தும் பிரிவின் பொறுப்பதிகாரியான சப் இன்ஸ்பெக்டர் நோனிஸ், ஜீப்பின் சாரதி சுபசிங்க, மற்றொரு பொலீஸ் கான்ஸ்டபிள் ஆகிய மூவரும் கொல்லப்பட்டனர்.

அந்த நேரம் வீதியால் சென்ற பெண் ஒருவர் காயம் அடைந்தார். அவர் அநுராதபுரம் ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டுள்ளார். (உ-9)

## ஆர்ப்பாட்டம்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வேட்டுக்களுக்கே மூவர் இரையாகினர். 18பேர் காயமடைந்தனர். மார்க்கஸ், பிறியலதா, சுனில் என்ற பெயருடைய மூவரே பலியாகினர்.

காயமுற்ற 18 பேரில் படுகாயமடைந்த நிலையில் இருந்த ஐவர் நேற்றிரவு கொழும்பு தேசிய ஆஸ்பத்திரிக்கு எடுத்து வரப்பட்டனர். இவர்களின் நிலைமை மோசமாக இருப்பதாக ஆஸ்பத்திரி வட்டாரங்கள் தெரிவித்தன.

பொலீஸார் ஆர்ப்பாட்டக்காரரைக் கலைக்க வானத்தை நோக்கியே சுட்டனர் என்றும் அவ்வேளை சிவில் உடையில் நின்ற ஆயுதக் கோஷ்டி ஒன்றே மீனவர்களை நோக்கிச் சுட்டது என்றும் பொலீஸார் தரப்பில் கூறப்பட்டது.

ஆனால் பொலீஸ்மா அதிபர் ஆயுதக் கோஷ்டி துப்பாக்கிப் பிரயோகம் செய்தது என்பதை மறுத்துள்ளார்.

துப்பாக்கித் தாக்குதலை நடத்தியவர்கள் ஆயுதக் கோஷ்டி என்றால் அந்தக் கோஷ்டியினர் யார்? பொலீஸாருக்குத் தெரியாமல் எவ்வாறு ஓர் ஆயுதக் கோஷ்டி செயற்பட முடியும்? - என்று ஐ.தே.கட்சியின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரும் அமைசசருமான ஜோன் அமரதுங்க பொலீஸாரிடம் கேள்வி எழுப்பியுள்ளார்.

(க-3)

## குடாநாட்டில் நேற்று தபால் மூல வாக்களிப்பு

யாழ்ப்பாணத் தேர்தல் மாவட்டத்தில் நேற்று நடைபெற்ற தபால்மூல வாக்களிப்பில் 99 வீதமான வாக்காளர்கள் வாக்களித்துள்ளதாக யாழ். அரச அதிபரும் தெரிவத்தாட்சி அலுவலருமான க.சண்முகநாதன் தெரிவித்தார்.

தபால் மூல வாக்களிப்பு நேற்று குடாநாட்டில் எதுவித அசம்பாவிதங்களும் இன்றி சுமுகமாக நடைபெற்றதாகவும் மேலும் வாக்களிக்க வேண்டியுள்ள வாக்காளர்களும் பெரும்பாலும் இன்று வாக்களிப்பார்கள் என்று தாம் எதிர்பார்ப்பதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். (க-6)

## பொலீஸாரின் ஷெல்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சின்னத்தம்பி செல்லத்தம்பி (60 வயது), அவரது மனைவி பூரணம் (வயது 54), பத்மநாதன் சுரேஷ் (11 வயது) ஆகிய மூவர் உட்பட மற்றொரு பெண்ணும் இந்தச் சம்பவத்தில் உயிரிழந்திருக்கின்றனர். உடல் முழுவதும் சிதறிய அந்தப் பெண் யார் என்று இன்னும் அடையாளம் காணப்படவில்லை.

உயிரிழந்த பத்மநாதன் சுரேஷ் என்ற சிறுவனின் தாயாரே உடல் சிதறிப் பலியாகியுள்ளார் என்று ஒரு தகவல் தெரிவித்தது. படுகாயமடைந்த 10 பேரும் மட்டக்களப்பு ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

அவர்களின் விவரம் வருமாறு:- குமாரசாமி சசிகுமார் (வயது 22), சின்னத்தம்பி காளியம்மா (40 வயது), கதிர்காமத்தம்பி மாலா (14 வயது), செல்லத்தம்பி செல்வி (30 வயது), செல்லத்தம்பி சிவானந்தராசா (27 வயது), குழந்தைவேல் விஜி (20 வயது), கே.பிறேமலதா (20 வயது), கே.சுமதி (17 வயது), ரி.வசந்தி (24 வயது), கே.கருணையம்மா (48 வயது).

இவர்கள் அனைவரும் ஏறாவூர் நான்காம், ஐந்தாம் குறிச்சியைச் சேர்ந்த பொதுமக்கள் என்று தெரிவிக்கப்பட்டது. (க-3-9-21)


எமது புதிய வீடியோ CD வெளியீடுகள்

❖ சிட்டி தாதா
❖ பொன்னான நேரம்
❖ பூவின் ராகம்

பிரதிகள் உடன் பெறலாம்.
புதிய போஸ்ரர் விற்பனைக்கு உண்டு.

விஷ்ணு வீடியோ
K.K.S. றோட், கோண்டாவில். (94729)

புதிய வீடியோ CD வெளியீடுகள்

☆ பொன்னான நேரம்
☆ சிட்டி தாதா
☆ சிட்டி
☆ பூவின் ராகம்

பிரதிகள் உடன் பெறலாம்.

வீடியோ விமல்
யாழ்ப்பாணம். (C/19388)

எமது புதிய வீடியோ CD வெளியீடு

✦ பொன்னான நேரம்
✦ பூவின் ராகம்
✦ சிட்டி தாதா
✦ சிட்டி
✦ துணையிருப்பாள் பண்ணாரி

பிரதிகள் உடன் பெற்றுக்கொள்ளலாம்.

அல்டி எலக்ரோனிக்ஸ்
15,ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம். (C/19389)

Computer Courses

DIPLOMA IN MICROSOFT OFFICE
- Introduction to Computer
- Ms Word 2000 / XP
- Ms Excel 2000 / XP
- Ms Access 2000 / XP
- Ms Power Point 2000 / XP
- Photo Draw 2000 / XP

Full Syllabus Coverd
Duration: 6 Months
Special Offer Rs. 1900/=

DIPLOMA IN COMPUTER PROGRAMMING
- Introduction to Computer
- Programming Techniques
- Ms Word 2000 / XP
- Ms Excel 2000 / XP
- Ms Windows me
- Visual Basic 6.0
- C/C++
- HTML Programming
- E-Mail & Internet

Full Syllabus Coverd
Duration: 9 Months
Special Offer Rs. 3250/=

பயிற்சிகள் ஆரம்பம்
24.11.2001 11a.m.

Note:-
இப்பிரிவுக்கு மட்டும் பதிவுக்கட்டணம் அறவிடப்படமாட்டாது.

CERTIFICATE COURSES

Ms Word 2000 / XP
Ms Excel 2000 / XP
Ms Access 2000 / XP
Pagemaker 6.5
Auto Cad 2000i
(Each 3 Months)

Visual Basic 6.0
Corel Draw 10.2
Pascal
HTML
Java
C/C++
(Each 4 Months)

JAFFNA TECHNICAL INSTITUTE
No.07, Palaly Road, Jaffna. (94707)

பாராட்டி வாழ்த்துகின்றோம்

❊❊ அச்சுவேலி - மக்கள் வங்கி முழுமையான கிளை திறப்பு விழா ❊❊

இன்று (21.11.2001) புதன்கிழமை முதல் தனிக் கிளையாக இயங்கவிருக்கும் அச்சுவேலி மக்கள் வங்கிக் கிளை மேலும் மேலும் வளர்ச்சியடைந்து மக்களின் தேவைகளையும் பூர்த்தி செய்யக்கூடியவகையில் அமைய வேண்டுமென்று வாழ்த்துகிறோம்.

யாழ்நகருக்கும் நெல்லியடி நகருக்கும் இடைப்பட்ட வலி.கிழக்குப் பிரதேசத்தில் உள்ள மக்களின் வங்கித் தேவைகளை 1998ஆம் ஆண்டில் உணர்ந்த வடபகுதி வங்கி நிர்வாகமும், வலி.கிழக்கு வாழ் மக்களும் எடுத்த அயராத முயற்சியினால் 2000ஆம் ஆண்டின் முற்பகுதியில் அச்சுவேலியில் ஒரு பூரணமான கிளை அமைத்து இயங்க மக்கள் வங்கியின் கொழும்புத் தலைமையகம் அனுமதி வழங்கியபோதும், யாழ்.குடாநாட்டில் அவ்வேளையில் நிலவிய போர்ச்சூழ்நிலை காரணமாக இக்கிளை ஒரு நீடித்த கருமபீடமாக ஒக்ரோபர் 2000இல் இயங்க ஆரம்பித்தது.

வலி.கிழக்கு வாழ் மக்களுக்கு சகல வங்கி வசதிகளையும் விஸ்தரிக்கும் இந்நாளில் இவ்வங்கிக் கிளையின் தேவையை உணர்ந்து அதை ஆரம்பத்தில் இயங்க வைத்ததில் பெரும்பங்காற்றிய

திரு.க.திருநாவுக்கரசு
(முன்னாள் வடவலய உதவிப் பொதுமுகாமையாளர்)
திரு.கிங்ஸ்லி இராஜநாயகம்
(முன்னாள் உதவிப் பிரதேச முகாமையாளர்)
திரு.மு.சிவநேசன்
(அச்சுவேலிக் கிளை முகாமையாளர்)

மற்றும் வலிகாமம் கிழக்கு பிரதேச சபை உட்பட அனைத்து வலி.கிழக்கு பொது அமைப்புக்களையும் மற்றும் நலன் விரும்பிகளையும் குறிப்பாக அச்சுவேலி வாழ்மக்களையும் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

இலங்கை வங்கி ஊழியர் சங்கம்,
யாழ்.மாவட்டக் கிளை.
(94703)

ஐ.தே.கட்சியின் தேர்தல் பிரசாரக் கூட்டம்


இடம் :- நாவாந்துறை சந்தைத் திடல்
காலம் :- இன்று பிற்பகல் 3 மணி

இந்து, கிறிஸ்தவ மதப் பெரியார்களின் முன்னிலையில் கட்சியின் 10ஆவது பிரசாரக் கூட்டம் நடைபெறும்.

முதன்மை வேட்பாளர்
தி.மகேஸ்வரன்
உட்பட பலர் உரையாற்றுவர்.

குறிப்பாக மீனவர் சமூகத்தினர் இக்கூட்டத்தில் பங்குபற்றுவதன் மூலம் தங்கள் பிரச்சினைகள் தொடர்பாக ஐ.தே.கட்சியின் எதிர்காலத் திட்டங்கள் குறித்து கலந்துபேசி அறிந்து கொள்ளமுடியும்.

ஐக்கிய தேசியக் கட்சி,
யாழ்.மாவட்டம்.
(C/19392)



கோப்பாய் கோமான் வன்னியசிங்கம், நல்லூர் ஆலால்.
இவர்களின் மண்ணில். மண்ணின் மைந்தன்.
தமிழரின் உரிமை மீட்க...
ஆதரிப்பீர் தமிழர் கூட்டணியை!
சுரேஷ் பிரேமச்சந்திரன்
தமிழர் விடுதலைக் கூட்டணி
சின்னம் | ☀ | X
இலக்கம் | 4 | X



உண்மையான சுதந்திரமும், சகோதரத்துவமும்,
சமாதானமும் மலர மீன் சின்னத்துக்கு
வாக்களியுங்கள்
தம்பிராஜா சுபத்திரன் (றொபேட்)
சுயேச்சைக்குழு | X
ஈ.பி.ஆர்.எல்.எவ்.


இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 21.11.2001இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.